# வருவாய்த் துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2014 – 2015

மானியக் கோரிக்கை எண்.41 – வருவாய்த் துறை

மானியக் கோரிக்கை எண்.51 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

ஆர்.பி. உதயகுமார்
வருவாய்த் துறை அமைச்சர்

தமிழ்நாடு அரசு
2014

# பொருளடக்கம்


| பொருள் | பக்கங்கள் |
|---|---|
| முன்னுரை | **1-11** |
| வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு | **12-82** |
| நில நிருவாகம் | **83-109** |
| நிலச் சீர்திருத்தம் | **110-143** |
| நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி | **144-153** |
| நிலஅளவை மற்றும் நிலவரித் திட்டம் | **154-197** |
| முடிவுரை | **198-199** |

# வருவாய்த் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2014–15

"*அனைத்து துறைகளுக்கும் தாய்த் துறையாகவும், அரசாங்கத்தின் முதுகெலும்பாகவும் ஏழை, எளிய மக்களின் துயரங்களைக் களைந்து அவர்களை ஏற்றிவிடும் ஏணியாகவும் விளங்குகின்ற வருவாய்த்துறையின் செயல் திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் எடுத்து வருகிறது.*"

*மாண்புமிகு முதலமைச்சர்*

## 1.1 முன்னுரை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியது போல வருவாய்த் துறையானது அரசின் முதுகெலும்பாகத் திகழ்வது மட்டுமல்லாமல் பெருமிதம் கொள்ளும் வகையில், நிருவாக அமைப்பில் மிகவும் பழமை வாய்ந்த துறையாகக் கருதப்படுகிறது. மாவட்ட நிருவாகத்தின் முக்கிய மையப் புள்ளியாக மாவட்ட ஆட்சியரகம் திகழ்கிறது. இதில் பெரும்பான்மையான அலுவலர்கள் வருவாய்த் துறையைச் சார்ந்தவர்கள். வருவாய்த் துறையானது, தனது பணியினை பிற துறைகளுக்கு பகிர்ந்தளிப்பதோடு மட்டுமல்லாமல் அனைத்து துறைகளுக்கும் தாய்த்துறையாக விளங்குகிறது.

## 1.2 வரலாற்றுக் கண்ணோட்டம்

பழங்காலத்தில் மன்னருக்கு நில வருவாயே அரசின் பெரிய ஆதாரமாக இருந்தது. வருவாய் வசூலிப்பதில், இன்றுள்ள வருவாய் நிருவாகத்தைப் போல மௌரியர் மற்றும் குப்தர் ஆட்சிக் காலத்தில் சம்பள அலுவலர்களால் வருவாய் வசூலிக்கப்பட்டது. மௌரியர் மற்றும் குப்தர் காலத்திற்குப் பின்னர் பிரம்மதேயம், தேவதானம் மற்றும் அக்ரஹார

நிலங்களை தானமாகப் பெற்றவர்கள் மூலமாக அரசிற்கு வருவாய் பெறப்பட்டது. தானம் பெற்ற நிலமானிய இடைத்தரகர்கள் தங்களுடைய வருவாயில் ஒரு பகுதியை அரசிற்கு வழங்கினர். முந்நூறு ஆண்டுகளுக்கு மேல் சுல்தானியர்கள் ஆட்சிக் காலத்தில் இடைத்தரகர்களுக்கு பதிலாக வருவாய் வசூலிப்பவர், ஜாகிர்தார், சுபேதார் மற்றும் இனாம்தார் மூலமாக வருவாய் வசூல் செய்யப்பட்டு மன்னருக்கு வழங்கப்பட்டது. வருவாய் நிருவாகத்தின் நடைமுறை முதன்முதலாக செர் ஷா சூரி (1540-45) அவர்களால் தொடங்கப்பட்டது. முகலாய மன்னர் அக்பர் (1556-1605) காலத்தில் வருவாய் நிருவாக நடைமுறை தொடரப்பட்டு மேம்படுத்தப்பட்டது. செர் ஷா சூரியின் அரசவையில் மிகச் சிறந்த வருவாய் வல்லுநராக விளங்கிய தோடர் மால், தனது பணியினை அக்பர் காலத்திலும் தொடர்ந்து செயல்படுத்தி, அவ்வரசிற்கு வருவாய் வசூல் மற்றும் நிலஅளவை முறையை ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாமல், அவருடைய சமநிலை அணுகுமுறையானது மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும் அதே சமயம் அரசிற்கு வருவாய் ஈட்டி தருவதிலும் இன்றளவும் நினைவில் நிற்கிறது. முகலாயர் காலத்தில் வருவாய் நிருவாகம்

பல்வேறு வகுப்பினர்களால் குறிப்பாக அரசவை நிருவாகத்தில் உள்ள நேரடி அலுவலர்கள், மாகாண ஆளுநர், அமீல்ஸ் அல்லது கனுான்கோஸ், ஜாகிர்தார்ஸ் (வருவாய் ஒப்படைதாரர்கள்) இவர்களுடைய அலுவலர்கள் மற்றும் முகவர்கள், விவசாயிகளின் பிரதிநிதியான கிராம தலைவர் மற்றும் சௌதிரீஸ் ஆகியோர்களை கொண்டிருந்தது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் நேர்த்தியான வழிமுறையில் நிலையான நிலவரித்திட்டம் (காரன்வாலிஸ் – 1793) மற்றும் ரயத்துவாரி (சர் தாமஸ் மன்றோ – 1802) முறைப்படுத்தப்பட்டது. காலனி ஆதிக்கத்தின் போது அவர்களுடைய நாட்டின் நலன் கருதி நில வருவாய் வசூல் முறையில் எந்தவொரு பெரிய மாற்றத்தையும் ஏற்படுத்தாமல், விவசாயம் செய்யாத இடைத்தரகர்கள் என்றவொரு வகுப்பினை மேம்படுத்தினர். முகலாயர் காலத்தில் இருந்த வேளாண்மை அமைப்பினை பிரிட்டிஷ் அரசு பின்பற்றியது. ஏற்கனவே, பின்பற்றி வந்த நடைமுறையிலுள்ள நிலம் சம்பந்தமான கட்டமைப்புகளில் பிரிட்டிஷ் அரசு தங்களுடைய சமுதாய வழக்கம் மற்றும் அவர்களுடைய சட்டத்திற்கேற்ப மாற்றிக்கொண்டது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் வருவாய்த் துறையானது நிருவாகத்தின் அச்சாணியாக விளங்கியது.

மன்னர் போன்று கருதப்பட்ட மாவட்ட ஆட்சியரைச் சுற்றியே மாவட்ட நிருவாகமானது முழுமையாக இயங்கியது.

சுதந்திரத்திற்குப் பின்னர், வருவாய்த் துறையானது நிருவாகத்தின் அச்சாணியாக இருப்பினும், நிலவரி வசூல் குறைந்ததாலும் அரசானது நிலவரி வசூலை ஒரு முக்கிய வருவாய் ஆதாரமாகக் கருதவில்லை. இருப்பினும், அதே நேரத்தில் அரசு நிலத்தின் மதிப்பானது பன்மடங்காக உயர்ந்துள்ள போதிலும் அரசு நிலங்கள் அரிதாக காணப்படுகிறது. நிலம் ஒருங்கிணைப்பு தொடர்பான இனங்களில் வருவாய்த்துறையின் பங்களிப்பானது மிகவும் முக்கியத்துவம் அடைந்து வருகிறது.

## 1.3 துறையின் கட்டமைப்பு

வருவாய்த்துறை தனது கட்டுப்பாட்டின் கீழ் ஐந்து கிளைகளைக் கொண்டுள்ளது. அதாவது வருவாய் நிருவாக ஆணையரகம், நில நிருவாக ஆணையரகம், நிலச் சீர்திருத்த ஆணையரகம், நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரித்திட்ட ஆணையரகம் மற்றும் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரகம்.

வருவாய் நிருவாக ஆணையரகம், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் தலைமையின் கீழ் மாவட்ட வருவாய் நிருவாகம், பொது நிருவாகம், சமூக நல பாதுகாப்புத் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளித்தல் ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன. சாதிச் சான்றிதழ் வழங்குதல், தேசிய மக்கள் தொகை பதிவேடு தயார் செய்தல் மற்றும் விலையில்லா சேலை–வேட்டி வழங்கல், மின்விசிறி, மிக்சி, கிரைண்டர் வழங்கல் ஆகியவைகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நில நிருவாக ஆணையரகம், நில கையகப்படுத்துதல், நில உரிமை மாற்றம், பிற துறைகளுக்கு நில மாற்றம், நில ஒப்படை மற்றும் வீட்டு மனைப் பட்டா மற்றும் நிலப் பட்டா வழங்குதல் போன்ற பணிகள் கூடுதல் தலைமைச் செயலாளர்/ நில நிருவாக ஆணையரின் தலைமையின் கீழ் செயல்படுத்தப் படுகின்றன.

நிலச்சீர்திருத்தத் துறையின் கீழ் நிலச்சீர்திருத்தம், வேளாண்மை நில உச்சவரம்பு, குடிவாரச் சட்டம், வேளாண்மை பயன்பாட்டிற்காக உபரி நிலங்களை ஒப்படை செய்தல், உழவர் பாதுகாப்புத் திட்டம் ஆகிய பணிகள் முதன்மைச் செயலாளர்/நிலச் சீர்திருத்த ஆணையரின் தலைமையின் கீழ் செயல்படுத்தப் படுகின்றன.

நகர்ப்புற நில உச்ச வரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி ஆணையரகம், நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது.

நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரகம், நில அளவை, வருவாய் பதிவேடுகள் பராமரித்தல், நில ஆவணங்களை கணினி மயமாக்குதல், தொடு திரை தகவல் மேடை, பூகோள ரீதியான அளவைப் பணி போன்றவை நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரின் தலைமையின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

மாவட்ட அளவில் வருவாய் கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், நில அளவை உதவி இயக்குநர்கள், மண்டல துணை வட்டாட்சியர்கள், நில அளவை துணை ஆய்வாளர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிருவாக அலுவலர்கள் மற்றும் கிராம உதவியாளர்கள் இன்ன பிற அலுவலர்களின் உதவியுடன் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் தங்களது பணியினை செவ்வனே செய்து முடிக்கின்றனர்.

## 1.4 மாநிலத்தின் வருவாய் எல்லைகள்

மாநிலத்தில் தற்போது **32** மாவட்டங்கள், **79** வருவாய் கோட்டங்கள், **254** வட்டங்கள், **1,177** குறுவட்டங்கள் மற்றும் **16,710** வருவாய் கிராமங்கள் உள்ளன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

# அட்டவணை–1.1 மாவட்டத்தில் உள்ள வருவாய் கோட்டங்கள், வட்டங்கள்/குறு வட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்களின் விவரங்கள்

| வ. எண் | மாவட்டம் | வருவாய் கோட்டங்களின் எண்ணிக்கை | வட்டங்களின் எண்ணிக்கை | குறு வட்டங்களின் எண்ணிக்கை | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 2 | 3 | 15 | 175 |
| 2 | சென்னை | 0 | 10 | 40 | 55 |
| 3 | கோயம்புத்தூர் | 2 | 10 | 38 | 295 |
| 4 | கடலூர் | 3 | 8 | 32 | 883 |
| 5 | தருமபுரி | 2 | 5 | 22 | 470 |
| 6 | திண்டுக்கல் | 3 | 9 | 40 | 359 |
| 7 | ஈரோடு | 2 | 6 | 34 | 375 |
| 8 | காஞ்சிபுரம் | 4 | 11 | 67 | 1137 |
| 9 | கன்னியாகுமரி | 2 | 4 | 18 | 188 |
| 10 | கரூர் | 2 | 6 | 20 | 174 |
| 11 | கிருஷ்ணகிரி | 2 | 5 | 29 | 636 |
| 12 | மதுரை | 2 | 10 | 51 | 621 |
| 13 | நாகப்பட்டினம் | 2 | 8 | 31 | 523 |
| 14 | நாமக்கல் | 2 | 5 | 30 | 391 |
| 15 | பெரம்பலூர் | 1 | 4 | 11 | 152 |
| 16 | புதுக்கோட்டை | 3 | 11 | 44 | 757 |
| 17 | இராமநாதபுரம் | 2 | 7 | 38 | 400 |
| 18 | சேலம் | 4 | 11 | 44 | 631 |
| 19 | சிவகங்கை | 2 | 7 | 38 | 521 |
| 20 | தஞ்சாவூர் | 3 | 9 | 50 | 754 |
| 21 | நீலகிரி | 2 | 6 | 15 | 54 |
| 22 | தேனி | 2 | 5 | 17 | 99 |
| 23 | தூத்துக்குடி | 3 | 8 | 41 | 478 |
| 24 | திருச்சிராப்பள்ளி | 4 | 11 | 43 | 502 |
| 25 | திருநெல்வேலி | 3 | 11 | 60 | 559 |
| 26 | திருப்பூர் | 3 | 9 | 33 | 350 |
| 27 | திருவள்ளூர் | 4 | 11 | 52 | 705 |
| 28 | திருவண்ணாமலை | 2 | 8 | 52 | 1065 |
| 29 | திருவாரூர் | 2 | 7 | 27 | 500 |
| 30 | வேலூர் | 3 | 11 | 53 | 842 |
| 31 | விழுப்புரம் | 4 | 10 | 56 | 1459 |
| 32 | விருதுநகர் | 2 | 8 | 36 | 600 |
| | **மொத்தம்** | **79** | **254** | **1,177** | **16,710** |

மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டப் பேரவையில் தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 110 இன் கீழ் அறிவித்தவாறு அரசாணை 2(டி) எண்.176, வருவாய் [வ.நி–(1)]துறை, நாள் 15.06.2012 இன்படி 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையில் 4 லட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட வட்டங்களைக் கண்டறிந்து, புதிய வட்டங்கள் தோற்றுவிக்கப்படும் என ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாணையில், மாவட்ட ஆட்சியர்களால் அனுப்பப்படும் முன்மொழிவுகளை வருவாய் நிருவாக ஆணையர், நில நிருவாக ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையர் ஆகியோர் அடங்கிய உயர்மட்டக் குழு சீராய்வு செய்து, அனுப்பும் அறிக்கையின் அடிப்படையில் புதிய வட்டங்கள் உருவாக்கப்படும் என ஆணையிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் 2012–13 ஆம் நிதியாண்டில் 9 வட்டங்களும், 2013–14 ஆம் நிதியாண்டில்

25 வட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் சில புதிய வட்டங்கள் 2014–15 ஆம் ஆண்டில் உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 09.03.2012 அன்று அம்பத்தூர் கோட்டம் உருவாக்கப்பட்டது. 2013–14 ஆம் நிதியாண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஸ்ரீரங்கம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் இலுப்பூர் ஆகிய 2 கோட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

2014–15 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் மலைப்பாங்கான நீலகிரி மாவட்டத்தின் சிறப்புத் தேவைகளை நிறைவு செய்வதற்காக, உதகமண்டலத்தில் புதிய வருவாய்க் கோட்டம் உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# 2. வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு

## 2.1 வருவாய் நிருவாக பணியாளரமைப்பு

வருவாய் நிருவாகத் துறையில் கிராம உதவியாளர் முதல் துணை ஆட்சியர் வரை **50,000** க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அவற்றின் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை–2.1 வருவாய் நிருவாக பணியாளரமைப்பின் விவரங்கள்**

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | துணை ஆட்சியர் | 475 |
| 2 | வட்டாட்சியர் | 1,577 |
| 3 | துணை வட்டாட்சியர் | 1,981 |
| 4 | கண்காணிப்பாளர்/சுத்த நகல் கண்காணிப்பாளர்/ உதவி கணக்காளர் | 74 |
| 5 | உதவியாளர் (வருவாய் ஆய்வாளர் உட்பட) | 6,814 |
| 6 | இளநிலை உதவியாளர் | 2,991 |
| 7 | தட்டச்சர்/ சுருக்கெழுத்து தட்டச்சர்/ காசாளர்/ தொலைபேசி/நிகரி இயக்குபவர் | 1,356 |
| 8 | ஓட்டுநர் | 884 |
| 9 | பதிவுறு உதவியாளர்/ பதிவுறு எழுத்தர் / படிபெருக்கி இயக்குபவர்/ நகல் எடுப்பவர் | 840 |
| 10 | அலுவலக உதவியாளர் | 3,217 |
| 11 | காவலர் / மசால்சி / தோட்டக்காரர்/ துப்புரவாளர் | 586 |
| 12 | கிராம நிருவாக அலுவலர் | 12,614 |
| 13 | கிராம உதவியாளர் | 17,144 |
| | **மொத்தம்** | **50,553** |

## 2.2 வருவாய்த் துறை அலுவலகக் கட்டடங்கள்

மாவட்ட நிருவாகத்தில் வருவாய்த் துறை முக்கிய அங்கம் வகிப்பதால் வருவாய்த் துறைக்கு தேவையான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் வழங்குவது குறித்து அரசால் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிருவாக அலுவலர் ஆகியோருக்கான அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகள் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. ஆண்டுதோறும் புதிய மற்றும் கூடுதல் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டுவதற்கும் உள்கட்டமைப்பு வசதிகளை பெருக்குவதற்கும் மற்றும் பராமரிப்பிற்கும் நிதி ஒதுக்கீடு அரசால் செய்யப்பட்டு வருகிறது. புதிய முயற்சியாக மாநிலத்தில் உள்ள அனைத்து கிராம நிருவாக அலுவலர் அலுவலகங்களையும் புனரமைக்க அரசு முடிவு செய்து 2013–14 ஆம் ஆண்டில் 5,000 கிராம நிருவாக அலுவலர் அலுவலகங்களுக்கு ரூ. 25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.2.1 மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள்

மாநிலத்தில் உள்ள 32 மாவட்டங்களில், 31 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் அரசு கட்டடங்களில் இயங்கி வருகின்றன. திருப்பூர் மாவட்டத்தில் புதிய பெருந்திட்ட வளாகம் அமைக்கவும், தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டவும் ரூ.102.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டுமானப்பணி (structure) மற்றும் திருப்பூர் பெருந்திட்ட வளாகக் கட்டடம் கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளன. கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடப் பணிகள் பிப்ரவரி 2014 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் அடுத்த 24 மாதங்களில் முடிவடைந்துவிடும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் ஒருங்கிணைந்த அடுக்குமாடி அலுவலகக் கட்டடம் கட்டவும், நீலகிரி, கன்னியாகுமரி மற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் கூடுதல்

கட்டடம் கட்டுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டு ரூ.67.93 கோடி செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.2.2 வருவாய் கோட்ட அலுவலகக் கட்டடங்கள்

மாநிலத்தில் உள்ள மொத்தம் 79 வருவாய் கோட்ட அலுவலகங்களில், 74 வருவாய் கோட்ட அலுவலகங்கள் அரசு கட்டடங்களில் அமைந்துள்ளன. 2012 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அம்பத்தூர், 2013 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஸ்ரீரங்கம் மற்றும் இலுப்பூர் வருவாய் கோட்டங்களுக்கும் மற்றும் ஏற்கெனவே உருவாக்கப்பட்டு கட்டடம் கட்டப்படாமல் இருந்த தாம்பரம் மற்றும் உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டங்களுக்கும் புதிய வருவாய் கோட்ட அலுவலகக் கட்டடங்கள் ரூ.7.10 கோடி மதிப்பீட்டில் அமைத்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அம்பத்தூர் மற்றும் தாம்பரம் கோட்ட அலுவலகங்களின் கட்டுமான பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. ஸ்ரீரங்கம் வருவாய் கோட்ட அலுவலகக் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் சிதம்பரம் வருவாய் கோட்ட அலுவலகத்திற்கு ரூ.138.97 லட்சம் செலவில் பழைய கட்டடத்திற்கு பதிலாக புதிய கட்டடம் கட்டவும் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 2.2.3 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்

மாநிலத்தில் மொத்தம் உள்ள **254** வட்டாட்சியர் அலுவலகங்களில் **208** வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசு கட்டடங்களில் அமைந்துள்ளன. **2012–13** மற்றும் **2013–14** ஆம் ஆண்டில் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட **34** புதிய வட்டாட்சியர் அலுவலகங்கள் உள்பட **46** புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.**98.23** கோடி செலவில் நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. மேலும், கிருஷ்ணகிரி, சேலம், மேட்டூர் மற்றும் சிதம்பரம் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு ரூ.**8.08** கோடி செலவில் பழைய கட்டடங்களுக்கு பதிலாக புதிய கட்டடங்கள் கட்டவும் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. பல்வேறு நிலைகளில் இப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.2.4 வருவாய் ஆய்வாளர்களுக்கான கட்டடங்கள்

மாநிலத்தில் மொத்தமுள்ள **1,177** வருவாய் ஆய்வாளர்களில், **1,095** வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளன. **27** புதிய குடியிருப்புடன் கூடிய வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள் ரூ.**3.83** கோடி செலவில் கட்டுவதற்கு கடந்த

**2013–14** ஆம் ஆண்டில் அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதற்கான கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

### 2.2.5 கிராம நிருவாக அலுவலர்களுக்கான கட்டடங்கள்

மாநிலத்தில் உள்ள **12,614** கிராம நிருவாக அலுவலர்களில் **12,300** கிராம நிருவாக அலுவலர்களுக்கு அலுவலகங்கள் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் பழுதடைந்த கட்டடங்களுக்கு பதிலாக கட்டப்பட்ட கட்டடங்களும் உள்ளடங்கும். **231** கிராம நிருவாக அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் அமைத்துதர அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இப்பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. எஞ்சியுள்ள கிராம நிருவாக அலுவலர்களுக்கும் அலுவலகங்கள் அமைத்துத் தரும் பணி படிப்படியாக நிறைவேற்றப்படும்.

### 2.3 கிராம நிருவாகம்

**2012–13** ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் **1,870** கிராம நிருவாக அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். **2013–14** ஆம் ஆண்டிற்கு அரசாணை (நிலை) எண். **512,**

வருவாய் [பணி 7(1)] துறை, நாள் **11.12.2013** இன்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் **2,261** பணியிடங்களை நேரடியாக நிரப்பிட உத்திரவிடப்பட்டுள்ளது.

**2013–14** ஆம் ஆண்டிற்கு கருணை அடிப்படையில் **760** நபர்களுக்கு பணி நியமனம் வழங்க அரசால் ஒப்பளிப்பு ஆணை வழங்கப்பட்டு, இதில் **158** நபர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டு மீதமுள்ள பணியிடங்களை நிரப்பிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. காலியாக உள்ள கிராம நிருவாக அலுவலர்களின் பணியிடங்களை நிரப்புவதற்கு **2014–15**ஆம் நிதியாண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

### 2.3.1 கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினி, அச்சுப்பொறி மற்றும் கணினி பயிற்சி வழங்குதல்

**14.11.2011** அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், அனைத்து கிராம நிருவாக அலுவலர்களின் பணித்திறனை மேம்படுத்தவும், நலப்பணிகள் மக்களுக்கு எளிதில் சென்றடையவும் மடிக்கணினி மற்றும் அச்சுப்பொறி வழங்கப்படும் என அறிவித்தார்கள். அதன் முதற்கட்டமாக

7,787 கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினி, அச்சுப்பொறி மற்றும் மடிக்கணினி பயிற்சி தி/ள். எல்காட் நிறுவனம் மூலம் வழங்குவதற்காக அரசாணை (நிலை) எண்.87, வருவாய் [வ.நி.2(2)] துறை, நாள் 9.3.2012 இல் ரூ.22,48,88,560 நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேற்கண்ட அரசாணையின்படி 7,787 கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினி, அச்சுப்பொறி மற்றும் கணினி பயிற்சியும் அளிக்கப்பட்டது.

2014–15 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் 4,827 கிராம நிருவாக அலுவலர்களுக்கும் மடிக்கணினி, அச்சுப்பொறி மற்றும் கணினி பயிற்சி அளிக்கப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, மடிக்கணினி, அச்சுப்பொறி மற்றும் கணினி பயிற்சி ரூ.15.95 கோடி செலவில் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 2.4 நில வருவாய்

தமிழ்நாட்டில் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் நஞ்சை / புஞ்சை நிலங்கள் பின்வருமாறு உள்ளன:

| | | |
|---|---|---|
| நஞ்சை நிலங்கள் | : | **16,57,676** எக்டேர் |
| புஞ்சை நிலங்கள் | : | **67,80,080** எக்டேர் |

நிலவரி விதிப்பு முறை பின்வருமாறு கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

(அ) புஞ்சை நிலத்திற்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ.5, நஞ்சை நிலத்திற்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ.12 தீர்வையாக நிர்ணயிக்கப்படுகிறது.

(ஆ) ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து அனுபவித்து வருபவர்களிடம் எக்டேர் ஒன்றுக்கு ரூ.12 தீர்வையாக நிர்ணயிக்கப்படுகிறது.

(இ) பட்டா ஒன்றுக்கு குறைந்தபட்ச கேட்புத் தொகையாக ரூ.1 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நில வருவாய் வசூல், ஒவ்வொரு பசலி ஆண்டும் ஜூலை 1 ஆம் தேதி முதல் கணக்கிடப்படுகிறது. வருவாய்த் தீர்வாய நிகழ்ச்சி நிரல் மாவட்ட ஆட்சியர் ஒப்புதலுடன் மாவட்ட அரசிதழில் வெளியிடப்படுகிறது. வருவாய்த் தீர்வாய நிகழ்வின் மூலம் அனைத்து கிராம கணக்குகளும் முடிக்கப்படுகின்றன.

### 2.4.1 நிலவரி தள்ளுபடி

அரசாணை (நிலை) எண்.48, வருவாய் [பே.மே.3(1)] துறை, நாள் 13.02.2013 இல் சென்னை மாவட்டம் நீங்கலாக

இதர 31 மாவட்டங்களையும் வறட்சி மாவட்டமாக அறிவித்து, அம் மாவட்டங்களில் பசலி 1422 ஆண்டிற்கான நிலவரியை தள்ளுபடி செய்து ஆணை வெளியிட்டுள்ளது. அவ்வரசாணையின்படி, ரூ.5.58 கோடி நிலவரி தள்ளுபடி செய்ய செயற்குறிப்பு பெறப்பட்டுள்ளது. பசலி 1423 க்கான (2013–14 க்கான) உத்தேச நில வருவாய் கேட்பு ரூ.8.90 கோடியாகும்.

### 2.5 மக்கள் குறை தீர்க்கும் திட்டம்

ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் மாவட்ட ஆட்சியர்கள்/வருவாய் கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் தங்களது தலைமையிடத்திலேயே இருந்து பொது மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று அவர்களது குறைகளைத் தீர்த்து வருகின்றனர். இத்திட்டத்தினை சீராகவும், செம்மையாகவும் செயல்படுத்தவேண்டி அரசாணை (நிலை) எண் 364, வருவாய் [வ.நி.3(2)]துறை, நாள் 28.11.2011 இன்படி தற்போது மனுக்களை கோரிக்கையின் அடிப்படையில் வகைப்படுத்தி, மனு பெறப்பட்ட நாள் மற்றும் மனுதாரருக்கு முடிவான பதில் அனுப்பிய நாள் ஆகியவற்றை கணினியில் பதிவு செய்து, அனைத்து மாவட்டங்களிலும் ஒரே சீராகப் பயன்படுத்தும் வகையிலான பொதுவான மென்பொருள்

அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மென்பொருள் மூலமாக மனுக்களின் நிலையினை இணையதளத்தின் வழியாக அறியலாம்.

### 2.5.1 மின் ஆளுமை (e-governance)

அரசின் நலத்திட்டங்கள் அனைத்து பகுதிகளிலும் வாழும் சாதாரண குடிமக்களை சென்றடையும் வகையிலும், அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் திறமையுடன் கூடிய வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை உள்ளடக்கியதாக பொது சேவை இருத்தல் வேண்டும் என்பது தான் மின்ஆளுமையின் நோக்கமாகும்.

வருவாய்த்துறையில், மின்ஆளுமையின் மூலமாக வகுப்புச்சான்றிதழ்கள், இருப்பிடச்சான்றிதழ்கள், வருமானச் சான்றிதழ்கள், முதல்தலைமுறை பட்டதாரி சான்றிதழ்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண் என்பதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் கிருஷ்ணகிரி, கன்னியாகுமரி, அரியலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை, தூத்துக்குடி மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் முழுமையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிற மாவட்டங்களில் தகவல் தொழில்நுட்பத்துறை மற்றும் தேசிய

தகவல் மையத்தின் தொழில் நுட்ப உதவியுடன் மின்ஆளுமை படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அலுவலக நிருவாகப் பணிகளில் கடிதங்கள் பெறப்படுதல் முதல், தன்பதிவேடு பராமரித்தல், ஆய்வு ஆகியவற்றை மின் ஆளுமையின் கீழ் கொண்டு வரும் பொருட்டு வருவாய் நிருவாக ஆணையரகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள் ஆகியவை கணினி மயமாக்கப்பட்டு நிருவகிக்கப்படுகிறது.

### 2.5.2 மக்கள் தொடர்பு முகாம்

மக்கள் தொடர்பு முகாம் திட்டமானது மாவட்டத்தின் ஒரு குறிப்பிட்ட கிராமத்தில், மாதத்தின் இரண்டாம் புதன்கிழமை அன்று நடத்தப்படுகிறது. வட்ட தலைமையிடத்திலிருந்து மிகவும் தொலைவில் உள்ள கிராமங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நாளில் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் மாவட்டத்தின் அனைத்து முக்கிய அலுவலர்களும் அக்கிராமத்திற்கு சென்று குறைகளை நேரில் கேட்டறிந்து கிராம பொதுமக்களின் குறைகளுக்கு தீர்வு காண்கின்றனர். கிராம பொதுமக்களிடமிருந்து முகாம் நடைபெறும் நாளன்றுதான் பெரும்பான்மையான மனுக்கள் பெறப்படுவதாக கவனத்திற்குக்

கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை மேலும் பயனுள்ளதாகச் செயல்படுத்த அரசாணை (நிலை) எண்.244, வருவாய் [வ.நி.3(2)] துறை, நாள் 08.08.2011 இன்படி 1) தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) 2) வருவாய் கோட்டாட்சியர் 3) மாவட்ட ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மற்றும் 4) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஆகிய அலுவலர்கள் அடங்கிய குழு ஒன்றினை ஒவ்வொரு மாதத்தின் மூன்றாவது புதன்கிழமையன்று கிராமத்திற்கு அனுப்பி மனுக்களைப் பெற்று பதிவு செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு பெறப்படும் அனைத்து மனுக்களையும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து பல்வேறு துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைத்து, அடுத்த மாதத்தில் இரண்டாம் புதன்கிழமையன்று மாவட்ட ஆட்சித் தலைவர் கிராமத்திற்குச் செல்லும் நாளன்று மனுதாரர்களுக்கு முடிவான பதில் வழங்கிடும் வகையில் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது.

## 2.6 வருவாய் நிருவாகத்தின் மூலம் நடைமுறை படுத்தப்படும் திட்டங்கள்

### 2.6.1 அம்மா திட்டம்

"அம்மா திட்டம்" (அனைத்து கிராமங்களிலும் அடித்தட்டு மக்களுக்கு அதிக சேவையை வழங்குதல்) **(Assured Maximum Service to Marginal People in All Villages)** என்ற புதுமையான திட்டமானது 24.02.2013 முதல் வருவாய்த்துறையின் மூலம் துவக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தொலைதூர கிராமங்களில் வசிக்கும் மக்களும் மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் மக்களும் பயனடையும் வகையில் அம்மா திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அம்மா திட்டத்தின்படி ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள வருவாய் கிராமங்கள் அட்டவணையிடப்பட்டு, அக்கிராமங்களில் பிரதி வாரம் வெள்ளிக்கிழமை தோறும், வட்டாட்சியர் தலைமையிலான குழுவினர் முகாமிட்டு, அரசின் பல்வேறு நலத்திட்டங்களை பெறுவது குறித்த வழிகாட்டுதல்களை அளிப்பதோடு மட்டுமல்லாது, அவை மக்களுக்கு இருப்பிடத்திலேயே வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்

முதன்மை நோக்கமானது மக்களைத் தேடிச்சென்று அவர்களது குறைகளை அவ்விடத்திலேயே நிவர்த்தி செய்வதாகும். இத்திட்டத்தின் சிறப்பம்சம், முகாம் நடைபெறும் நாளில் பெறப்படும் மனுக்களில் தகுதியான மனுக்களின் மீது உரிய ஆணை உடன் பிறப்பிக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்படுகிறது. அம்மா திட்டத்தின் முதல் கட்டத்தில் மாநிலத்திலுள்ள அனைத்து வருவாய் கிராமங்களில் நடைபெற்ற **12,666** முகாம்களில் **33,13,792** மனுக்கள் பெறப்பட்டு, நிலுவையின்றி தீர்வு காணப்பட்டுள்ளது. அதே போன்று **04.10.2013** முதல் **18.07.2014** வரை நடைபெற்ற இரண்டாம் கட்ட **7,705** முகாம்களில் **8,16,700** மனுக்கள் பெறப்பட்டு, **7,18,086** மனுக்கள் தீர்வு காணப்பட்டுள்ளன. அம்மா திட்டத்தினை சிறப்பாகச் செயல்படுத்திய வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறைக்கு, மாண்புமிகு முதலமைச்சரின் மிகச்சிறந்த ஆளுமைக்கான விருது (Best Practices Award for improvement of Quality Delivery System Ensuring Good Governance) ஆகஸ்ட் **15, 2013** அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

### 2.6.2 சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்

சமுதாயத்தில் மிகவும் நலிவடைந்த பிரிவினரைச் சேர்ந்த வயது முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகள், விதவைகள், ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள், ஆதரவற்ற/ கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் 50 வயது மற்றும் அதற்குமேல் வயதுடைய திருமணமாகாத, உழைக்கும் திறனற்ற ஏழைப் பெண்கள் ஆகியோர்களுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் மாதாந்திர ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ், 2010–11 ஆம் வருடத்தில் மொத்தம் ரூ.1,207 கோடி பட்டுவாடா செய்யப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், பதவியேற்றவுடன் உடனடியாக சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகையை ரூ.500 லிருந்து ரூ.1,000 ஆக மே மாதம் 2011 முதல் உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

2013–14 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழான ஓய்வூதியம் நீங்கலாக, பல்வகையான சமூகப் பாதுகாப்பு

ஓய்வுதியங்களுக்கான நிதி ஒதுக்கீடு ரூ.**2,767.71** கோடியாகும். **2013–14** ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீட்டில் கூடுதலாக ரூ.**531.47** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்படி சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய திட்டங்களுக்கு மொத்த ஒதுக்கீடு ரூ.**3,299.18** கோடி ஆக உயர்த்தப்பட்டது. இதேபோன்று முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழும் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.**681.44** கோடி நிதியானது பின்னர் திருத்திய மதிப்பீட்டின்கீழ் கூடுதலாக ரூ.**221.28** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் மூலம் மொத்த ஒதுக்கீடு ரூ.**902.72** கோடியாக உயர்த்தப்பட்டது. இவ்வாறாக, **2013–14** ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் அனைத்து ஓய்வூதியங்களுக்கும் கூடுதலாக ரூ.**752.75** கோடி ஒதுக்கியதன் மூலம் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.**4,201.90** கோடி என்ற அளவிற்கு கணிசமாக உயர்த்தப்பட்டது. இந்த ஒதுக்கீடு **2010–11** இல் பட்டுவாடா செய்யப்பட்டதைக் காட்டிலும் ஏறத்தாழ ரூ.**3,000** கோடி அதிகமாகும். **31.05.2014** வரை, கீழ்காணும் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் மூலம் **35.39** இலட்சம் பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

## அட்டவணை–2.2 சமூகப் பாதுகாப்புத் திட்டப் பயனாளிகள்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை (31.05.2014 வரை) |
|---|---|---|
| 1. | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 16,01,083 |
| 2. | இந்திராகாந்தி மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 65,527 |
| 3. | இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 6,41,644 |
| 4. | ஆதரவற்ற மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | 2,05,751 |
| 5. | ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம் | 4,63,166 |
| 6. | ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம் * (தற்போது முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்) | 4,05,978 |
| 7. | கணவனால் கைவிடப்பட்ட/ ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம் | 1,33,374 |
| 8. | 50 வயது எய்தியும் திருமணமாகாமல் இருக்கும் உழைக்கும் திறனற்ற ஏழை பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம். | 22,053 |
| | மொத்தம் | 35,38,576 |

அனைத்து ஓய்வூதியங்களை ஒருங்கிணைக்கும் வகையில், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழான ஓய்வுதியத் திட்டத்தை உள்ளடக்கிய அனைத்து ஓய்வுதியத் திட்டங்களையும் **2014–15** ஆம் ஆண்டு முதல் வருவாய் நிருவாக ஆணையரகம் மூலம் நிருவகிக்க அரசு ஆணையிட்டுள்ளது. உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் பிற கூறுகள் ஏற்கனவே உள்ள நடைமுறையின்படி நிலச் சீர்திருத்த ஆணையரால் செயல்படுத்தப்படும்.

மேற்கூறிய **8** சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களில், **3** திட்டங்கள் அதாவது, இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம், இந்திராகாந்தி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் மற்றும் இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு மட்டும் கீழ்கண்டவாறு மைய அரசின் பங்களிப்பாக ஏற்கப்படுகிறது:

## அட்டவணை–2.3 ஓய்வூதிய திட்டங்களின் மைய அரசின் பங்களிப்பு

| வ. எண். | திட்டத்தின் பெயர் | தகுதிக்கான நிர்ணயம் | மத்திய அரசின் பங்களிப்பு |
|---|---|---|---|
| 1. | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 60 முதல் 79 வயது வரை | ரூ.200 |
| | | 80 வயது மற்றும் அதற்கு மேல் | ரூ.500 |
| 2. | இந்திராகாந்தி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 18 முதல் 79 வயது வரை | ரூ.300 |
| 3. | இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 40 முதல் 79 வயது வரை | ரூ.300 |

ரூ.1,000 வழங்குவதற்கு ஏதுவாக மீதமுள்ள தொகை மாநில அரசால் ஏற்கப்படுகிறது. மீதமுள்ள 5 மாநில திட்டங்களுக்கு முழு பங்களிப்புத் தொகை ரூ.1,000 தமிழக அரசால் ஏற்கப்படுகிறது.

உயிர் புள்ளியியல் அட்டையைப் பயன்படுத்தி, வங்கிகள் மூலம் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்களை 3 கட்டங்களாக வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி அனைத்து கிராமங்களிலும் இப்பணி நடைபெற்று வருகிறது. 30.06.2014 அன்று 9.95 இலட்சம் பயனாளிகளுக்கு வங்கிகளின் மூலம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகையின் போது சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளில் ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் வழங்கப்படுகிறது.

இத்திட்டங்களின் கீழ் உள்ள பயனாளிகள், கீழே குறிப்பிட்ட அளவீடுகளின்படி இலவசமாக அரிசி பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர்:

அ) அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் ஒரு முறை 4 கிலோ வீதம் சன்ன ரக அரிசி

ஆ) அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் ஒரு முறை 2 கிலோ வீதம் சன்ன ரக அரிசி.

**2014–15** ஆம் ஆண்டுக்கு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழான ஓய்வூதியத்தை உள்ளடக்கிய அனைத்து ஓய்வூதியங்களுக்கும் பட்டுவாடா செய்யும் வகையில் ரூ.4,198 கோடி அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

## 2.6.3 விபத்து நிவாரணத் திட்டம் மற்றும் நலிந்தோர் நிவாரணத் திட்டம்

விபத்து நிவாரணத் திட்டம் மற்றும் நலிந்தோர் நிவாரணத் திட்டம் ஆகிய இரு திட்டங்களின் கீழ் முறையே ரூ.15,000 மற்றும் ரூ.10,000 என வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களில் பிரதான வருவாய் ஈட்டும் நபர் இறப்பின் அக்குடும்பங்களுக்கு நிவாரணமாக வழங்கப்பட்டு வருகிறது.

## 2.6.4 மகளிருக்கு விலையில்லா மின்விசிறி / மின் அடுப்பு, மிக்ஸி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம்.

மகளிருக்கு மின் விசிறி / மின் அடுப்பு, மிக்ஸி மற்றும் கிரைண்டர் ஆகிய மூன்று பொருட்கள் அடங்கிய சிப்பம் (Package) வழங்கும் திட்டம் தற்போதைய அரசால் அரசாணை (நிலை) எண்.2, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, நாள் **03.06.2011** இன்படி அறிமுகம் செய்யப்பட்டது. இத்திட்டத்தில் **30.06.2011** அன்றைய தேதியில் ரூ.**1.85** கோடி அரிசி பெறும் தகுதியுடைய குடும்ப அட்டை வைத்துள்ள குடும்பங்களில் உள்ள அனைவரும் படிப்படியாகப் பயன் பெறுவர்.

இத்திட்டத்தில் மூன்று பொருட்களும் பயனாளிகளுக்கு ஒரே நேரத்தில் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் வருவாய் கிராம பகுதிகளுக்கு முதலாவதாகவும், பின்னர் பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கு மக்கள் தொகையின் அடிப்படையில் ஏறு வரிசையில் வழங்கப்படுகிறது.

இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், திருவள்ளூர் மாவட்டம், காக்களூர் கிராமத்தில் கடந்த **2011** ஆம் ஆண்டு செப்டம்பர் **15** ஆம் நாளன்று தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மலைப்பிரதேசங்களில் தட்ப வெட்பநிலை காரணமாக நீலகிரி மாவட்டத்திற்கும் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில், கொடைக்கானல் பகுதிக்கும் மின்விசிறிக்கு பதில் மின்சார அடுப்பு வழங்க அரசால் முடிவு செய்யப்பட்டு அவ்வாறே இப்பகுதிகளில் மின்சார அடுப்பு வழங்கப்பட்டு வருகிறது.

**2011** முதல் **2014** வரை பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் நிதி ஒதுக்கீடு விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

## அட்டவணை–2.4 மின்விசிறி, மிக்ஸி மற்றும் கிரைண்டர் பயனாளிகளின் விவரங்கள்

| ஆண்டு | நிதி ஒதுக்கீடு (கோடியில்) | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|
| 2011–12 (முதல் கட்டம்) | ரூ.1,370 | 25 இலட்சம் |
| 2012–13 (இரண்டாம் கட்டம்) | ரூ.2,000 | 35 இலட்சம் |
| 2013–14 (மூன்றாம் கட்டம்) | ரூ.1,500 | 35 இலட்சங்களில், 21.07.2014 வரையில், 33.58 இலட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளனர். |
| **மொத்தம்** | **ரூ.4,870** | **93.58 இலட்சம் பயனாளிகள்** |

ஆக மொத்தம் இத்திட்டத்தின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில் **21.07.2014** வரையில் **93.58** இலட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளனர். இரண்டு ஆண்டுகளில் மீதமுள்ள அனைவருக்கும் விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்கப்படும்.

### 2.6.5 2014 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளுக்கான விலையில்லா சேலை/வேட்டி வழங்கும் திட்டம்

**2014** ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு நீலகிரி மாவட்டம், குன்னூரில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் **04.01.2014** அன்று விலையில்லா சேலை மற்றும் வேட்டி வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. **2014** ஆம் ஆண்டில் **1,73,23,843** விலையில்லா சேலைகளும்,

**1,72,05,561** விலையில்லா வேட்டிகளும் **32** மாவட்டங்களுக்கும் ஒதுக்கீடு செய்து அவை கோ–ஆப்டெக்ஸ் மூலமாக பெறப்பட்டு வருவாய்த் துறை மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் அனைத்து தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கும் விலையில்லா சேலை மற்றும் வேட்டி விநியோகம் செய்யும் இத்திட்டத்தினை அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கண்காணித்து வருகின்றனர்.

இத்திட்டப் பயனாளிகளுக்கு **2014** ஆம் ஆண்டு பொங்கல் திருநாளையொட்டி விலையில்லா சேலை மற்றும் வேட்டி வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு, தேசிய தகவல் மையத்தின் (National Informatics Centre) மூலம் மென் பொருள் வடிவமைக்கப்பட்டு பயனாளிகளின் பட்டியலினை இணையதளம் மூலம் பதிவு செய்து, பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்பட வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**2014** ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு **1,52,10,381** விலையில்லா சேலைகளும் மற்றும் **1,52,50,547** விலையில்லா வேட்டிகளும், **22.07.2014** வரை பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும்

எஞ்சிய அனைத்து பயனாளிகளுக்கும் விலையில்லா சேலைகள் மற்றும் வேட்டிகள் உடனடியாக வழங்க அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### 2.6.6 பள்ளிகள் மூலமாக மாணவர்களுக்கு வழங்கப்படும் வகுப்புச் சான்றுகள்

வருவாய்த்துறையின் மூலம் பொது மக்களுக்கு குறிப்பாக மாணவ/மாணவியர்களுக்கு தேவைப்படும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பள்ளியில் சேருவதற்கும், கல்வி உதவித்தொகை பெறுவதற்கும் தேவைப்படும் மூன்று முக்கிய சான்றிதழ்கள் சாதிச் சான்றிதழ், பிறப்பிடச் சான்றிதழ் மற்றும் வருமானச் சான்றிதழ் ஆகும்.

மேற்கண்ட சான்றிதழ்கள் பெறுவதற்காக மாணவர்களுக்கு ஏற்படும் காலதாமதம் மற்றும் இடர்பாடுகளை நீக்கும் நோக்கத்துடன், **6** ஆம் வகுப்பில் பயிலும் மாணவ / மாணவியர்கள் அவர்கள் பயிலும் பள்ளிகள் மூலமாகவே, குறிப்பிட்ட காலவரையறைக்குள் சான்றிதழ்களைப் பெற ஏதுவாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி அரசாணை (நிலை) எண். **184**, வருவாய்[வ.நி.**3(2)**]துறை, நாள் **05.06.2012**–இல் ஆணை

வெளியிடப்பட்டுள்ளது. **2013–14** ஆம் கல்வி ஆண்டில் மொத்தம் **11,23,355** சான்றிதழ்கள் மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் **5,92,838** சான்றிதழ்கள் **6** ஆம் வகுப்பு படிக்கும் மாணாக்கர்களுக்கும், **4,13,787** சான்றிதழ்கள் **10** ஆம் வகுப்பு படிக்கும் மாணாக்கர்களுக்கும் மற்றும் **1,16,730** சான்றிதழ்கள் **12** ஆம் வகுப்பு படிக்கும் மாணாக்கர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

### 2.6.7 தேசிய மக்கள் தொகை பதிவேடு – உயிர் புள்ளியியல் பதிவு செய்தல்

உயிர் புள்ளியியல் பதிவு செய்யும் பணியில், (5 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட) ஒவ்வொரு தனி நபரின் புகைப்படம், கைரேகைப் பதிவுகள் மற்றும் விழித்திரை படல அமைப்பு (உயிர் புள்ளியியல்) ஆகியவை பல்வேறு கட்டங்களாக பதிவு செய்யப்படுகிறது. இப்பணி பாரத மின்னணுக் கழகம், பெங்களூரு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு, தமிழ்நாடு மக்கள் கணக்கெடுப்புப் பணி இயக்குநர் அவர்களால் கண்காணிக்கப்படுகிறது.

இந்நேர்வில், பணி முன்னேற்றம் குறித்து கணக்கெடுப்பு அலுவலர்களுடன் மாதம் ஒருமுறை முகமை அலுவலர் (Nodal Officer) /கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் ஆய்வுக்

கூட்டங்கள் நடத்தப்பட்டு, இப்பணியினை உரிய காலத்தில் முடிப்பது தொடர்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அரியலூர், பெரம்பலூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் இப்பணி **80** சதவீதத்திற்கு மேலாக முடிக்கப் பெற்றுள்ளது. மீதமுள்ள மாவட்டங்களில் இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையான **7.21** கோடியில் **15.07.2014** அன்றைய நிலையில், குறியீடு செய்யப்பட்ட மக்கள் தொகையான **6,74,18,169**–இல், இதுவரை **4,91,21,344** நபர்களுக்கு **(72.86%)** பதிவுப் பணி மேற்கொள்ளப் பட்டிருப்பதுடன் எஞ்சியுள்ளவர்களுக்கும் பதிவுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. உயிர்புள்ளியியல் பதிவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்ட **4,91,21,344** நபர்களில், இதுவரை **4,64,83,150** நபர்களுக்கு ஆதார் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இது **94.62** சதவீதமாக கணக்கிடப்பட்டுள்ளது.

## அட்டவணை–2.5 தேசிய மக்கள் தொகை பதிவேடு மற்றும் ஆதார் அட்டை 15.07.2014 அன்று வழங்கப்பட்ட விவரம்

| வ. எண் | மாவட்டம் | உயிர்புள்ளியியல் கணக்கெடுப்பு எடுக்க வேண்டிய மொத்த நபர்கள் | 15.07.2014 வரை கணக்கெடுக்கப்பட்ட மொத்த நபர்கள் | 15.07.2014 வரை விநியோகிக்கப்பட்ட மொத்த ஆதார் அட்டைகள் |
|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 729430 | 624065 | 589965 |
| 2 | சென்னை | 4153882 | 2559235 | 2357558 |
| 3 | கோயம்புத்தூர் | 3259142 | 2400202 | 2266530 |
| 4 | கடலூர் | 2414419 | 1768270 | 1642103 |
| 5 | தருமபுரி | 1458976 | 1117806 | 1042783 |
| 6 | திண்டுக்கல் | 2065648 | 1400174 | 1373754 |
| 7 | ஈரோடு | 2161720 | 1712012 | 1580316 |
| 8 | காஞ்சிபுரம் | 3627157 | 2492254 | 2470113 |
| 9 | கன்னியாகுமரி | 1712615 | 1293907 | 1254354 |
| 10 | கரூர் | 1026389 | 762654 | 750832 |
| 11 | கிருஷ்ணகிரி | 1796504 | 1224998 | 1122344 |
| 12 | மதுரை | 2903646 | 2142414 | 2159555 |
| 13 | நாகப்பட்டினம் | 1373705 | 1168349 | 1155289 |
| 14 | நாமக்கல் | 1618420 | 1102524 | 1089956 |
| 15 | பெரம்பலூர் | 533131 | 462751 | 380169 |
| 16 | புதுக்கோட்டை | 1507275 | 1202145 | 1096331 |
| 17 | இராமநாதபுரம் | 1078248 | 869932 | 806350 |
| 18 | சேலம் | 3332520 | 2449389 | 2401876 |
| 19 | சிவகங்கை | 1291305 | 853262 | 802787 |
| 20 | தஞ்சாவூர் | 2244009 | 1732766 | 1645303 |
| 21 | நீலகிரி | 713857 | 502857 | 462840 |
| 22 | தேனி | 1207061 | 873765 | 865236 |
| 23 | திருவள்ளூர் | 3435796 | 2482458 | 2290540 |
| 24 | தூத்துக்குடி | 1576298 | 1223597 | 1088451 |
| 25 | திருச்சிராப்பள்ளி | 2582854 | 2053240 | 1991573 |
| 26 | திருநெல்வேலி | 2887327 | 2135958 | 1992263 |
| 27 | திருப்பூர் | 2312793 | 1525475 | 1329266 |
| 28 | திருவண்ணாமலை | 2373117 | 1623965 | 1364527 |
| 29 | திருவாரூர் | 1195490 | 876762 | 852167 |
| 30 | வேலூார் | 3711684 | 2694309 | 2649671 |
| 31 | விழுப்புரம் | 3266924 | 2381110 | 2198990 |
| 32 | விருதுநகர் | 1866827 | 1408739 | 1409358 |
| | **மொத்தம்** | **6,74,18,169** | **4,91,21,344** | **4,64,83,150** |

## 2.7 பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு

தமிழ்நாடு மாநிலம், காலநிலை மற்றும் புவியியல் தொடர்பான பேரழிவுகளான புயல், வெள்ளம், பூகம்பம், சுனாமி மற்றும் வறட்சி ஆகியவற்றால் பாதிக்கப்படக்கூடிய பகுதியில் இந்திய தீபகற்பத்தில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய **13** மாவட்டங்கள் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை காலங்களில் வங்காள விரிகுடாவில் ஏற்படும் காற்றழுத்த தாழ்வுநிலை (Trough) மற்றும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் (Depression) போன்றவற்றின் தாக்கத்தினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

### 2.7.1 மாநில அளவிலான நிருவாக அமைப்பு

மாநிலத்தில் பேரிடர் மேலாண்மை தொடர்பாக கொள்கை வகுக்கும் பொறுப்பு வருவாய்த் துறையைச் சார்ந்ததாகும். மாநில அரசின் கொள்கையின்படி மாநில அளவில் ஏற்படும் பேரிடர்களை தடுப்பதற்கும், பேரிடர் தணிப்புக்கும் மற்றும்

மேலாண்மை செய்வதற்கும் வருவாய் நிருவாக ஆணையர் / மாநில நிவாரண ஆணையர் அவர்கள் இவ்வாணையரகத்தின் தலைமைப் பொறுப்பை வகிப்பதோடு இது குறித்த நடவடிக்கை எடுப்பதற்கும் முகமை அலுவலராகச் செயல்படுகிறார். நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக மாநில நிவாரண ஆணையருக்கு இயக்குநர், (பேரிடர் மேலாண்மை) மற்றும் உறுப்பினர்–செயலர் (தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை முகமை) உறுதுணையாக உள்ளார்.

மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு மாவட்ட ஆட்சியரே தலைமை வகிக்கிறார். மாவட்ட அளவிலான பல்வேறு பேரிடர் நிகழ்வுகளை மேலாண்மை செய்தல், தடுத்தல் மற்றும் பேரிடர் தணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு அவர் முகமை அலுவலராகச் செயல்படுகிறார்.

பேரிடர் நிகழ்வின்போது, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கவும் பிற நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கும் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி பெறப்படுகிறது. பேரிடர் நிகழ்வின் பாதிப்பு பெரிய அளவில் இருப்பின், அதற்கான கூடுதல் நிதி ஆதாரங்கள்

தேவைப்படின் நடுவண் அரசின் தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உதவி பெற ஏதுவாக நடுவண் அரசுக்கு கோரிக்கை அனுப்பப்படும்.

### 2.7.2 தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்

பேரிடர் மேலாண்மை சட்டம், **2005** நிறைவேற்றப்படுவதற்கு முன்பு, அரசாணை (நிலை) எண்.**323,** வருவாய், நாள் **08.07.2003** இல் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையின் கீழ் **15** உறுப்பினர்களைக் கொண்ட மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் மாநில அரசால் ஏற்படுத்தப்பட்டது. எனினும், **2005** ஆம் ஆண்டின் பேரிடர் மேலாண்மை சட்டத்திற்கு இணங்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் **8** உறுப்பினர்களைக் கொண்ட மாநில பேரிடர் மேலாண்மை ஆணையமானது பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டது.

(1) மாண்புமிகு முதலமைச்சர் – தலைவர்

(2) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்

(3) தலைமைச் செயலாளர் – அலுவல் வழி உறுப்பினர்

(4) செயலர், வருவாய்த்துறை

(5) செயலர், நிதித்துறை

(6) செயலர், உள்துறை

(7) சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர்

(8) முனைவர் எஸ்.இராஜரத்தினம்,
இயக்குநர், பேரிடர் மேலாண்மை மற்றும் தணிப்பு மையம், அண்ணா பல்கலைக் கழகம், சென்னை.

(9) பேராசிரியர் சி.வி.ஆர்.மூர்த்தி,
கட்டுமான பொறியியல் துறை,
இந்திய தொழில் நுட்ப கழகம், சென்னை.

**2.7.3 தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை**

அரசாணை (நிலை) எண்.488, வருவாய், நாள் 28.11.2013 இல் தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை முகமையை அரசு உருவாக்கியும் அதனை 1975 ஆம் ஆண்டைய தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டத்தின்படி பதிவு செய்யவும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் இம்முகமைக்கான கழகப் புரிந்துணர்வு மற்றும் துணை விதிகளுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இம்முகமையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தலைவராகவும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் மற்றும் அரசின் தலைமைச் செயலாளர் ஆகியோரை துணைத்

தலைவர்களாகவும், 14 அரசு செயலாளர்களை உறுப்பினர்களாகவும் மற்றும் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரை அமைப்பாளராகவும் கொண்ட நிருவாகக் குழு நிருவகிக்கிறது.

இது தவிர இம்முகமைக்கென கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரை தலைவராகவும் மற்றும் 9 பிற உறுப்பினர்களையும் கொண்ட செயற்குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் சங்கத்தின் உறுப்பினர் செயலாளர் மற்றும் இயக்குநர் (பேரிடர் மேலாண்மை) அவர்களை இச்செயற்குழுவிற்கு குழு கூட்டுநராக நியமித்துள்ளது.

இயற்கைச் சீற்றங்கள் / பேரிடர் நிகழ்வுகளின் போது அரசால் உருவாக்கப்பட்டுள்ள பொருளாதார மேம்பாட்டு பலன்களை இழக்காமலிருக்கவும் மற்றும் பேரிடர் நிகழ்வுகளின்போது உயிரிழப்பு அதி முக்கியமான கட்டமைப்பு மற்றும் சொத்துக்களின் இழப்புகளை இயன்ற வரையில் குறைத்திட ஏதுவாக சீரிய பேரிடர் மேலாண்மை அமைப்பு வாயிலாக அனைத்து வகையான பேரிடர் நிகழ்வுகளின்

எதிர்மறை தாக்கத்தை குறைப்பதே தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமையின் முதன்மை நோக்கமாகும்.

மாநில அளவில் பேரிடர் நிகழ்வு தொடர்பான செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் செயல் முகமையாக செயல்படுவதே இம்முகமையின் முதன்மைப் பணியாகும்.

### 2.7.4 மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம்

**2005** ஆம் ஆண்டைய பேரிடர் மேலாண்மை சட்டத்தின் (மத்திய சட்டம் **53/2005**) பிரிவு **25(1)** இன் கீழ் மாவட்ட ஆட்சியர்களை தலைவராகவும் மற்றும் பின்வரும் அலுவலர்களைக் கொண்டும் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையத்தினை அரசாணை (நிலை) எண்.**33**, வருவாய்த்துறை, நாள் **24.01.2012** இல் ஏற்படுத்தி அரசு ஆணையிட்டுள்ளது.

**(1)** மாவட்ட பஞ்சாயத்து தலைவர் – அலுவல் வழி இணை தலைவர்

**(2)** மாவட்ட காவல் கண்காணிப்பாளர் – அலுவல் வழி உறுப்பினர்

(3) மாவட்ட வருவாய் அலுவலர் – மாவட்ட ஆணையத்தின் தலைமைச் செயல் அலவலராகவும் பொறுப்பு வகிப்பவர் ஆவார்.

(4) இணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் – அலுவல் வழி உறுப்பினர்

(5) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் கூடுதல் ஆட்சியர், வளர்ச்சி/திட்ட அலுவலர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை)

### 2.7.5 செயலாக்க ஏற்பாடுகள்

**I. மாநில அவசரகால செயலாக்க மையம்**

மாநில அளவில் சென்னை சேப்பாக்கத்திலுள்ள மாநில நிவாரண ஆணையர் / வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகத்தில் மாநில அவசரகால செயலாக்க மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மையம் ஆண்டு முழுவதும் எந்த நேரத்திலும் செயல்பட ஏதுவாக இந்த மையத்திற்கு தேவையான மனித ஆற்றலுடன் தொலைபேசிகள், செல்லிடைத் தொலைபேசிகள், செயற்கைக்கோள் தொடர்பு வசதிகள், இந்திய வானிலை ஆராய்ச்சி துறையால் வழங்கப்பட்ட டி.டி.எச். தகவல் பரிமாற்றம் அதிவேக தொலைபேசி வசதி, நிகரி, கணினி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் அவசரகால செயலாக்க மையத்தினை பொதுமக்கள் தொடர்பு கொள்ள

வசதியாக தொலைபேசி எண். 1070 என்ற கட்டணமில்லா தொலைபேசி வசதியும் நிறுவப்பட்டுள்ளது. பேரிடர் நிகழ்வு குறித்த தகவல்கள் இம்மையத்தில் முன்கூட்டியே பெறப்பட்டு, அத்தகவல்கள் உடனடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு தொடர்புடைய அலுவலகங்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்கப் படுகிறது. தொழில் நுட்ப முன்னேற்றங்களாலும், மாநில அரசின் கொள்கை படியும் நம்முடைய பொறுப்பினை மேலும் மேம்படுத்துவதற்கான தேவை எப்போதும் இருந்து வருகிறது.

## II. மாவட்ட அவசரகால செயலாக்க மையம்

மாநில அவசரகால செயலாக்க மையத்தின் அடிப்படையிலேயே மாவட்ட தலைநகரங்களில் மாவட்ட அவசரகால செயலாக்க மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அனைத்து முகமைகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்த ஏதுவாக ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட கட்டளைத் தொகுப்பு மற்றும் கட்டுப்பாட்டு கட்டமைப்பின் நரம்பு மண்டலங்களாக இம்மாவட்ட மையங்கள் செயல்படுகின்றன.

முதலில் 1077 என்ற எண் கொண்ட கட்டணமில்லா தொலைபேசி வசதிகள் மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டன. பின்னர் பேரிடர் நிகழ்வுகளுக்கான 13 வது நிதிக்குழு அளித்த நிதி உதவிகளைக் கொண்டு இவை படிப்படியாக மேம்படுத்தப்பட்டன. இதன் பின்னர் 2013 ஆம் ஆண்டு மாவட்ட அவசரகால செயலாக்க மையங்களின் கட்டமைப்பு மற்றும் தொலைத் தொடர்பு வசதிக்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.10 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.3.20 கோடி வழங்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்ட அவசரகால செயலாக்க மையங்களுக்கும் அச்சுப்பொறியுடன் கூடிய கணினிகள், நிகரிகள் மற்றும் தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.

### III. களப்பணி – காவல் துறையின் கம்பியில்லா கருவி (Police Wireless System) மற்றும் முன்னெச்சரிக்கை கருவி (Early Warning System)

பேரிடர் காலங்களில் கடற்கரையோர மாவட்டங்களில் உள்ள வருவாய்த்துறை அலுவலர்கள் தொடர்ந்து தொடர்பு கொள்ள ஏதுவாக கம்பியில்லா தொடர்பு சாதனத்திற்காக நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் பேரிடர் காலங்களில் களப்பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கிடையே தொடர்பை

மேம்படுத்துவதற்காக காவல் துறையின் கம்பியில்லா கருவி (Police Wireless System) பயன்படுத்தப்படுகிறது. பேரிடர் காலங்களில் கடலோர மாவட்ட மக்களுக்கு முன்னெச்சரிக்கைக் கருவி (Early Warning System) மூலம் திறம்பட எச்சரிக்கை விடுவிக்கப்பட்டு அவர்களின் உயிர் மற்றும் உடமைகள் பாதுகாப்பிற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 2.7.6 மழைமானி நிலையங்கள்

தமிழ்நாட்டில் பரவலாக **397** இடங்களில் மழைமானி நிலையங்கள் உள்ளன. இந்த நிலையங்களில் நாள்தோறும் பதிவாகும் மழையளவு விவரங்கள் மாநில நிவாரண ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த மழைமானி நிலையங்கள் அவ்வப்போது இந்திய வானிலை ஆராய்ச்சி மைய அலுவலர்களாலும், வருவாய்த்துறை அலுவலர்களாலும் ஆய்வு செய்தும், பராமரிக்கப்பட்டும் வருகின்றன. மாநிலத்தில் நிருவாகத்திறன் மேம்பாட்டிற்காக புதியதாக உருவாக்கப்பட்ட வட்டங்களிலும் மழைமானி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

### 2.7.7 மாநில பேரிடர் மேலாண்மை நிதி

#### 2.7.7.1 மாநில பேரிடர் நிவாரண நிதி (SDRF) மற்றும் தேசிய பேரிடர் நிவாரண நிதி (NDRF)

பொதுவாக மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வழங்கப்படுகிறது. அதிகமான பேரிடர் நிகழ்வுகளில் கூடுதல் நிதியுதவி தேவைப்படும்பொழுது மத்திய அரசால் நிருவகிக்கப்படும் தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி கோரப்படும். மாநில பேரிடர் நிவாரண நிதியின்கீழ் 2010–11 முதல் 2014–15 வரையிலான காலத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு:

**அட்டவணை–2.6 தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மாநில பேரிடர் நிவாரண நிதி**

| ஆண்டு | ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 2010–2011 | 293.52 |
| 2011–2012 | 308.20 |
| 2012–2013 | 323.61 |
| 2013–2014 | 339.79 |
| 2014–2015 | 356.78 |
| மொத்தம் | **1, 621.90** |

### 2.7.7.2 தமிழ்நாடு அரசினால் வழங்கப்படும் நிதியுதவிக்கான விதிமுறைகள்

இதற்கு முன்னர் வழங்கப்பட்டு வந்த நிவாரணம் போதுமானதாக இல்லையென்பதால் மாண்புமிகு முதலமைச்சரின் உத்தரவின் பேரில் நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்க **2012** ஆம் ஆண்டு கீழ்க்கண்டவாறு அரசாணை வெளியிடப்பட்டது.

1) இயற்கை இடர்பாடுகளின்பொழுது ஏற்படும் உயிரிழப்பிற்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.1.50 இலட்சமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1 இலட்சமும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது.

2) இயற்கை இடர்பாடுகளினால் பாதிக்கப்படும் குடும்பங்களை தற்காலிகமாகக் குடியமர்த்தி அவர்களுக்கு உடனடி நிவாரணமாக 10 கிலோ அரிசி, ஒரு சேலை, ஒரு வேட்டி, 1 லிட்டர் மண்ணெண்ணெய் மற்றும் ரூ.1,000 நிவாரணமாக வழங்கப்படுகிறது.

3) முழுவதுமாக சேதமடைந்த குடிசைகளுக்கு தலா ரூ.5,000 மற்றும் பகுதியாக சேதமடைந்த குடிசைகளுக்கு தலா ரூ.2,500 வழங்கப்படுகிறது.

4) கால்நடை இழப்பிற்கு நிவாரணமாக பசு/எருமை ஒன்றுக்கு தலா ரூ.20,000 ஆடு ஒன்றுக்கு தலா ரூ.2,000 வழங்கப்படுகிறது.

5) கோழி ஒன்றுக்கு தலா ரூ.100 வழங்கப்படுகிறது.

அவசர நிலையைக் கருத்தில் கொண்டு மேற்கண்ட நிவாரணமானது பாதிக்கப்பட்டோர்களுக்கு உடனடியாக வழங்க மாவட்ட ஆட்சியர் / வட்டாட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இயற்கை இடர்பாடுகளினால் 50 விழுக்காட்டிற்கு மேல் பயிர் இழப்பு ஏற்படும் இனங்களில் வழங்கப்படும் உதவித் தொகையை மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் ஆணைப்படி உயர்த்தி அரசாணை (நிலை) எண்.123, வருவாய் [பே.மே.3(1)] துறை, நாள் 25.04.2013 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. தற்போது மாநில அரசால் வழங்கப்படும் உதவித்தொகை மத்திய அரசினால் நிர்ணயிக்கப்பட்ட நிவாரணத் தொகையை விட அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. உதாரணமாக, நெற்பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு நிவாரணமாக ரூ.5,000 என தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. ஆனால் நீண்ட கால பயிர் மல்பெரி தவிர பாசன ஆதாரமற்ற/பாசன ஆதாரமுள்ள நிலங்களில் பயிரிடப்படும் இதர பயிர்களுக்கு மத்திய அரசு பொதுவான நிவாரண வரையறையையே பின்பற்றுகிறது. நெற்பயிர், நீண்ட கால பயிர் மற்றும் மல்பெரி ஆகியவை தவிர பாசன ஆதாரமுள்ள நிலங்களில் பயிரிடப்படும் பயிர்களுக்கு ஏக்கர்

ஒன்றுக்கு வழங்கப்படும் நிவாரணம் ரூ.4,000 மற்றும் பாசன ஆதாரமற்ற நிலங்களில் பயிரிடப்படும் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு வழங்கப்படும் நிவாரணம் ரூ.3,000 மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட வரையறைப்படி முறையே ஏக்கர் ஒன்றுக்கு வழங்கப்படும் ரூ.3,643 மற்றும் ரூ.1,821–ஐ விட கூடுதலான தொகையாகும். மேலும் மல்பெரி பயிருக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட ஏக்கர் ஒன்றுக்கான நிவாரணத் தொகை ரூ.1,295 க்கு மாறாக தமிழ்நாடு அரசால் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.3,000 வழங்கப்பட்டு வருகிறது.

## அட்டவணை–2.7 பயிர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவி

| வ. எண். | பயிரின் பெயர் | பாசன வகை | நிவாரண உதவி வழங்க மாநில அரசால் அனுமதிக்கப்பட்ட தொகை ஏக்கர் ஒன்றுக்கு (ரூபாயில்) | மத்திய அரசால் வரையறுக்கப்பட்ட நிவாரண உதவி ஏக்கர் ஒன்றுக்கு (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1 | நெல் | | 5,000 | கீழே வரிசை எண்.2 இல் உள்ளதை தவிர, இதற்கென்று தனியான வரையறைகள் ஏதுமில்லை. |
| 2 | இதர பயிர் வகைகள் (நெற்பயிர், நீண்டகால மற்றும் மல்பரி அல்லாத பயிர்கள் ) | பாசன ஆதாரமுள்ளது | 4,000 | 3,643 |
| | | பாசன ஆதாரமற்றது | 3,000 | 1,821 |
| 3 | மல்பரி | | 3,000 | 1,295 |

### 2.7.7.3 பேரிடரை தமிழக அரசு கையாண்ட விதம்

தமிழ்நாட்டில் ஏற்படும் பேரிடர்களான வறட்சி, வெள்ளம், சுனாமி, நிலச்சரிவு மற்றும் புயல் போன்ற பேரிடர்களை தமிழக அரசு திறம்பட கையாளுகிறது. **2004** ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பேரழிவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நேரடி பார்வையில் தமிழக அரசு கையாண்ட விதம் உலகளவில் அனைவராலும் பாராட்டப்பட்டது. அதே போன்று தமிழ்நாட்டில் **2013** ஆம் ஆண்டு ஏற்பட்ட கடும் வறட்சியானது தமிழக அரசின் முன்னோடி செயல்திட்ட கொள்கை மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி திறம்பட கையாளப்பட்டது. மேலும் மாநிலத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட **20.89** இலட்சத்திற்கும் அதிகமான விவசாயிகளுக்கு ரூ.**1,376.71** கோடி நிவாரணம் ஒதுக்கீடு செய்யப்பட்டது இதுவே முதன்முறையாகும்.

## I. வறட்சி 2013

**2012–13** ஆம் ஆண்டில் போதிய பருவமழை பெய்யாததாலும், அண்டை மாநிலமான கர்நாடகம் காவேரியிலிருந்து பங்கீட்டு முறைப்படி விவசாயத்திற்கு தண்ணீர் திறந்து விடாததாலும், தமிழகத்தில் **2012–13** ஆம் ஆண்டில் கடும் வறட்சி ஏற்பட்டது. மாநிலத்திலுள்ள விவசாயிகள் மற்றும் குடிமக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை போக்குவதற்கு மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டதுடன் குடிநீர் தட்டுப்பாட்டினை போக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேற்கொண்ட நிவாரண நடவடிக்கைகளின் விவரங்கள்:

## அட்டவணை–2.8 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சியின் பொழுது டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட நிவாரண உதவிகள்

(ரூபாய் கோடிகளில்)

| வ. எண் | துறை | பகுதி | ஒப்பளிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1 | வருவாய்த்துறை (விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட வறட்சி நிவாரணம், டெல்டா பகுதிகளில் பயிர் காப்பீடு மற்றும் காவேரி சிறப்பு நிதி உட்பட) | டெல்டா | 541.50 |
| | | டெல்டா அல்லாதவை | 835.21 |
| | | கூட்டுத் தொகை | 1376.71 |
| 2 | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் | டெல்டா | 7.02 |
| | | டெல்டா அல்லாதவை | 20.00 |
| | | கூட்டுத் தொகை | 27.02 |
| 3 | நகராட்சி நிரு வாகம் | டெல்டா | 12.20 |
| | | டெல்டா அல்லாதவை | 40.00 |
| | | கூட்டுத் தொகை | 52.20 |
| 4 | பேரூராட்சி இயக்குநரகம் | டெல்டா | 18.03 |
| | | டெல்டா அல்லாதவை | 20.00 |
| | | கூட்டுத் தொகை | 38.03 |
| 5 | கால்நடை பராமரிப்புத் துறை | டெல்டா | 4.00 |
| | | டெல்டா அல்லாதவை | 15.33 |
| | | கூட்டுத் தொகை | 19.33 |
| 6 | தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தி கூட்டமைப்பு (ஆவின்) | டெல்டா<br>டெல்டா அல்லாதவை | 35.32 |
| | | கூட்டுத் தொகை | 35.32 |
| 7 | சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் | டெல்டா அல்லாதவை | 25.00 |
| 8 | ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை | டெல்டா அல்லாதவை | 40.00 |
| | மொத்தம் | | 1,613.61 |

**வறட்சி கோரிக்கை**

மாநிலத்தில் ஏற்பட்ட கடுமையான வறட்சி குறித்து விரிவான வறட்சி கோரிக்கை மாநில அரசால் தயார் செய்யப்பட்டு அதில் நிவாரணத் தொகையாக **ரூ.19,665.13** கோடி வழங்கக் கோரியும் மற்றும் பொது விநியோக திட்டத்திற்குத் தேவையான **7.92** இலட்சம் மெட்ரிக் டன் அரிசி வழங்கக் கோரியும் வறட்சி கோரிக்கை மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டது.

மேற்கண்ட வறட்சி கோரிக்கை மட்டுமின்றி மேலும் கூடுதல் நிவாரணத் தொகையாக **ரூ.323.12** கோடி வழங்குமாறு மத்திய அரசிடம் கோரப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, மத்திய குழு வருகை புரிந்து தமிழ்நாட்டில் வறட்சி பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டும் மாநிலத்தில் உள்ள அதிகாரிகளுடன் விரிவான கலந்தாய்வு மேற்கொண்டும் அக்குழு தனது அறிக்கையை மத்திய அரசிடம் சமர்ப்பித்தது. மேற்கண்ட மத்திய குழுவின் அறிக்கையின்படி, தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து **ரூ.624.69** கோடியும் தேசிய ஊரக குடிநீர் திட்டத்தின்கீழ் **ரூ.31** கோடியும் வழங்கி மத்திய அரசு ஆணையிட்டது.

## 11. உத்தராகண்ட் பேரிடர் நிகழ்வும் தமிழக அரசின் மீட்புப்பணியும்

2013 ஆம் வருடம் ஜூன் மாதம் இரண்டாவது வாரத்தில் தென்மேற்கு பருவ மழை காரணமாக உத்தராகண்ட் மாநிலம் பலத்த மழையினை பெற்றது. 16.06.2013 அன்று மாலை புனித தல வட்டாரங்களில் பெய்த பலத்த மழையால் புனிதயாத்திரை மையங்களில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தினால் பெருவாரியான உயிரிழப்புகளும், பொருட் சேதங்களும் ஏற்பட்டதுடன், சுற்றுலா பயணிகள் / யாத்ரீகர்கள் மற்றும் உள்ளூர் மக்கள் பெரும்பாலானோர் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டதுடன், பலர் காணாமலும் போயினர். தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து புனித யாத்திரை மேற்கொண்ட 671 எண்ணிக்கையிலான யாத்ரீகர்கள் உத்தராகண்ட் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் அல்லது வட்டாரங்களில் தனித்து விடப்பட்டனர். தமிழகத்திலிருந்து புனித யாத்திரை மேற்கொண்டு வெள்ளம் / நிலச்சரிவினால் தனித்து விடப்பட்டோரை மீட்டு பாதுகாப்பாக திரும்பக் கொண்டு வரும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உடனடியாக மூத்த அதிகாரிகளுடனான கூட்டத்தைக் கூட்டியதுடன் 20.06.2013 அன்று பத்திரிக்கை செய்தியினை வெளியிட்டதுடன், புது தில்லியிலுள்ள தமிழக

அரசின் சிறப்பு பிரதிநிதி அவர்கள் தலைமையில், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர், அரசு செயலர், வருவாய்த் துறை மற்றும் முதன்மை இருப்பிட ஆணையர், தமிழ்நாடு இல்லம் ஆகியோர்களை உறுப்பினர்களாகக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றை ஏற்படுத்தவும் ஆணையிட்டார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி **26.06.2013** அன்று டேராடூன் சென்ற குழுவினரால் தனிமைப்படுத்தப்பட்ட **657** யாத்ரீகர்கள் **02.07.2013** அன்று விமானம் மூலம் சென்னைக்கு பாதுகாப்பாக திரும்ப அழைத்து வரப்பட்டனர். **14** புனித யாத்ரீகர்கள் இப்பேரிடர் நிகழ்வில் காணாமல் போயினர்.

காணாமல் போன நபர்களின் குடும்பத்தினருக்கு நிவாரணமாக தலா ரூ.7 இலட்சத்திற்கான காசோலை **23.12.2013** அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேரில் வழங்கப்பட்டது. (உத்தராகண்ட் மாநில பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து ரூ.**1.5** இலட்சம், பாரதப் பிரதமர் அவர்களின் தேசிய நிவாரண நிதியிலிருந்து ரூ.**2** இலட்சம் மற்றும் தமிழக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.**3.5** இலட்சம்).

## III. 2014–ஆம் வருடம் அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகளில் நிகழ்ந்த படகு விபத்து – தமிழக அரசின் மீட்புப்பணி

**26.01.2014** அன்று பிற்பகல் **45** சுற்றுலா பயணிகளுடன் (அவற்றுள் **32** நபர்கள் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள்) தனியார் சுற்றுலா படகு ஒன்று அந்தமான் கடலில் "பே" தீவுக்கு அருகில் கவிழ்ந்தது. மேற்கண்ட படகு விபத்தில் **17** நபர்கள் இறந்தனர். இவர்களுள் **15** நபர்கள் காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்தும் மற்ற **2** நபர்கள் சென்னை மாவட்டத்திலிருந்தும் சுற்றுலா சென்றவர்கள். இப்படகு விபத்தில் காயமடைந்தோருக்கு உடனடி மருத்துவ சிகிச்சை அளிக்கவும், கூடுதல் சிகிச்சை தேவைப்படுவோரை அரசு செலவில் விமானம் மூலம் சென்னைக்கு உடனடியாக அனுப்பி வைக்கவும் மற்றும் விபத்தில் உயிரிழந்த நபர்களின் உடல்களை விமானம் மூலம் சென்னை அனுப்பி, அவற்றை காஞ்சிபுரத்திலுள்ள உறவினர்களிடம் ஒப்படைக்கும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் வருவாய்த்துறை செயலரை உள்ளடக்கிய குழு ஒன்றினை உடனடியாக அந்தமான் தீவுக்கு விரைந்து செல்லுமாறு ஆணையிடப்பட்டது. அதற்கேற்ப,

இக்குழுவானது போர்ட் பிளேர் சென்று காயமடைந்தவர்கள், உயிர் தப்பியவர்களை சென்னை கொண்டு வர ஏற்பாடு செய்ததோடு மட்டுமல்லாமல், உயிரிழந்த உடல்களை சென்னைக்கு விமானம் மூலம் கொண்டு வந்தனர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டதற்கிணங்க உயிரிழந்த 17 நபர்களின் குடும்பத்தினருக்கும் தலா ரூ.1 இலட்சம் வீதம் நிதியுதவி உடடினயாக வழங்கப்பட்டது.

## 2.7.8 மாநில பேரிடர் நிவாரண நிதி (SDRF) 2014–15

2012 ஆம் ஆண்டை தொடர்ந்து தமிழ்நாடு தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக குறைவான மழை அளவே பெற்றது. 2013 ஆம் ஆண்டில் தமிழ்நாடு 739.8 மி.மீ மழை பெற்றுள்ளது. இது சாதாரணமாகக் கிடைக்கும் ஆண்டு மழையளவான 920.9 மி.மீ யைவிட 20 சதவீதம் குறைவானதாகும்.

மாவட்டங்களில் குறைவான மழை பெறப்பட்டதன் காரணமாகவும், நீர் தேக்கங்களில் குறைந்த அளவு குடிநீர் இருப்பினாலும், சென்னை பெருநகரம் மற்றும் வைகை ஆற்றுப்படுகையை சார்ந்துள்ள மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம், திண்டுக்கல், விருதுநகர் மாவட்டங்களும்

மற்றும் திருவண்ணாமலை, வேலூர், அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் (சென்னை உட்பட 12 மாவட்டங்கள்) தண்ணீர் விநியோகத்தில் தட்டுப்பாடு ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. குறைவான மழைப் பொழிவாலும், நிலத்தடி நீர்மட்டம் குறைவதாலும் ஏனைய மாவட்டங்களிலும் இதனைப் போன்றே தண்ணீர் விநியோகத் தட்டுப்பாட்டை எதிர்நோக்கும் நிலை இருந்தது.

எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும் மற்றும் 2014–15 ஆம் நிதிநிலை அறிக்கையின் அடிப்படையிலும் குடிநீர் தட்டுப்பாட்டினை சமாளிக்கவும், கால்நடை தீவன பற்றாக்குறையைப் போக்கவும் மாநில பேரிடர் நிவாரண நிதியில் இருந்தும், உள்ளாட்சி பொது நிதியில் இருந்தும் ரூ.681.53 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை (நிலை) எண்.89, வருவாய் [பே.மே.3(1)] துறை, நாள் 24.02.2014 இல் அரசால் ஆணையிடப்பட்டது.

## அட்டவணை–2.9 மாநில பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை

| வ. எண் | துறை | மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 12 மாவட்டங்கள் (சென்னை உட்பட) | | |
| 1 | ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை | 42.45 |
| 2 | தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் | 13.65 |
| 3 | சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் (சென்னை மட்டும்) | 50.00 |
| 4 | நகராட்சி நிர்வாகம் | 50.87 |
| 5 | பேரூராட்சிகள் | 16.19 |
| ஏனைய 20 மாவட்டங்கள் | | |
| | ஏனைய 20 மாவட்டங்களுக்கு ஒரு மாவட்டத்திற்கு ரூ.50 இலட்சம் வீதம் (மாவட்ட ஆட்சியர்களின் கட்டுப்பாட்டில்) | 10.00 |
| கால்நடை பராமரிப்பு | | |
| | கால்நடை தீவன பற்றாக்குறையை போக்க கால்நடை பராமரிப்பு துறைக்கு (மாநிலம் முழுமைக்கும்) | 6.00 |
| | **மொத்தம்** | **189.16** |

## அட்டவணை–2.10 உள்ளாட்சிகளின் திட்டங்கள் / பொது நிதியில் இருந்து நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை

| வ. எண் | துறை | திட்ட நிதி / பொது நிதி (ரூ. கோடியில்) | |
|---|---|---|---|
| கடுமையாக குடிநீர் தட்டுப்பாடு நிலவும் 12 மாவட்டங்கள் (சென்னை உட்பட) | | | |
| 1 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | நகராட்சி நிருவாகம் மற்றும் பேரூராட்சிகள் | 16. 07 |
| | | தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் | |
| | | சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் | |
| 2 | ஊரக வளர்ச்சித் துறை | | 184.13 |
| | **கூட்டுத் தொகை** | | **200.20** |
| ஏனைய 20 மாவட்டங்களுக்கு | | | |
| 3 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை | நகராட்சி நிருவாகம் | 68.61 |
| | | பேரூராட்சிகள் | 14.34 |
| | | தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் (மாநில முழுமைக்கும்) | 54.25 |
| | | ஊரக வளர்ச்சித் துறை | 154.97 |
| | **கூட்டுத் தொகை** | | 292.17 |
| 4 | குடிநீர் வழங்கலுக்கு தேவைப்படும் மொத்த தொகை | | 492.37 |
| | | **மொத்தம்** | **492.37** |

மேற்கண்ட பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளதுடன் 2014–15 ஆம் ஆண்டில் தண்ணீர் தட்டுப்பாடு இடர்பாட்டினை எதிர்கொள்ளவும் உதவும்.

### 2.7.9 பேரிடர்களை எதிர்கொள்வதற்கான திறன் மேம்பாடு

13 வது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி, பேரிடர் மேலாண்மை திறன் மேம்பாட்டிற்காக 2010–11 முதல் 2014–15 வரை ஆண்டொன்றிற்கு ரூ. 5 கோடி வீதம், ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். அதன்படி, 2010–11 மற்றும் 2011–12 நிதியாண்டில் ரூ.10 கோடி பேரிடர் மேலாண்மை திறன் மேம்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து மாவட்ட பேரிடர் மேலாண்மை திட்டம் தயாரித்தல், பேரிடர்கள் குறித்த பிரசுரங்கள் தயாரித்தல், மாநிலம், மாவட்டம் மற்றும் வட்ட அளவிலான அவசரக் கட்டுப்பாட்டு மையங்களை வலுப்படுத்துதல், பேரிடர் மேலாண்மைப் பயிற்சிக்கான பயிற்சிக்கூறு தயாரித்தல்,

பேரிடர் மேலாண்மையின் பல்வேறு பங்குதாரர்களுக்கு அவசரகாலத்தில் மருத்துவமனைகளில் பேரிடர் மேலாண்மை பணிகள் உள்ளிட்ட பயிற்சி அளித்தல், திருவள்ளூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில், ஆபத்து மற்றும் எளிதில் பாதிக்கக்கூடிய அபாய மதிப்பாய்வு குறித்ததான ஆய்வறிக்கை (H.V.R.A-Study) தயார் செய்தல், பேரிடர் குறித்தான பொதுவானதொரு செயல்முறை அறிக்கை தயார் செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதைத் தவிர **13.05.2013** அன்று சட்டமன்றப் பேரவையில் வருவாய்த் துறை மானியக் கோரிக்கையில் அறிவித்தவாறு, வருவாய்த் துறை அலுவலர்களுக்கு பேரிடர் மேலாண்மையில் திறன் மேம்பாடு குறித்தான பயிற்சி ரூ.**2.5** கோடி செலவில் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி துணை ஆட்சியர்களுக்கு அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தில் இது தொடர்பான பயிற்சி வழங்கப்படுகிறது.

மேலும் இந்நிலையத்தில் வட்டாட்சியர்கள் மற்றும் துணை வட்டாட்சியர்களுக்கு மாவட்ட அளவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. வருவாய்த் துறையில் பணிபுரியும் உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்களுக்கு பவானிசாகரில் உள்ள தமிழ்நாடு அரசு அலுவலர் குடிமைப்பணிகள் பயிற்சி நிலையத்தில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இவை தவிர தேர்ச்சி பெற்ற பயிற்சி நிலையங்கள் மூலமாகவும் மாவட்ட அளவில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சியாளர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்களின்படி இப்பயிற்சி பயனுள்ளதாக இருப்பது தெரியவந்துள்ளது. மேலும் இப்பயிற்சியின் மூலம், எதிர்காலத்தில், பேரிடர் தொடர்பான பணிகளை வருவாய்த் துறை அலுவலர்கள் திறம்பட மேற்கொள்வது உறுதி செய்யப்பட்டுள்ளது.

## 2.8 கடலோர பேரிடர் அபாயம் குறைக்கும் திட்டம்

இந்திய தீபகற்பத்தின் தென்கோடியில் அமைந்துள்ள தமிழ்நாடு, கிழக்குப்பகுதி வங்காள விரிகுடாவினாலும் தென்பகுதி இந்திய பெருங்கடலினாலும் சூழப்பட்டு சுமார் 1,076 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையைக் கொண்டுள்ளது. மாநிலத்தின் 7.2 கோடி மக்கள் தொகையில் சுமார் 50 சதவீத மக்கள், அடர்த்தி மிகுந்த கடலோர பகுதிகளில் வசித்து வருகின்றனர்.

மாநிலத்தின் கடற்கரையை அடிக்கடி பாதிப்பிற்குள்ளாக்கும் பேரிடர்களின் அபாயத்தினை குறைப்பதற்காக தமிழக அரசு உலக வங்கி நிதியுதவியுடன் கடலோர பேரிடர் அபாயம் குறைப்பு திட்டம் (Coastal Disaster Risk Reduction Project) என்ற புதிய திட்டத்தினை ரூ.1,481.80 கோடி செலவில் தொடங்கியுள்ளது. இத்திட்டத்திற்கான முக்கூட்டு ஒப்பந்தமானது உலக வங்கி,

இந்திய அரசின் பொருளாதார விவகாரங்கள் துறை மற்றும் தமிழ்நாடு அரசு ஆகியவற்றிற்கிடையே **11.11.2013** அன்று புது டெல்லியில் கையெழுத்தாகியுள்ளது. அரசாணை (நிலை) எண்.23, வருவாய்த்துறை, நாள் **21.01.2014** மூலம் ரூ. **1,481.80** கோடிக்கான நிருவாக ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி கடலோரப் பகுதி மக்களின் பாதுகாப்பு மற்றும் பேரிடர் அபாய குறைப்பிற்காக பல்வேறு புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இத்திட்டத்தின் பணிகளான சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டம், முன்னெச்சரிக்கை கருவிகள் அமைத்தல், மின்சார வழித்தடங்களை தரைக்கு அடியிலான வழித்தடங்களாக மாற்றுதல் போன்ற புதுமையான முயற்சிகள், மிகுந்த பயன் தரக்கூடிய முயற்சிகளாகும்.

## அட்டவணை–2.11 கடலோர பேரிடர் அபாயம் குறைக்கும் திட்டத்தில் உள்ள அம்சங்கள்

| வ.எண் | விவரிப்பு | மொத்தம் (ரூ. கோடியில்) |
|---|---|---|
| **I.பேரிடர் அபாயம் குறைப்பு நடவடிக்கைகள்** | | **1035.00** |
| அ. | கடலோர கிராமங்களில் பாதுகாப்பான வீடுகள் (மிகுதியுள்ள பணிகளை) கட்டுதல் | 285.00 |
| ஆ. | பாதுகாப்பாக மக்களை வெளியேற்றுவதற்கான சாலைகள் அமைத்தல் | 25.00 |
| இ. | பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் கட்டுதல் (121) | 315.00 |
| ஈ. | முன்னெச்சரிக்கை கருவிகள் அமைத்தல் | 50.00 |
| உ. | கடலூர், நாகப்பட்டினம் மற்றும் வேளாங்கன்னியில் தரைக்கு மேலுள்ள மின்வழித்தடங்களுக்கு பதிலாக பூமிக்கு அடியில் கேபிள்கள் பதித்தல் | 360.00 |
| **II. மீன்வளத்துறை பணிகள்** | | **321.30** |
| அ. | முன்னேற்றத்திலுள்ள மீன்வளப் பணிகள் / புதிய பணிகள் | 180.00 |
| ஆ. | நிலைத்த மீன்வள மேம்பாட்டிற்கான பணிகள் | 141.30 |
| **III. பேரிடர் எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடு பணிகள்** | | **52.50** |
| அ. | பேரிடர் மேலாண்மைக்காக மையம் ஒன்றினை உருவாக்குதல் | 10.00 |
| ஆ. | உலகளாவிய தகவல் தொழில் நுட்ப பிரிவினை மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தில் அமைத்தல் | 17.50 |
| இ. | சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டம். | 15.00 |
| ஈ. | பேரிடர் மேலாண்மை குறித்து பள்ளிகள் மற்றும் பயிற்சி மையங்களின் பாட திட்டங்களில் சேர்த்தல் | 2.50 |
| உ. | ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரை பகுதிகள் மேலாண்மை திட்டம் தயாரித்தல் | 7.50 |
| **IV. திட்ட செயல்பாட்டிற்கான தொகை** | | **73.00** |
| | மொத்தம் | **1,481.80** |

### 2.8.1 சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டம்

இத்திட்டமானது பேரிடர் அபாயத்திற்குள்ளாகும் சமூகத்தினர் தங்களுக்குள் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கும், ஆங்காங்கே உள்ள உள்ளாட்சி அமைப்புகளுடன் சேர்ந்து பணியாற்றுவதன் மூலம் பேரிடர் அபாய குறைப்பிற்காக உருவாக்கப்பட்டுள்ள உள்கட்டமைப்புகளை சிறப்பாக பயன்படுத்தி கொள்வதற்கு தயார்படுத்தும் விதமாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் மூலம் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தினால் **(**SIRD**)** ரூ.**15** கோடி செலவில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட உள்ள முக்கியமான செயல்பாடுகள்:

அ) பேரிடர் அபாயம் மற்றும் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் குறித்து மதிப்பீடு செய்தல்

ஆ) சமூகத்தினை ஒருங்கிணைத்தல் மற்றும் திறன் மேம்பாடு

இ) முன்னெச்சரிக்கை கருவிகள் மற்றும் பாதுகாப்பு மைய கட்டடங்களின் பயன்பாட்டினை சமூகத்துடன் இணைத்தல்.

ஈ) அவசர காலத்தினை எதிர்கொள்வதற்கான திறன்களை வலிமைப்படுத்துதல்

### 2.8.1.1 சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டத்தின் குறிக்கோள்கள்

- கிராம அளவில் பேரிடர் மேலாண்மை திட்டத்தினை உருவாக்குவதன் மூலம் சமூகத்தின் பேரிடர் அபாயத்தினை குறைப்பதும், இயற்கை இடர்பாடுகளை தைரியமாகவும் எச்சரிக்கையுடனும் எதிர்கொள்வதற்கு தயார்படுத்துதல்.

- கிராம அளவிலான பேரிடர் மேலாண்மை குழுக்களை உருவாக்குதல் மற்றும் தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் பேரிடர் மேலாண்மை குறித்த முக்கியத்துவத்தினை உணர்த்துதல். இத்திட்டத்தின் மூலம் கிராம அளவில், தேடுதல் மற்றும் மீட்புகுழு, முதலுதவிக்குழு, முன்னெச்சரிக்கைக் குழு ஆகியவற்றை உருவாக்கி இக்குழுக்களுக்கான பயிற்சிகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

- கடலோர பேரிடர் அபாய குறைப்புத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் உட்கட்டமைப்புகள் குறித்து சமூகத்தின் அனைத்து தரப்பினரும் அறிந்து கொள்ள செய்வதுடன் இப்பொது சொத்துக்களை முறையாக பராமரிப்பது மற்றும் அவசரகாலங்களில் அவற்றை சிறப்பாக பயன்படுத்துவது குறித்தும் அறிந்து கொள்ளச் செய்தல்.

### 2.8.2 முன்னெச்சரிக்கைக் கருவிகள் அமைத்தல்

தமிழ்நாடு கடற்கரையானது நீர் மற்றும் காற்று அடிப்படையிலான பேரிடர்களால் பாதிப்பிற்கு இலக்காகும் கடற்கரையை கொண்டதாகும். தற்போது முன்னெச்சரிக்கை கருவி (Early Warning System) அல்லது பேரிடர் குறித்த அறிவிப்புக் கருவி (DWAS) ஒன்றினை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. தவறில்லாத செயல்பாட்டிற்காக மாநில அளவில் கண்காணிப்பு செய்யும் விதத்தில் ஒரு புதிய அமைப்பினை உருவாக்கி, இதன் மூலம் கடற்கரையில் வாழும் சமூகத்தினருக்கு முன்னெச்சரிக்கை விவரங்களையும், பேரிடர் குறித்த செய்திகளையும் தேவைக்கேற்ப, **24**x**7** முறையில் எப்பொழுதும் தெரிவிப்பதற்கு வசதி ஏற்படுத்தப்படவுள்ளது. இந்த முன்னெச்சரிக்கை

அமைப்பின் செயல்பாட்டினை சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டம் (Community Based Disaster Risk Management) மூலம் கடற்கரை சமூகத்துடன் ஒருங்கிணைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் 13 கடற்கரை மாவட்டங்களில் உள்ள 439 குடியிருப்புகளில் பேரிடர் அபாய முன்னறிவிப்பு கருவிகள் அமைக்கப்பட உள்ளன. இவை DWAS-R என அழைக்கப்படும். 13 கடலோர மாவட்ட தலைமையகத்திலும் DWAS-D எனப்படும் கருவி அமைக்கப்படும். தமிழ்நாடு மாநில அளவிலான இணைய தொடர்பு (TNSWAN) மற்றும் மிக அதிக அதிர்வெண் கொண்ட (VHF) ரேடியோ அலைகள் மூலமாகவும் மற்றும் நவீன GSM / GPRS செல்லிடை பேசி தொடர்பு மூலமாகவும் இருவேறு வகையில் தொடர்பு கொள்ளுமாறு அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது மூன்று நிலையில் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படும். முதல் கட்டமாக மாநில அவசரகால கட்டுப்பாட்டு மையம் (DWAS–C) மாநில தலைமை அலுவலகத்தில் நிறுவப்படும். அடுத்ததாக மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை செய்யும் விதமாக DWAS-D அமைப்புகள்

உருவாக்கப்படும். மூன்றாவது கட்டமாக வட்டம் / ஒன்றிய தலைமையிடத்திலிருந்து அபாயத்திற்கு உட்படும் கிராமங்கள் வரை **(DWAS-R)** அமைக்கப்படும்.

இத்திட்டமானது திட்ட மேலாண்மை அலகின் மூலம் ரூ.50 கோடி செலவில் செயல்படுத்தப்பட உள்ளது.

### 2.8.3 நாகப்பட்டினம், கடலூர் மற்றும் வேளங்கன்னி நகரங்களில் தரைக்கு மேல் உள்ள மின் வழிதடங்களை பூமிக்கு அடியில் தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக கழகத்தின் மூலம் நிறுவும் பணிகள்

தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக கழகமானது கடலூர், நாகப்பட்டினம் மற்றும் வேளாங்கன்னி நகரங்களில் பூமிக்கு மேல் உள்ள உயர் மற்றும் தாழ்வழுத்த மின் வழித்தடங்களை பூமிக்கு கீழான வழித்தடங்களாக மாற்றுவதற்கு திட்டமிட்டுள்ளது. 2011 அன்று டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட ”தானே” புயல் காரணமாக கடலூர், நாகப்பட்டினம் மாவட்டத்தில் மிக அதிகமான உட்கட்டமைப்புகள் பாதிப்புக்குள்ளாயின. எதிர்காலத்தில் இவ்வாறான பாதிப்புகளை தவிர்க்கும் விதமாக நாகப்பட்டினம், வேளாங்கன்னி மற்றும் கடலூர் நகராட்சிகளில் ஒரு முன்னோடி முயற்சியாக பூமிக்கு மேலுள்ள மின்

வழித்தடங்களை பூமிக்குக் கீழான வழித்தடங்களாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணியானது **ரூ.360** கோடி செலவில் செயல்படுத்தப்படும். இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. சட்ட பூர்வமாக பெறப்பட வேண்டிய அனுமதிகள் பெற்று விரைவில் இதற்கான பூர்வாங்க பணிகள் தொடங்கப்படும்.

### 2.8.4 மீன்வளத்துறை பணிகள்

டிசம்பர் **26, 2004** அன்று தமிழ்நாட்டின் கடற்கரையைத் தாக்கிய **"சுனாமி"** யினால், பெரும் பாதிப்புக்குள்ளான மீனவ மக்களுக்கு தமிழ்நாடு அரசால் அவசரகால சுனாமி மறுகட்டமைப்பு திட்டம் (ETRP) / கடலோர சமுதாயங்களின் இன்னல் குறைப்புத்திட்டம் (VRCC) ஆகிய உலக வங்கி நிதியுடன் கூடிய திட்டங்களின் மூலம் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. **31.12.2011** அன்று ETRP திட்டம் முடிவு பெற்றதைத் தொடர்ந்து இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளை நிறைவு செய்யும் வகையிலும் மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி பேரிடர் அபாய குறைப்பு முயற்சிகளை மேற்கொள்ளும் வகையிலும் கூடுதல் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டது. அதன்படி கடலோர பேரிடர் அபாயம்

குறைப்பு திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

### 2.8.4.1 மீன்வளத்துறையில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள்

இத்திட்டமானது மீன்வளத்துறை உள் கட்டமைப்புகளை மேம்படுத்தவும், மீன்வள மேலாண்மையில் கூட்டு மேலாண்மை அணுகு முறைகளை உருவாக்குதல் மற்றும் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நோக்கமுடையதாகும். அதன்படி மல்லிப்பட்டினம் மற்றும் புன்னக்காயல் கிராமங்களின் மீன்பிடி துறைமுகங்களை புதுப்பிக்கவும், மறுகட்டமைக்கவும், நிலையான கடலோர வரத்துக்காகவும் ரூ.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.8.4.2 மீன்வளத்துறையின் FIMSUL-II பணிகள்

உள்ளூர் சூழ்நிலைக்குத் தக்கவாறு மீன்பிடி தொழிலில் கூட்டு மேலாண்மையை உருவாக்கி மீன்பிடி தொழிலில் வாழ்வாதார முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை உருவாக்குவது FIMSUL II பணிகளின் நோக்கமாகும். ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு

(FAO) இத்திட்டத்தில் இணைந்து ஒரு தொழில்நுட்ப கூட்டுறவு திட்டத்தினை உருவாக்கி இத்திட்டத்திற்கான திட்ட அறிக்கையினை இறுதி செய்ய உதவி செய்து வருகிறது.

**2.8.4.3 மீனவர்களுக்கு கம்பியில்லா தகவல் தொடர்பு வசதி ஏற்படுத்துதல்**

இத்திட்டத்தின் கீழ் கடல் மீனவர்களுக்கு எல்லா நேரமும் தகவல் தொடர்பு இணைப்பு இருக்கும் வகையிலான தொலை தொடர்புகளுக்கான சாதனங்களை வழங்குவதன் மூலம் குறிப்பாக பேரிடர் காலங்களில் அத்தியாவசியமான செய்திகளை அனுப்பி அவர்களை முன்னெச்சரிக்கை செய்து பாதுகாப்பளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி மீனவர்களுக்கு செல்லிடை பேசி மிக அதிவேக அதிர்வெண் கொண்ட ரேடியோ அலைகள் (VHF), அதிவேக அதிர்வெண் கொண்ட ரேடியோ அலைகள் (HF) மற்றும் செயற்கைக்கோள் தொலைபேசிகள் ஆகியவற்றை கடலில் அவர்கள் மீன்பிடிக்கச் செல்லும் தூரத்தை பொறுத்து வழங்குவதற்கு மீன் வளத்துறை திட்டமிட்டு வருகிறது.

**2.8.5 தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமைக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகள்:**

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமையின் நிறுவன அமைப்பினை வலிமைப்படுத்துவதற்காக பேரிடர் மேலாண்மைக்கான மையம் ஒன்றினை ரூ. 10 கோடி செலவில் உருவாக்கவும், ரூ. 17.50 கோடி செலவில் GIS மையம் ஒன்றினை உருவாக்கி கொள்கை முடிவுகள் எடுப்பதற்கான தொழில்நுட்ப தகவல்களை வழங்குவதற்கும் உத்தேசிக்கப் பட்டுள்ளது. பேரிடர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வை பள்ளி மாணவர்களிடையே உருவாக்குவதற்காக பள்ளி பாடத்திட்டங்களில் பேரிடர் மேலாண்மை குறித்து பாடங்களை சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டங்களில் பேரிடர் மேலாண்மைப் பணிகளை ஒருங்கிணைத்து மேற்கொள்வதற்காக அனைத்து 32 மாவட்டங்களிலும் தலா ஒரு வட்டாட்சியர் (பேரிடர்

மேலாண்மை) பணியிடம் இதர சார்நிலைப் பணியாளர்களுடன் உருவாக்கப்பட உள்ளது. இப்பணியாளர்கள் வருவாய் நிருவாக ஆணையர் / மாநில நிவாரண ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டில் பணியாற்றுமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடலோர பேரிடர் அபாயம் குறைப்புத் திட்டமானது நிறைவுபெறும் போது அனைத்து விதமான பேரிடர் வாய்ப்புகளிலிருந்தும் மாநிலம் பாதுகாப்பாக அமைவதுடன் பேரிடர்களை எதிர்கொள்வதற்கான வலிமையை சமுதாயத்திற்கு வழங்குவதாகவும் அமையும்.

# 3. நில நிருவாகம்

## 3.1 முன்னுரை

நில நிருவாகத்துறை, முன்பு செயல்பட்டு வந்த வருவாய் வாரியத்திலிருந்து உருவாக்கப்பட்டு நிலம் தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு 1980 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இத்துறை மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு நிலங்களையும் நிருவகிப்பது, விவசாய நில ஒப்படை மற்றும் வீட்டுமனை ஒப்படை, நிலக்குத்தகை, நில உரிமை மாற்றம், நில மாற்றம் மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றுதல் போன்ற முக்கியமான பொருண்மைகளை கையாளுகிறது. மேலும், பொது நோக்கங்களுக்காகத் தேவைப்படும் தனியார் நிலத்தினை கையகப்படுத்தும் நில எடுப்பு நடவடிக்கைகளை மேற்பார்வையிடுகிறது. இதைத் தவிர பதிவு மாற்ற நிகழ்வுகளின் (பட்டா மாற்றம்) முன்னேற்றத்தை கண்காணிப்பது மட்டுமன்றி, நத்தம் நிலவரித் திட்டம் மற்றும் நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உள்ள முறையீட்டு அதிகாரங்களையும் செயல்படுத்தி வருகிறது. மேலும், தொழில் நோக்கங்களுக்காக பாசன நீரை பயன்படுத்துவதை ஒழுங்குபடுத்தும் பணி மற்றும் சிறு பாசன கணக்கெடுப்பு ஒருங்கிணைப்பு அலுவலகமாகவும் செயல்பட்டு வருகிறது.

துறைத் தலைவரான நில நிருவாக ஆணையருக்கு மூன்று இணை ஆணையர்கள் மற்றும் ஐந்து உதவி ஆணையர்கள் துணை புரிகின்றனர். மாவட்ட அளவில் நிலம் தொடர்பான பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள் வாயிலாக செயல்படுத்தப்படுகின்றன.

### 3.2 பட்டா மாற்றம்

வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு பட்டா மாறுதல் வேண்டி மனுதாரர்கள் அடிக்கடி செல்வதையும், கால விரயத்தையும் தவிர்க்கும் பொருட்டு நடைமுறையில் உள்ள பட்டா மாற்ற முறை ஒழுங்குப்படுத்தப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் **10.06.2011** அன்று அறிவித்தார்கள். மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, கிராம நிருவாக அலுவலர்கள் பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் பெறுவதற்கு ஏதுவாக வருவாய் நிலை எண். **31(8)** இல் தகுந்த திருத்தங்கள் செய்யப்பட்டு, அரசாணை **(நிலை) எண்.209**, வருவாய் [நி.அ**1(1)**] துறை, நாள் **09.07.2011** இல் ஆணை வெளியிடப்பட்டது. அவ்வரசாணையில், பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் மீது குறித்த கால அளவிற்குள் நடவடிக்கை மேற்கொள்ள கால வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது தவிர, அரசாணை **(நிலை) எண்.210,**

வருவாய் [நிஅ1(1)] துறை, நாள் 08.07.2011 இல் பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் பெறுவது குறித்தும், அவற்றின் மீது நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும் விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், மேற்கண்ட அரசாணைகளின்படி மனுதாரர்கள் பட்டா மாறுதல் உத்தரவு பெறும்போது, உட்பிரிவு கட்டணத்தை செலுத்தினால் போதுமானதாகும்.

### 3.2.1 விரைவு பட்டா மாறுதல் திட்டம்

மேற்குறிப்பிட்ட இரு அரசாணைகளில் அறிமுகப்படுத்தப்பட்ட விரைவு பட்டா மாறுதல் திட்டத்தின் சிறப்பம்சங்கள் பின்வருமாறு:

(1) கிராம நிருவாக அலுவலர் பட்டா மாறுதல் கோரும் மனுக்களை தனது கிராமத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும், கூடுதல் பொறுப்பு வகிப்பின், அத்தகைய கிராமத்தில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையன்றும் பெறுவதோடு, அதற்கான ஒப்புதல் சீட்டும் வழங்க வேண்டும்.

(2) வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் பட்டா மாறுதல் நாளாக அனுசரிக்கப்படுவதோடு, அன்றைய தினத்திலேயே பட்டா மாறுதல் உத்தரவு வழங்குவது குறித்து தீர்வு மேற்கொள்ளப்படும். அந்நாளன்று வட்டாட்சியர் அலுவலகத்தில் கிராம நிருவாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் நில அளவர்கள் முழுமையாக ஈடுபடுகின்றனர்.

(3) உட்பிரிவு அல்லாத இனங்களில் 15 நாட்கள் எனவும், உட்பிரிவுக்கு உட்பட்ட இனங்களில் 30 நாட்கள் எனவும் காலவரையறை நிர்ணயம் செய்யப்பட்டு, பட்டாமாறுதல் விண்ணப்பங்கள் மீது முடிவெடுக்கப்படும்.

(4) இதன்படி உட்பிரிவு அற்ற இனங்களில் மனுதாரர் மனு அளித்த நாளிலிருந்து இரண்டாவது வியாழக்கிழமைகளில் வட்டாட்சியர் அலுவலகத்தில், தங்கள் மூல ஆவணங்கள் / பதிவுருக்களை ஒப்படைத்து சம்பந்தப்பட்ட மண்டல துணை வட்டாட்சியரிடமிருந்து தங்களது பட்டா மாறுதல் உத்தரவினைப் பெற்றுக் கொள்ளலாம்.

(5) உட்பிரிவு செய்யப்பட வேண்டிய இனங்களில், நில அளவர்கள் புலத்தணிக்கை மேற்கொண்ட பின்னர் அதன் அடிப்படையிலேயே வட்டாட்சியர் உத்தரவிட வேண்டியிருப்பதால், மனுதாரர் முழு விவரங்களுடன் மனு அளித்த நாளிலிருந்து நான்காவது வியாழக்கிழமையன்று பட்டாமாறுதல் உத்தரவினைப் பெறலாம்.

(6) பட்டா மாறுதல் வேண்டி பெறப்பட்ட மனுக்களின் தொகுப்பின் மீதான முன்னேற்றத்தினை ஆய்வு செய்யும் பொருட்டு ஒவ்வொரு திங்கட்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் வருவாய் ஆய்வாளர் மற்றும் மண்டல துணை வட்டாட்சியர் கிராமங்களுக்கு வருகை தருவர். நில நிருவாக ஆணையரால் இத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

### 3.2.2 திட்ட முன்னேற்றம்

இத்திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் **31.03.2014** முடிய **37,76,190** பட்டா மாறுதல் உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

### 3.2.3 சிறப்பு விரைவு பட்டா மாறுதல் முகாம்கள்

குக்கிராமங்களில் வசித்து வரும் ஏழை மனுதாரர்களும் பயனடையும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, **10.10.2013** முதல் வட்டாட்சியர் அலுவலகங்களில் அனைத்து வியாழக்கிழமைகளிலும் மாவட்ட ஆட்சியர்கள் / மாவட்ட வருவாய் அலுவலர்களின் தனிப்பட்ட கண்காணிப்பின் கீழ் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, இச்சிறப்பு முகாம்கள் வாயிலாக **10.10.2013** முதல் **31.03.2014** வரை **2,47,938** விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / மாவட்ட வருவாய் அலுவலர்களால் பெறப்பட்டு, பட்டா மாறுதல் உத்தரவுகள் நேரில் வழங்கப்பட்டுள்ளன.

### 3.2.4 சார் – பதிவாளர் அலுவலகம் வாயிலாக பெறப்பட்ட பட்டா மாறுதல் விண்ணப்பங்களை முறைப்படுத்த எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள்

பெரம்பலூர், கன்னியாகுமரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் செயல்படுத்தப் பட்டுவரும் நடைமுறையின் அடிப்படையில் பத்திர பதிவுத்துறை மற்றும் வருவாய்த்துறையின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து சார்பதிவாளர் அலுவலகங்கள் மூலமாக பெறப்படும் பட்டா மாறுதல் மனுக்களின் மீது (STR Stream) துரித நடவடிக்கை

மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக, மாவட்ட ஆட்சியர்களுக்கும், பிப்ரவரி 2014 இல் நடத்தப்பட்ட கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கும், விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. வருகின்ற மாதங்களில் அனைத்து மாவட்டங்களும் இந்த திருத்திய முறையை பின்பற்றுவதன் மூலம், இத்திட்டத்தின் ஒளிவுமறைவற்ற தன்மையானது மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 3.3 வீட்டுமனை ஒப்படை

வீட்டுமனை ஒப்படை, வருவாய் நிலை ஆணை எண்.21 இன் கீழ் வரையறைக்குட்பட்டு ஒப்படை செய்யப்படுகிறது. ஆட்சேபகரமான புறம்போக்குகள் மற்றும் நீர்நிலைப் புறம்போக்குகள் போன்ற இனங்களைத் தவிர்த்து, பிற ஒப்படை செய்யக் கூடிய நிலங்கள் தகுதியுள்ள நபர்களுக்கு வீட்டுமனைக்காக ஒப்படை செய்யப்படுகின்றது. கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில் ஆண்டு வருமானம் ரூ. 30,000 க்கும் குறைவாக உள்ள, வீடில்லா ஏழை குடும்பங்களுக்கும், நகர்ப்புறங்களைப் பொறுத்த வரையில், குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ. 50,000 க்கும் குறைவாக உள்ள வீடில்லா ஏழை குடும்பங்களுக்கும் இலவச

வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. குடும்பத்தில் உள்ள பெண் உறுப்பினர்களின் பெயரில் மட்டுமே வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. தற்போது, நடைமுறையிலுள்ள விதிகளின்படி கிராமங்களில் மூன்று சென்ட், நகராட்சி எல்லைக்குள் ஒன்றரை சென்ட், மாநகராட்சி எல்லைக்குள் ஒரு சென்ட் என்ற அளவில் வீட்டுமனைக்காக நிலம் வழங்கப்படுகின்றது. அரசாணை (நிலை) எண்.248, வருவாய்த்துறை, நாள் 28.7.2009 இன்படி பல்வேறு நிலையிலான வருவாய்த் துறை அலுவலர்களுக்கு வீட்டுமனை ஒப்படைக்கென கீழ்க்கண்டவாறு நிதி அதிகார வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை – 3.1 வீட்டுமனை ஒப்படை செய்வதற்கு அதிகாரிகளின் நிதி உச்சவரம்பு**

| வ.எண் | அலுவலர்கள் | நிதி வரம்பு (நில மதிப்பு) |
|---|---|---|
| 1. | வட்டாட்சியர் | ரூ. 30,000/– வரை |
| 2. | கோட்டாட்சியர் | ரூ. 50,000/– வரை |
| 3. | மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ. 1,00,000/– வரை |
| 4. | மாவட்ட ஆட்சித் தலைவர் | ரூ. 4,00,000/– வரை |
| 5. | நில நிருவாக ஆணையர் | ரூ. 5,00,000/– வரை |
| 6. | அரசு | ரூ. 5,00,000/– க்கும் மேல் |

வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கு தமிழக அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருவதுடன்

2013–14 ஆம் நிதி ஆண்டிற்கு 2 இலட்சம் வீட்டுமனைப் பட்டா வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. 31.03.2014 முடிய 2,17,723 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு இலக்கு எய்தப்பட்டுள்ளது.

## 3.4 நிலமாற்றம்

அரசு நிலங்கள் வருவாய் நிலை ஆணை 23 இன் கீழ் மத்திய அரசு துறைகளுக்கு நிலக்கிரயம் வசூலித்துக் கொண்டும், வருவாய் நிலை ஆணை எண். 23ஏ இன் கீழ் மாநில அரசு துறைகளுக்கு நிலக்கிரயமின்றியும் நிலமாற்றம் செய்யப்படுகின்றன.

மாநில மற்றும் மத்திய அரசு துறைகளுக்கு அரசு நிலங்கள் தேவைப்படின் கேட்புத்துறை சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில் தேவை மற்றும் இருப்பிலுள்ள தகுந்த நிலம் ஆகியவற்றை ஆய்வு செய்து நிலமதிப்பினை பொறுத்து நிலமாற்ற முன்மொழிவினை அரசுக்கு நில நிருவாக ஆணையர் வழியாக மாவட்ட ஆட்சியர் அனுப்புவார்.

மாநில அரசுத் துறைகளான, சுகாதாரம், கல்வி மற்றும் காவல் துறைகளுக்கு நீர்நிலைப் புறம்போக்கு, மயானம், பாதை

போன்ற தடையாணைக்குட்பட்ட நிலங்கள் நீங்கலாக ஏனைய இதர நிலங்களை நிலமதிப்பு வரம்பின்றி வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப் பட்டுள்ளது.

நிலமாற்ற இனங்களில், மேய்க்கால் (அல்லது) மந்தைவெளிப் புறம்போக்கு நிலங்கள் உட்படுகையில், நில மாற்றம் செய்யப்படும் பரப்புக்கு ஈடான மாற்று நிலம் வருவாய் மற்றும் கால்நடை பராமரிப்பு துறையினரால் கூட்டுப் புலத்தணிக்கை மூலம் கண்டறியப்பட வேண்டும். அந்த மாற்று நிலத்தை மேம்படுத்துவதற்கு மேம்பாட்டுக் கட்டணமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.6,000 அல்லது எக்டேர் ஒன்றுக்கு ரூ.15,000 வீதம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புக்கு கேட்புத்துறை செலுத்த வேண்டும். அந்த உள்ளாட்சி அமைப்பானது மேற்படி மாற்று நிலத்தை மேம்படுத்தி கால்நடைகள் மேய்வதற்கு அனுமதிக்க வேண்டும். மேற்படி மாற்று நிலம் கால்நடைகள் மேய்வதற்கு மட்டும் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும், அதன் உரிமையோ வருவாய்த்துறையிடமே இருக்கும்.

அரசுத் துறைகளுக்கு நிலமாற்றம் செய்யப்படும் நிலங்கள் எந்த நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டனவோ, அதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். அரசு

நிலங்களுக்கு வருவாய்த்துறையே பாதுகாவலராக உள்ளபடியால், பயன்படுத்தப்படாத நிலங்களை மீளப் பெற்று, இதர துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் வருவாய்த் துறைக்கு உள்ளது.

### 3.5 நில உரிமை மாற்றம்

அரசு நிலங்கள் வருவாய் நிலை ஆணை எண். 24 இன் கீழ் பொதுப் பயன்பாட்டிற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கும், அரசு நிறுவனங்கள் / கழகங்கள்/வாரியங்கள் / பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றிற்கும் சில அரிய நேர்வுகளில் தனியார் நிறுவனங்களுக்கும் அவற்றின் தேவை அவசியம் எனும் பட்சத்தில் அரசின்வசம் நிலம் இருக்கும்பட்சத்தில் நிலஉரிமை மாற்றம் செய்யப்படுகிறது. மேற்படி நிலங்கள் வணிக நோக்கமில்லாத பயன்பாட்டிற்காக மாற்றம் செய்யப்பட்டால் இதன் நிலமதிப்பு மட்டுமே வசூல் செய்யப்படும். வணிக நோக்கத்திற்காக உரிமை மாற்றம் செய்யும்போது இருமடங்கு நில மதிப்பு வசூல் செய்யப்படும். முழு நில கிரயத்தை வசூலித்துக் கொண்டு நில உரிமை மாற்றம் செய்யப்படும் இனங்களில் விதிக்கப்படும் நிபந்தனைகளில் ஏதேனும் மீறப்படுமானால் நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட நிலங்களை இழப்பீட்டுத் தொகை ஏதுமின்றி மீளப் பெறப்படுகின்றன.

சில சிறப்பு நேர்வுகளில் பொது நலன் கருதி குடிநீர் திட்டப் பணிகள் உள்ளாட்சி அமைப்புகளிலும் மற்றும் சென்னை மாநகரிலும் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியம் போன்றவற்றிற்கும் அரசு நிலங்கள் நிலக் கிரயமின்றி நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. அதேபோல் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டுவதற்கும், அரசு நிலங்கள் இலவசமாக நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன.

### 3.6 நில குத்தகை

அரசுக்கு சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டடங்கள் வேளாண்மை அல்லாத பிற நோக்கங்களுக்காக உள்ளாட்சி அமைப்புகள், நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், பிற சங்கங்கள், நம்பகங்கள், தனியார் மற்றும் தனியார் அமைப்புகளுக்கு வருவாய் நிலை ஆணை எண் 24ஏ இன் கீழ் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு குறைந்தபட்சம் 3 ஆண்டுகளுக்கும், அதிகபட்சமாக 30 ஆண்டுகளுக்கும் தற்காலிக அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்படுகின்றன.

தற்போது நடைமுறையிலுள்ள ஆணைகளின்படி ஆண்டு ஒன்றுக்கு வணிகமற்ற நோக்கத்திற்கு நிலத்தின் மதிப்பில் 7 விழுக்காடும் (கூடுதல் மேல்வரி உட்பட) வணிக நோக்கத்திற்கு 14 விழுக்காடும் (கூடுதல் மேல் வரி உட்பட) குத்தகை கட்டணமாக நிர்ணயம் செய்யப்படுகிறது.

நீண்ட காலக் குத்தகை இனங்களில், ஆண்டு குத்தகைக் கட்டணம் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மறு நிர்ணயம் செய்யப்படுகிறது. சந்தை மதிப்பு மற்றும் வழிகாட்டி பதிவேட்டின் மதிப்பு இவற்றில் எது அதிகமோ, அதன் அடிப்படையில் குத்தகை தொகை நிர்ணயம் செய்யப்படுகிறது. இருப்பினும் சில சிறப்பு நேர்வுகளில் பொது நலன் கருதி பெயரளவு ஆண்டுக் குத்தகையும், நீண்டகாலக் குத்தகையும் அரசால் வழங்கப்படுகிறது. குத்தகை வழங்குதல் மற்றும் புதுப்பித்தலுக்கான நிதி அதிகார வரம்பு கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண் 60, வருவாய்த்துறை, நாள் 6.2.1999)

**அட்டவணை –3.2 குத்தகை வழங்குவதற்கான நிதி அதிகார வரம்பு கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது**

| அலுவலர்கள் | நிதி அதிகார வரம்பு (ரூ.) |
|---|---|
| வட்டாட்சியர் | ஏதுமில்லை |
| வருவாய் கோட்ட ஆட்சியர் | ரூ.20,000/– |
| மாவட்ட ஆட்சித் தலைவர் / மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ.50,000/– |
| நில நிருவாக ஆணையர் | ரூ.2,00,000/– |
| அரசு | ரூ.2,00,000/–க்கு மேல் |

## 3.7 உப்பள நிலங்களை குத்தகைக்கு வழங்குதல்

வருவாய் நிலை ஆணை எண் 24அ ன்படி, கடற்கரை பகுதியில் உள்ள உப்பள நிலங்கள் உப்பு உற்பத்தி செய்ய குத்தகை அடிப்படையில் வழங்கப்படுகிறது.

தமிழகத்தில் உப்பு உற்பத்திக்காக வழங்கப்படும் நிலங்களுக்கு குத்தகைத் தொகை மற்றும் உரிமத்தொகை கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | குத்தகைத் தொகை | ரூ.5/– வீதம் ஒரு ஏக்கருக்கு/ ஒரு வருடத்திற்கு |
| 2. | உரிமத்தொகை | உற்பத்தி செய்யப்பட்ட உப்பு மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.2/– வீதம் குறைந்தபட்சமாக ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு ரூ.100/– |
| 3. | தலவரி 100 % | ரூ.5/– ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு |
| 4. | தலமேல் வரி 500 % | ரூ.25/– ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு |
| | **மொத்தம்** | **ரூ.135/– ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு** |

இந்த குத்தகைத் தொகை பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாகவே உள்ளது. இவ்வாறு உப்பளங்களுக்கென குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களின் பரப்பளவு 27,777 ஏக்கராகும்.

## 3.8 ஆக்கிரமணங்களை அகற்றுதல்

அரசு நிலங்களை பாதுகாக்கவும், சட்டவிரோதமாக அந்நிலங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும் கீழ்க்காணும் சட்டங்களில் வழி வகை செய்யப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905
- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920

- தமிழ்நாடு நீர்நிலைகள் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் சட்டம், 2007
- தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம், 2001
- தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம், 1994
- தமிழ்நாடு பொதுக் கட்டடம் (அனுமதிக்கப்படாத ஆக்கிரமிப்பு) சட்டம், 1975
- தமிழ்நாடு ஊராட்சி சட்டம், 1958

அரசாணை (நிலை) எண்.41, வருவாய்த் துறை, நாள் 20.01.1987 இல் நீர்நிலை ஆதாரங்களான குளம், குட்டை, ஓடை, கால்வாய் மற்றும் நீர்ப்பிடிப்பு போன்ற நீர்நிலைகளைப் பாதுகாக்கவும், அவற்றில் ஆக்கிரப்புகளைத் தவிர்க்கும் வகையில் மேற்கண்ட நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்த தடை ஆணையும் விதிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையை வழுவாது கடைபிடிக்குமாறு அரசாணை (நிலை) எண்.186, வருவாய்த் துறை, நாள் 29.04.2003 இல் மீண்டும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், சென்னை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை எண்.20186/2000 இல் வெளியிட்ட தீர்ப்பில், மாநிலத்தில் உள்ள அனைத்து நீர்நிலைகளில் உள்ள சட்ட விரோதமான

ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து அகற்றிடவும், அதனை பழைய நிலைக்குக் கொண்டு வரவும் உத்தரவிட்டுள்ளது.

எனவே, நீர்நிலை ஆதாரங்களான குளங்கள், ஆறுகள், ஏரிகள், குட்டைகள் மற்றும் ஏனைய நீர்நிலைப் புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, பொதுப்பணித் துறை மற்றும் காவல்துறையுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு உச்சநீதிமன்ற சிறப்பு விடுப்பு மனு எண்.3109/2011 மற்றும் சிவில் மேல்முறையீட்டு எண்.1132/2011 ஆகியவற்றின் மீது வழங்கப்பட்ட உத்திரவுகளின் அடிப்படையில், கிராமப் பஞ்சாயத்து மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்புவிக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை அகற்றுவதற்கு, அரசு ஒரு திட்டத்தை வகுத்து, அதன்படி ஆக்கிரமணங்களை அகற்றி, அந்நிலங்களை சமுதாய பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 3.9 மீட்கப்பட்ட அரசு நிலங்களை வேலியிட்டு பாதுகாத்தல்

மீட்கப்பட்ட அரசு நிலங்களை வேலியிட்டு பாதுகாக்கும் பொருட்டு, 2011–12, 2012–13 மற்றும் 2013–14 நிதியாண்டுகளில் மொத்தம் ரூ.199.89 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்தத் தொகையானது, மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, நாளது தேதி வரையில் சுமார் ரூ.64.81 கோடி மதிப்புள்ள 301.32 ஏக்கர் பரப்பளவுள்ள அரசு நிலங்கள் மீட்கப்பட்டு வேலியிட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன.

## 3.10 நில எடுப்பு

பொது நோக்கத்திற்காக வளர்ச்சி மற்றும் உள்கட்டமைப்பு முன்னேற்றத்தை உள்ளடக்கி அத்துடன் பாதிக்கப்பட்ட, பின்தங்கிய மக்களின் தேவைகளை பூர்த்தி செய்திடும் பொருட்டு நிலத்தை கையகப்படுத்தும் பணி நில நிருவாகத் துறையின் மேற்பார்வையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 31.12.2013 வரை மத்திய நில எடுப்பு சட்டம் 1894 (சட்டம் 1/1894) இன் கீழ் நிலம் கையகப்படுத்தப்பட்டு வந்தது. இச்சட்டத்தைத் தவிர, மாநில அரசு சமூக ரீதியாக பின்தங்கியுள்ள வகுப்பினர்களுக்கு வீட்டுமனை மற்றும் பிற

தேவைகளுக்கு நிலம் வழங்கவும், அத்துடன் தொழில் ரீதியான உள்கட்டமைப்பு வளர்ச்சிக்காகவும் நெடுஞ்சாலை வளர்ச்சிக்காகவும் பின்வரும் மூன்று சட்டங்களை நிறைவேற்றியுள்ளது.

- தமிழ்நாடு ஆதி திராவிடர் நல நில எடுப்பு சட்டம், 1978 (31/1978)
- தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்பு சட்டம், 1997 (10/1999)
- தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம், 2001 (தமிழ்நாடு சட்டம் 34/2002)

மத்திய அரசு முன்னர் நடைமுறையில் இருந்து வந்த மத்திய நில எடுப்பு சட்டம், 1894 யை ரத்து செய்துவிட்டு, புதிய நில எடுப்பு சட்டமான நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான இழப்பீடு மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமைச்சட்டம் 2013 (எண்.30/2013) (RFCTLARR Act) இயற்றி உள்ளது. இச்சட்டம் 01–01–2014 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்த புதிய நில எடுப்பு சட்டத்தின்படி, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு நிலம் கையகப்படுத்தப்படுவதில் ஒருங்கிணைந்த

பகுதியாகியுள்ளது. மேற்படி புதிய நில எடுப்பு சட்டத்தினை மாநிலத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பான கொள்கை முடிவு அரசளவில் முடிவு செய்திடும் நிலையில் உள்ளது.

இதற்கிடையில் சமூகத்தில் பின்தங்கிய மக்களின் நலன்கள் பாதிக்கப்படாமல் இருக்கவும், நெடுஞ்சாலைகள் உட்பட உட்கட்டமைப்பு திட்டங்கள் தடைபடாமல் இருக்கவும் உறுதி செய்யப்பட வேண்டும். மேற்படி புதிய (RFCTLARR Act - 2013) சட்டத்தின் பிரிவு 105 இன்படி 4 ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 13 மத்திய சட்டங்களின் கீழ் நிலம் தொடர்ந்து கையகப்படுத்துவதற்கு இச்சட்டம் நடைமுறையில் வந்த நாள் முதல் ஒரு ஆண்டு காலத்திற்கு சில நிபந்தனைக்குட்பட்டு விலக்களிக்கப்பட்டுள்ளது.

மாநில அரசின் நிலம் கையகப்படுத்திடும் மூன்று சட்டங்களும் மேற்குறிப்பிட்ட விலக்களிக்கப்பட்ட 13 சட்டங்களை ஒத்துள்ளது. இம்மாநில சட்டங்கள் புதிய நில எடுப்பு சட்டத்தினால் ரத்து செய்யப்படவோ அல்லது விலக்களிக்கப்படவோ (overriding) இல்லை. ஏற்கனவே புதிய நில எடுப்புச் சட்டம் அமலாக்கப்பட்டதிலிருந்து ஒரு வருட காலத்திற்கு விலக்களிக்கப்பட்டுள்ள 13 மத்திய சட்டங்களைப் போன்று மாநில அரசின் மூன்று சட்டங்களின்

கீழ், தொடர்ந்து நிலம் கையகப்படுத்துவதற்கு ஏதுவாக மேற்படி மூன்று மாநில சட்டங்களை மத்திய சட்டம் **30/2013** ஐந்தாவது அட்டவணையில் சேர்த்து திருத்தம் வெளியிட மாநில அரசால் மசோதா நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், ஏற்கனவே மத்திய நில எடுப்புச் சட்டம் **1894** இன் கீழ் நடவடிக்கை தொடரப்பட்ட இனங்களில் அதாவது, பிரிவு **4(1)** இன் கீழான வரைவு அறிவிக்கை வெளியிடப்பட்ட நேர்வுகளில், புதிய நில எடுப்புச் சட்டம் **24 (1)** (a) இன் படி நிலம் கையகப்படுத்துவதற்கு தேவையான பின்வரும் வழிமுறைகள் அரசின் வருவாய்த் துறையால் அரசாணை (நிலை) எண். **88,** வருவாய்த் துறை, நாள் **21–02–2014** இல் வெளியிடப்பட்டுள்ளது.

- மத்திய நில எடுப்புச் சட்டம் **1894** பிரிவு **4(1)** இன் கீழான வரைவு அறிவிக்கை வெளியிடப்பட்ட நேர்வுகளில் தொடர்ந்து பிரிவு **6** இன் கீழான வரைவு விளம்பல் வெளியிடலாம். இருப்பினும், இந்த இனங்களுக்கு இடைக்கால இழப்பீட்டுத் தொகை ஏற்கனவே இருந்த மத்திய நில எடுப்புச் சட்டம் **1894** இன் கீழ் நிர்ணயம் செய்து வழங்கிடவும், அதன்பின் புதிய மத்திய நில எடுப்புச் சட்டத்தின் கீழ் கூடுதல்

இழப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்து வழங்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

- மேலும் மத்திய நில எடுப்புச் சட்டம் **1894**, பிரிவு **4(1)** இன் கீழான வரைவு அறிவிக்கை ஏற்கனவே தொடரப்பட்டு, பிரிவு **6** இன் கீழான வரைவு விளம்பல் வெளியிடப்பட்ட நேர்வுகளில் மேலே பத்தி **(i)** இல் கண்டுள்ளவாறு இழப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து, தமிழ்நாடு தொழிலியல் நோக்கத்திற்காக நிலம் கையகப்படுத்தப்படும் சட்டம் **1997** மற்றும் தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம் **2001** ஆகிய சட்டங்களின் கீழ் நில எடுப்பு நடவடிக்கைகள் தொடரப்பட்ட இனங்களில், புதிய நில எடுப்புச் சட்டம் (RFCTLARR Act) **(**தமிழ்நாடு திருத்த மசோதா **2014)** அடிப்படையில், இடைக்கால இழப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்வது குறித்து, அரசாணை **(**நிலை**)** எண்.**45,** தொழிற்துறை நாள் **14.5.2014** மற்றும் அரசாணை **(**நிலை**)** எண்.**59,** நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, நாள் **29.05.2014** இல் ஆணையிடப்பட்டுள்ளது.

## 3.11 சிறுபாசனக் கணக்கெடுப்பு புள்ளி விவர பகுத்தாய்வு விவரம் (ஆர்.எம்.ஐ.எஸ்)

சிறுபாசனத் திட்டங்கள் தொடர்பான விரிவான புள்ளி விவரங்களைச் சேகரித்து ஒருமைப்படுத்தும் நோக்கத்துடன் மத்திய அரசின் நிதியுதவியுடன் சிறுபாசனப் புள்ளி விவர சீரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கணக்கெடுப்பின் ஒருங்கிணைப்பாளராக நில நிருவாக ஆணையரை தமிழக அரசு நியமித்துள்ளது.

சிறுபாசனக் கணக்கெடுப்புத் திட்டம் கீழ்க்காணும் நோக்கங்களுக்காக தொடங்கப் பட்டுள்ளது.

- ஒவ்வொரு ஐந்தாண்டும் சிறுபாசனக் கணக்கெடுப்பு நடத்தி அதன் மூலம் தமிழகத்தில் உள்ள அனைத்து சிறுபாசனத் திட்டங்களும் கணக்கெடுக்கப் படுகின்றன.
- சிறுபாசனத் திட்டங்கள் தொடர்பான புள்ளி விவரத் தொகுப்பினை பகுத்தாய்வு செய்து காலாண்டு மற்றும் ஆண்டறிக்கை தயாரித்து மத்திய அரசிற்கு அனுப்பப்படுகின்றன.

## 3.11.1 நான்காவது சிறுபாசனக் கணக்கெடுப்பு (2006–2007)

நான்காவது சிறுபாசனக் கணக்கெடுப்பு, 2006–07ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு நடத்தப்பட்டது. இக்கணக்கெடுப்பின்போது நிலத்தடி நீர்ப்பாசனத்திட்டங்கள் மற்றும் நீர்மேற்பரப்பு பாசனத் திட்டங்கள் ஆகியவை கணக்கெடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை–3.3 சிறுபாசனத் திட்டம் வாரியான புள்ளி விவரம்**

| வரிசை எண். | திட்டத்தின் வகை | திட்டங்களின் எண்ணிக்கை | விழுக்காடு |
|---|---|---|---|
| நிலத்தடி நீர்த்திட்டம் | | | |
| 1. | தோண்டப்பட்ட கிணறு | 15,89,216 | 83.10 |
| 2. | ஆழம் குறைவான குழாய் கிணறு | 1,16,479 | 6.09 |
| 3. | ஆழ்துளைகுழாய் கிணறு | 1,60,607 | 8.40 |
| மேற்பரப்பு நீர்பாசனத்திட்டம் | | | |
| 4. | நீர் மேற்பரப்பு பாசனத்திட்டம் | 38,969 | 2.04 |
| 5. | நீரேற்றுப் பாசனத்திட்டம் | 6,999 | 0.37 |
| | மொத்தம் | 19,12,270 | 100.00 |

### 3.11.2 ஐந்தாவது சிறுபாசனக் கணக்கெடுப்பு (2013–14)

மத்திய அரசு ஐந்தாவது சிறுபாசனக் கணக்கெடுப்பினை மத்திய அரசின் நிதியுதவியுடன் **2013–14** ஆண்டை மேற்கோள் ஆண்டாகக் கொண்டு ஆகஸ்ட், **2014** முதல் நடத்த திட்டமிட்டுள்ளது. இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தவும், அதற்கான பயிற்சிகள் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டு, உரிய நிதி ஒதுக்கிடு கோரி மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

## 3.12 சிறப்பு முயற்சிகள்

### 3.12.1 தொன்மையான நிலப்பதிவுருக்களை எண் முறைமயமாக்கல் (Digitalization)

எதிர்கால பயன்பாட்டிற்காக, தொன்மை வாய்ந்த நிலப்பதிவுருக்களை பாதுகாக்கும் பொருட்டு, சென்னை மாவட்ட ஆட்சியரகம் மற்றும் அதன் வட்ட அலுவலகங்களில்

"எல்காட்" நிறுவனத்தின் மூலம் பதிவுருக்களை எண்முறை மயமாக்கும் திட்டம் துவங்கப்பட்டது. இதற்கென **2013–14** ஆம் ஆண்டில் பகுதி–II திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.**50** லட்சத்தில் 'எல்காட்' நிறுவனத்திற்கு ரூ.**6.31** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மீதமிருக்கும் தொகையினைக் கொண்டு காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலும் இத்திட்டத்தினை விரிவுபடுத்தும் பொருட்டு முதற்கட்ட வேலைகள் துவங்கப்பட்டுள்ளன.

**3.12.2 அரசு நிலவங்கி திட்ட உருவாக்கம் மற்றும் மேலாண்மை**

அரசு நிலங்களை நிருவகிக்கவும், பாதுகாக்கவும், **2013–14** ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் மின்னனு அரசு நிலவங்கி திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு ரூ.**50** லட்சத்தினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தினை தேசிய தகவல் தொடர்பு மையம் மற்றும் எல்காட் நிறுவனம்

மூலம் செயல்படுத்தும் பொருட்டு தேசிய தகவல் தொடர்பு மையத்திற்கு ரூ.7.5 இலட்சமும், எல்காட் நிறுவனத்திற்கு ரூ.9.28 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென விரிவான வழிமுறைகள் வகுக்கப்பட்டு, எதிர்வரும் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

## 4. நிலச்சீர்திருத்தம்


தமிழ்நாடு வருவாய் வாரிய நீக்கச் சட்டம், 1980 (தமிழ்நாடு சட்டம் 36/1980) பிரிவு 3ன் கீழ் 01.12.1980 அன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியான அறிவிக்கையின்படி, 01–12–1980 முதல் வருவாய் வாரியம் கலைக்கப்பட்டது. வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட பிறகு கீழ்க்கண்ட துறைகள் உருவாக்கப்பட்டு, ஆணையர்களின் கீழ் 01–12–1980 முதல் இயங்கி வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | வருவாய் நிருவாகத் துறை | வருவாய் நிருவாக ஆணையர் |
| 2. | நிலநிருவாகத் துறை | நில நிருவாக ஆணையர் |
| 3. | நிலச்சீர்திருத்தத் துறை | நிலச்சீர்திருத்த ஆணையர் |

### 4.1 கட்டமைப்பு

நிலச்சீர்திருத்தத் துறையின் கீழ் நிலச்சீர்திருத்தம், வருவாய் நீதிமன்றம், பூமிதானம் மற்றும் முதலமைச்சரின்

உழவர் பாதுகாப்புத் திட்டம் ஆகியவை அடங்கும். நிலச்சீர்திருத்தத் துறையின் கட்டமைப்பு கீழ்க்கண்டவாறு:




உதவி ஆணையர்கள் (நிலச்சீர்திருத்தம்) மற்றும் தனித் துணை ஆட்சியர்கள் (வருவாய் நீதிமன்றம்) அதிகார எல்லை கீழ்க்கண்டவாறு :

# உதவி ஆணையர்கள் (நிலச்சீர்திருத்தம்)

| | | |
|---|---|---|
| 1. | விழுப்புரம் | விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் |
| 2. | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, பெரம்பலூர், கரூர் மற்றும் அரியலூர் மாவட்டங்கள் |
| 3. | மதுரை | மதுரை, இராமநாதபுரம், தேனி, திண்டுக்கல் மற்றும் சிவகங்கை மாவட்டங்கள் |
| 4. | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் |
| 5. | ஈரோடு | ஈரோடு, கோயம்புத்தூர், நீலகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி மற்றும் திருப்பூர் மாவட்டங்கள் |
| 6. | மயிலாடுதுறை | தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் |

## தனித் துணை ஆட்சியர்கள் (வருவாய் நீதிமன்றம்)

| | | |
|---|---|---|
| 1. | கடலூர் | கடலூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் வருவாய் மாவட்டங்கள் முழுவதும் |
| 2. | திருச்சிராப்பள்ளி | பெரம்பலூர், அரியலூர், சேலம், கரூர், புதுக்கோட்டை, நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் நீலகிரி வருவாய் மாவட்டங்கள் முழுவதும் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளி மணப்பாறை மற்றும் திருவரம்பூர் வட்டங்கள் |
| 3. | லால்குடி | திருச்சிராப்பள்ளி வருவாய் மாவட்டத்தில், லால்குடி, முசிறி, மண்ணச்சநல்லூர், துறையூர், தொட்டியம் மற்றும் ஸ்ரீரங்கம் வட்டங்கள் |
| 4. | மதுரை | மதுரை, திண்டுக்கல், தேனி, சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் வருவாய் மாவட்டங்கள் முழுவதும் |
| 5. | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி வருவாய் மாவட்டங்கள் முழுவதும் |
| 6. | திருவாரூர் | திருவாரூர் வருவாய் மாவட்டத்தில் திருவாரூர், குடவாசல், வலங்கைமான், நன்னிலம் மற்றும் நீடாமங்கலம் வட்டங்கள் |
| 7. | மன்னார்குடி | திருவாரூர் வருவாய் மாவட்டத்தில், மன்னார்குடி மற்றும் திருத்துறைப்பூண்டி வட்டங்கள் |
| 8. | மயிலாடுதுறை | நாகப்பட்டினம் வருவாய் மாவட்டத்தில் மயிலாடுதுறை, தரங்கம்பாடி, சீர்காழி மற்றும் குத்தாலம் வட்டங்கள் |
| 9. | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் வருவாய் மாவட்டத்தில், நாகப்பட்டினம் கீழ்வேளூர், திருக்குவளை மற்றும் வேதாரண்யம் வட்டங்கள் |
| 10. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் வருவாய் மாவட்டம் முழுவதும் |

நிலச்சீர்திருத்தத் துறைக்காக ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள் கீழ்க்கண்டவாறு:

## அட்டவணை–4.1 நிலச் சீர்திருத்தத் துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள்

| வ.எண் | பணியிடங்கள் வகை | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | முதன்மைச் செயலாளர் / நிலச்சீர்திருத்த ஆணையர் | 1 |
| 2. | நிலச்சீர்திருத்த இயக்குநர் | 1 |
| 3. | முதன்மைக் கணக்கு அலுவலர் | 1 |
| 4. | உதவி ஆணையர்கள் தனித்துணை ஆட்சியர்கள் (வருவாய் நீதிமன்றம்) உட்பட | 19 |
| 5. | கண்காணிப்பாளர் | 17 |
| 6. | துணை வட்டாட்சியர் | 6 |
| 7. | உதவியாளர், உதவியாளர் நிலை வருவாய் ஆய்வாளர்கள் | 121 |
| 8. | நிலஅளவை சார் ஆய்வாளர் | 14 |
| 9. | சுருக்கெழுத்து தட்டச்சர் | 19 |
| 10. | தட்டச்சர் | 23 |
| 11. | இளநிலை உதவியாளர் | 25 |
| 12. | இதர பணியிடங்கள் | 133 |
| | மொத்தம் | 380 |

## 4.2 நில உச்சவரம்பு கொள்கை

ஒரு சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாய நில உடைமைகள் ஒரு முக்கிய ஆதாரம் என்பதால், விவசாய வேளாண் நில உடைமைகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்கிடும் வகையில், விவசாய நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயித்து, உச்சவரம்புக்கு மேல் உள்ள நிலங்களை கையகப்படுத்தி அதனை நிலமற்ற ஏழைகளுக்கு பிரித்து வழங்குதல் அவசியமாகின்றது.

நில உடைமைகள் ஒரு சிலரிடம் குவிந்து கிடப்பதை பரவலாக்குவதை உறுதி செய்யும் வகையில், இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு **39** இன் உட்பிரிவு (b) மற்றும் (c) இன்படி தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் (நிலஉச்சவரம்பு நிர்ணய) சட்டம் **1961** (தமிழ்நாடு சட்டம் **58/1961**) இயற்றப்பட்டது.

### 4.2.1 நடைமுறையில் உள்ள உச்சவரம்பு

தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நிலஉச்சவரம்பு நிர்ணய) சட்டம், **1961** அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்டு நில உச்சவரம்பு **15.02.1970** முதல் நடைமுறையில் கீழ்க்கண்டவாறு உள்ளது.

# அட்டவணை–4.2 நிலச்சீர்திருத்த சட்டத்தின் கீழ் உள்ள உச்சவரம்பு

| வ.எண் | விவரம் | அனுமதிக்கப்பட்ட நிலப்பரப்பு |
|---|---|---|
| 1. | குடும்பம்<br>(i) ஐந்து நபர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு (தனியார் அறக்கட்டளை மற்றும் நிறுவனம் உட்பட)<br>(ii) ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கு | **15** தர ஏக்கர்<br>**5** தர ஏக்கர் |
| | மொத்த உச்சவரம்பு | **30** தர ஏக்கர் |
| | (iii) இதனைத் தவிர சட்டம் நடைமுறைக்கு வந்த தேதியில் சீதன நிலமாக **10** தர ஏக்கர் குடும்பத்திலுள்ள ஒவ்வொரு பெண் உறுப்பினர் பெயரில் வைத்துக் கொள்ளலாம். | |
| 2. | (i) பொது அறக்கட்டளைகள் (Public Trusts)<br>1.3.1972 தேதியில் இருந்த தர்மஸ்தாபன பொது அறக்கட்டளை (Public Trust of Charitable nature) | **5** தர ஏக்கர் |
| | (ii) **1.3.1972** தேதிக்குப் பிறகு எந்த ஒரு பொது அறக்கட்டளையும் நிலங்களை வாங்க வழிவகை இல்லை. திருத்தச் சட்டம் **29/87**ன்படி நிலங்களை வைத்துக்கொள்ள அரசின் அனுமதி வேண்டும். | |
| | (iii) **1.3.1972** தேதிக்குமுன் இருந்த மத சார்பான பொது அறக்கட்டளை (Religious Trust of Public Nature) நில உச்சவரம்பு சட்டத்திற்குள் வராது. | |

நிலச்சீர்திருத்தச் சட்டப்பிரிவு **3 (40)** இன்படி தர ஏக்கர் என்பது சம்பந்தப்பட்ட நிலத் தீர்வையினை (Assessment) அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது.

**உதாரணம்:**

***நன்செய் நிலம்***

நிலத்தீர்வை ரூ.**4** க்குள் இருந்தால் **2** ஏக்கர் நன்செய் நிலத்திற்கு **– 1** தர ஏக்கர்

***புன்செய் நிலம்***

நிலத்தீர்வை ரூ.**1.25** க்குள் இருந்தால் **4** ஏக்கர் புன்செய் நிலத்திற்கு **– 1** தர ஏக்கர்

### **4.2.2 உபரிநிலங்கள் மற்றும் பகிர்மானம்**

நிலச்சீர்திருத்தச் சட்டம் **58/61** நடைமுறைக்கு வந்த தேதியிலிருந்து **31–03–2014** வரை மிகை நிலமென அறிவிப்பு செய்யப்பட்ட மொத்த பரப்பு, அதில் ஒப்படை செய்யப்பட்டது மற்றும் நீதிமன்ற வழக்குகளில் நிலுவையில் உள்ள நிலப்பரப்பு ஆகியவற்றின் விவரம் பின்வருமாறு:

## அட்டவணை– 4.3 நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் நிலங்கள் உபரியாக அறிவிக்கப்பட்டது மற்றும் ஒப்படை செய்யப்பட்ட விவரம்

| வ.எண் | இனங்கள் | பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. | மிகை நிலமாக அறிவிக்கப்பட்ட நிலப்பரப்பு | 2,08,452 |
| 2. | நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலப்பரப்பு | 1,90,713 |
| 3. | 1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (மிகை நில விநியோகம்) விதிகளின் விதி 13–இன் கீழ் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலப்பரப்பு | 9,609 |
| 4. | நிலங்கள் நீதிமன்ற நடவடிக்கையில் உள்ளவை | 8,130 |

## அட்டவணை—4.4 வருடங்கள் வாரியாக தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (மிகை நில விநியோகம்) விதிகள் 1965 இன்படி ஒப்படை செய்யப்பட்ட பரப்பு

| வ.எண் | ஆண்டு | உபரியாக அறிவிக்கப்பட்ட நிலங்கள் (ஏக்கரில்) | ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள் (ஏக்கரில்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | 1961 முதல் 1970 வரை | 17,102 | 10,496 | 6,399 |
| 2. | 1971 முதல் 1980 வரை | 96,293 | 67,566 | 45,382 |
| 3. | 1981 முதல் 1990 வரை | 61,900 | 64,817 | 58,630 |
| 4. | 1991 முதல் 2000 வரை | 24,341 | 35,164 | 30,700 |
| 5. | 2001 முதல் 2014 (31.03.2014 வரை) | 8,816 | 12,670 | 9,809 |
| | **மொத்தம்** | **2,08,452** | **1,90,713** | **1,50,920** |

## அட்டவணை—4.5 உபரிநிலம் ஒப்படை பெற்ற பயனாளிகளின் விவரம்

| பயனடைந்தோர் இனவாரியாக | நபர்கள் | ஒப்படை செய்யப்பட்ட பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| ஆதிதிராவிடர் | 66,782 | 71,881 |
| பழங்குடியினர் | 240 | 322 |
| மற்றவர்கள் | 83,898 | 1,18,510 |
| **மொத்தம்** | **1,50,920** | **1,90,713** |
| பொதுப்பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலம் | | **9,609** |
| **மொத்தம்** | | **2,00,322** |

### 4.2.3 தொழில் / வணிக நிறுவனங்களுக்கு அனுமதி

நிலச்சீர்திருத்தச் சட்டம், சட்டப்பிரிவு **3 (34)** ன்படி நிறுவனம் என்பது "தனி நபர்" என்ற பொருள் வரையறைக்குட்பட்டது. இதனால் நிறுவனங்கள் **15** தர ஏக்கர் நிலங்கள் வைத்துக் கொள்ளலாம். மாநிலத்தில் தொழில் அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன், தொழில் அல்லது வணிக நிறுவனங்கள் உச்சவரம்பிற்கு மிகையாக நிலங்களை வைத்துக்கொள்ள சட்டப்பிரிவு **37–**A மற்றும் விதிகளின்படி அரசால் அனுமதி வழங்கப்படுகிறது. தற்போதைய திருத்தப்பட்ட சட்டம் மற்றும் விதிகளின்கீழ், திருத்தம் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்தோ அல்லது நிறுவனம் அவ்வாறாக நிலத்தை வாங்கிய நாளிலிருந்தோ **180** நாட்களுக்குள் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

### 4.2.4 பொது அறக்கட்டளைக்கு அனுமதி

பொது அறக்கட்டளைகள் கல்வி அல்லது மருத்துவமனை பயன்பாட்டிற்காக நிலங்களை வைத்துக்கொள்ள சட்டப்பிரிவு **37–**B மற்றும் விதிகளின்படி அரசால் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, திருத்தப்பட்ட சட்டம் மற்றும் விதிகளின்கீழ், திருத்தம் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்தோ அல்லது பொது அறக்கட்டளை நிலத்தை வாங்கிய

நாளிலிருந்தோ 180 நாட்களுக்குள் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

### 4.3 வருவாய் நீதிமன்றங்கள்

நில உடைமையாளருக்கும் குத்தகைதாரர்களுக்கும் இடையே ஏற்படும் வழக்குகளை குத்தகைச் சட்டங்கள் கீழ் முடிவு செய்வதற்காக தற்போது மாநிலத்தில் கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், மன்னார்குடி, திருச்சிராப்பள்ளி, லால்குடி, நாகப்பட்டினம், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய பத்து இடங்களில் வருவாய் நீதிமன்றங்கள் தனித்துணை ஆட்சியரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 4 வருவாய் நீதிமன்றங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக 2013 இல் துவங்கப்பட்டவை ஆகும். இந்த 10 வருவாய் நீதிமன்றங்கள், 5 குத்தகைச் சட்டங்கள் மற்றும் விதிகளைச் செயல்படுத்துகின்றன.

**4.3.1 வருவாய் நீதிமன்றங்களில் முடிவு செய்யப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரம்**

வருவாய் நீதிமன்றங்கள் அனைத்திலும் **9,806** வழக்குகள் **31.05.2011** அன்று நிலுவையில் இருந்தன. **01.06.2011** முதல் **31.03.2014** முடிய உள்ள காலத்தில் **20,094** வழக்குகள் வரப்பெற்று, **16,690** வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. **31.03.2014** அன்று **13,210** வழக்குகள் நிலுவையில் உள்ளன. சராசரியாக ஒரு மாதத்தில் **491** வழக்குகள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

**4.3.2 குத்தகை சட்டங்கள்**

கீழ்க்கண்ட சட்டங்கள் வருவாய் நீதிமன்றங்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

I) **தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம், 1955 (தமிழ்நாடு சட்டம் 25/55)**

நிலஉடைமையாளருக்கு குத்தகைத் தொகை கொடுக்காமல் இருத்தல், குத்தகை நிலத்திற்கோ அல்லது அந்நிலத்தில் விளையும் பயிர்களுக்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்படுதல், வேளாண்மை அல்லது தோட்டப்பயிர் அல்லாத பிற காரணத்திற்காக நிலத்தினை

உபயோகித்தல், நில உரிமையாளரின் உரிமையை மறுத்தல் தவிர, வேறு காரணங்களுக்காக குத்தகைதாரர்கள் குத்தகை சாகுபடி செய்யும் நிலத்திலிருந்து வெளியேற்றப் படுவதிலிருந்து இச்சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது. நில உடைமைதாரர்கள் மற்றும் குத்தகை தாரர்களிடையே ஏற்படும் தகராறுகள் வருவாய் நீதிமன்றங்களால் தீர்வு செய்யப்படுகின்றன.

இச்சட்டத்தின் கீழ் **01.06.2011** அன்று **1,590** வழக்குகள் நிலுவையில் இருந்தன. **01.06.2011** முதல் **31.03.2014** முடிய **1,007** வழக்குகள் வரப்பெற்றன. **31.03.2014** வரை **1,755** வழக்குகள் முடிவு செய்யப்பட்டு **31.03.2014** அன்று **842** வழக்குகள் நிலுவையில் உள்ளன.

II) **தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம், 1956 (தமிழ்நாடு சட்டம் 24/56)**

இச்சட்டம் மொத்த விளைச்சலில் **25** விழுக்காடு மட்டும் நிலஉரிமைதாரருக்கு பயிரிடும் குத்தகை தாரர்களால் செலுத்தப்பட வேண்டிய குத்தகைத் தொகையை நிர்ணயிக்க வகை செய்கிறது. குத்தகையை பணமாகவோ அல்லது விளை

பொருளாகவோ செலுத்தலாம். பயிரிடும் குத்தகைதாரர்கள் பயிரிடுவதற்கான மற்ற செலவுகள் முழுவதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். நில உரிமையாளர்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய அனைத்து நிலுவைகளுக்கும் பொறுப்பாவார்கள். நிலஉடைமையாளர்கள் மற்றும் குத்தகைதாரர்கள் இடையே ஏற்படும் தகராறுகள் அனைத்தும் வருவாய் நீதிமன்றங்களால் தீர்வு செய்யப்படுகின்றன.

இச்சட்டத்தின் கீழ் **01.06.2011** அன்று **289** வழக்குகள் நிலுவையில் இருந்தன. **01.06.2011** முதல் **31.03.2014** முடிய **450** வழக்குகள் வரப்பெற்று மேற்படி காலத்தில் **613** வழக்குகள் முடிவு செய்யப்பட்டு **31.03.2014** அன்று **126** வழக்குகள் நிலுவையில் உள்ளன.

III) **தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண்மை நிலங்கள் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1961 (தமிழ்நாடு சட்டம் 57 / 61)**

தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண்மை நிலங்களின் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின்படி **01.03.1972** தேதிக்கு முன் இருந்த

மத சார்பான அறக்கட்டளைகளுக்கு (Religious Trust of Public Nature) நில உச்சவரம்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி அறக்கட்டளைகள் தங்களுடைய சொந்த சாகுபடிக்கு அதிகபட்சமாக 20 தரஏக்கர் நிலம் மட்டும் வைத்துக்கொள்ளலாம். அதற்கு மேலுள்ள விவசாய நிலத்தை பிறருக்கு குத்தகைக்குவிட வேண்டும். இச்சட்டத்தின்கீழ் பொது அறக்கட்டளை களுக்கும், குத்தகைதாரர்களுக்கும் இடையே உள்ள உறவை வரன்முறைப்படுத்தவும், அவர்களிடையே ஏற்படும் தகராறுகளை வருவாய் நீதிமன்றங்கள் மூலம் தீர்வு செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் கீழ் 01.06.2011 அன்று 7630 வழக்குகள் நிலுவையில் இருந்தன. 01.06.2011 முதல் 31.03.2014 முடிய 17,946 வழக்குகள் வரப்பெற்று மேற்படி காலத்தில் 13,548 வழக்குகள் முடிவு செய்யப்பட்டு 31.03.2014 அன்று 12,028 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

**IV) தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் ஆவணம்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 10/69)**

இச்சட்டத்தில் பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களைக் குத்தகைதாரர்களாக பதிவு செய்து கொள்வதன் மூலம் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. இச்சட்டத்தின்கீழ், வட்டாட்சியர் குத்தகை உரிமையினை பதிவு செய்யும் பதிவு அலுவலர் ஆவார். இதுவரை **2,59,615** நபர்கள் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இச்சட்டத்தின் கீழ் **01.06.2011** அன்று **198** வழக்குகள் நிலுவையில் உள்ளன. **31.03.2014** முடிய **185** வழக்குகள் வரப்பெற்று மேற்படி காலத்தில் **212** வழக்குகள் முடிவு செய்யப்பட்டு **31.03.2014** அன்று **171** வழக்குகள் நிலுவையில் உள்ளன.

**V) தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம், 1971 மற்றும் திருத்தியவாறு**

இச்சட்டத்தில் குத்தகைதாரராகவோ அல்லது உரிமம் பெற்றவராகவோ குடியிருப்பு அமைத்து **01.04.1990** தேதியில் அனுபவித்து வரும் விவசாயி அல்லது விவசாயத் தொழிலாளருக்கு குடியிருப்பு உரிமை

வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள சொந்த வீட்டுமனை இல்லாத கிராமப்புற கைவினைஞர்களும் மேற்கண்ட பலன்களைப் பெற வகை செய்யப்பட்டுள்ளது. **31.03.2014** வரையில் உடைமை உரிமை வழங்கப் பெற்ற குடியிருப்பு அனுபோகதாரர்களின் மொத்த எண்ணிக்கை விவரங்கள் கீழ்வருமாறு:

**<u>அட்டவணை–4.6 குடியிருப்பு உடைமை உரிமை</u>**

| **வரிசை எண்** | **இனம்** | **அனுபோகதாரர்கள் எண்ணிக்கை** |
|---|---|---|
| **1.** | ஆதிதிராவிடர் | **1,01,374** |
| **2.** | பழங்குடியினர் | **2,746** |
| **3.** | ஏனையோர் | **80,702** |
| | **மொத்தம்** | **1,84,822** |

**01.06.2011** முதல் **31.03.2014** வரை **562** வழக்குகள் முடிவு செய்யப்பட்டு **31.03.2014** அன்று **43** வழக்குகள் நிலுவையில் உள்ளன.

### 4.3.3 நியாய ஊதியங்கள்

**தமிழ்நாடு வேளாண்மை தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம், 1969 மற்றும் குறைந்தபட்ச ஊதியச் சட்டம்**

இச்சட்டத்தில் நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறுபட்ட விவசாயப் பணிகளுக்காக நியாய ஊதியம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. ஏனைய இதர மாவட்டங்களுக்கு குறைந்தபட்ச ஊதிய சட்டம் பின்பற்றப்பட்டு வருகிறது. இச்சட்டங்கள் மாவட்ட ஆட்சியர்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 4.4. பூமிதான வாரியம்

பூமிதான இயக்கம் ஆச்சார்ய வினோபாபாவே அவர்களால் துவக்கப்பட்டது. ஆச்சார்ய வினோபாபாவே அவர்கள் தமிழ்நாட்டில் **13.03.1956** முதல் **18.04.1957** வரை பல்வேறு மாவட்டங்களில் பாதயாத்திரையாக சுற்றுப்பயணம் செய்து பூமிதான இயக்கத்திற்கு நிலங்களை தானமாகப் பெற்றார். அவ்வாறு பெறப்பட்ட தானத்தை முறைப்படுத்தி நில உடைமையை பூமிதான வாரியத்தின் பெயரில் மாற்றி அதனை நிலமில்லாத ஏழைகளுக்கு வழங்க **“தமிழ்நாடு பூமிதான**

**யக்ஞச் சட்டம் 1958”** இயற்றப்பட்டு அதனைத் தொடர்ந்து விதிகளும் இயற்றப்பட்டன. அரசாணை (நிலை) எண் 493, வருவாய் [நி.சீ.1(1)] துறை, நாள் 23.12.2009 இன்படி மாண்புமிகு கதர் மற்றும் கிராமத்தொழில் துறை அமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டும் மற்றும் 14 அலுவல் மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்களைக் கொண்டும் பூமிதான வாரியம் திருத்தி அமைக்கப்பட்டது. 22.12.2013 அன்றுடன் வாரியத்தின் பதவிக்காலம் முடிவுற்றது. புதிய வாரியம் திருத்தி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பூமிதான வாரியத்திற்கு 28,050 ஏக்கர் நிலங்கள் தானமாக பெறப்பட்டுள்ளன. இவைகளில் 20,494 ஏக்கர் நிலங்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 7,556 ஏக்கர் நிலங்கள் வழக்கு, பத்திரப்பதிவு, உறுதியாக்கம் முதலானவைகளின் கீழ் உள்ளன. 2012–13 ஆம் ஆண்டு முதல் பூமிதானம் தொடர்பான பணிகளில் மாவட்ட நிருவாகம் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டு தலைமையிடத்திலிருந்து கண்காணிக்கப்பட்டு வருவதால் நிலுவைப் பணிகளிலும், பூமிதான பணிகளைத் தொடர்வதிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

## 4.5 முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011

அரசாணை (நிலை)எண்.265, வருவாய் [நி.சீ.1(2)] துறை, நாள் 10.09.2011 இன்படி முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 10.09.2011 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 4.5.1 தகுதிகள்

**விவசாய உறுப்பினர்கள்**

2.50 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலத்தை அல்லது 5.00 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலத்தை சொந்தமாக வைத்திருந்து மற்றும் அந்த நிலத்தில் நேரடியாக பயிர் செய்யும் 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்து குறு / சிறு விவசாயிகள், பயிரிடு குத்தகைதாரர்கள் மற்றும் விவசாய தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் உறுப்பினர்களாக பதிவு செய்யத் தகுதியுடையவர்கள் ஆவார்கள். விவசாயத் தொழில் என்பது விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில்களான தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்த்தல், கால்நடை வளர்த்தல் மற்றும் பால்பண்ணை தொழில், தீவன பயிர் செய்தல், மேய்ச்சல், நாற்று வளர்த்தல், கோழிப்பண்ணை, மரங்கள் வளர்த்தல் மற்றும் உள்ளூர் மீன்பிடித்தல் ஆகும்.

**சார்ந்து வாழும் உறுப்பினர்கள்**

உறுப்பினர்களைச் சார்ந்து வாழும் பொருள் ஈட்டாத குடும்ப உறுப்பினர்களும் இத்திட்டத்தின் கீழ் உறுப்பினராகப் பதிவு செய்யத் தகுதியானவர்கள். அவர்கள் உறுப்பினரின்,

i. மனைவி அல்லது கணவன் (நேர்விற்கேற்ப)
ii. குழந்தைகள்
iii. இறந்துவிட்ட மகனுடைய மனைவி (விதவை மருமகள்) மற்றும் குழந்தைகள் மற்றும்
iv. பெற்றோர்

### 4.5.2 உறுப்பினர்களைக் கணக்கெடுத்தல்

பயனாளிகள் இத்திட்டத்தின் பயன்களைத் தொடர்ந்து பெறும்பொருட்டு **72,40,387** குடும்ப அடையாள வில்லைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் முழுமையான கணக்கெடுப்பு எடுக்கப்பட்டு அவை வருவாய் கிராம அளவில் கணக்கெடுப்பு பதிவேடுகளில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் கணினியிலும் விவரங்கள் பதிவு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்றைய நிலையில், உறுப்பினர்கள் கீழ்க்கண்டவாறு கணக்கெடுக்கப் பட்டுள்ளனர்:

**அட்டவணை–4.7 முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011 இன் கீழ் உறுப்பினர் கணக்கெடுப்பு விவரம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | விவசாய உறுப்பினர்கள் | – | 1,63,95,151 |
| 2. | சார்ந்து வாழும் உறுப்பினர்கள் | – | 99,69,967 |
| | **மொத்தம்** | – | 2,63,65,118 |

இத்திட்டத்தின் கீழ் உறுப்பினர்கள் மற்றும் சார்ந்து வாழும் உறுப்பினர்களைச் சேர்த்தல் மற்றும் நீக்குதல் என்பது தொடர் நடவடிக்கை ஆகும்.

### 4.5.3 நிதி உதவி

இத்திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட நல உதவிகள் உறுப்பினர்களுக்கும் மற்றும் உறுப்பினர்களைச் சார்ந்தவர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

**உறுப்பினர்களுக்காக**

(1) திருமண உதவித்தொகை

(2) முதியோர் ஓய்வூதியம்

(3) உறுப்பினர்களின் தற்காலிக உடல் திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவி

(4) விபத்து நிவாரணம்

(5) இயற்கை மரண உதவித்தொகை

(6) ஈமச் சடங்கு செலவு

**சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்காக**

(1) கல்வி உதவித்தொகை

(2) திருமண உதவித்தொகை

(3) எச்.ஐ.வி–யினால் உயிரிழந்த உறுப்பினரின் அனாதை குழந்தைகளுக்கான உதவித் தொகை

(4) ஈமச்சடங்கு செலவு

விவசாய உறுப்பினரின் இறப்புக்குப் பின்னரும் அவரைச் சார்ந்த குடும்ப உறுப்பினர்கள் அவர்களுக்கான உதவித் தொகையினை தொடர்ந்து பெறலாம்.

இத்திட்டத்தின் கீழ் அனைத்து உதவித் தொகைகளும் தனி வட்டாட்சியர்கள் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) மூலமாக மாவட்ட ஆட்சியர்களின் மேற்பார்வையில் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழான உதவித்தொகையின் சிறப்பு அம்சங்கள்:-

**அ) உறுப்பினர்களுக்காக**

1. <u>திருமண உதவி:</u>

கணக்கெடுப்பிற்குப் பிறகு விவசாய உறுப்பினரின் சட்டப்படியான திருமணத்திற்கு ஆண்களுக்கு ரூ.8,000 பெண்களுக்கு ரூ.10,000 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் மட்டுமே ஆண்களுக்கு திருமண உதவி வழங்கப்படுகிறது. முந்தைய திட்டத்தில் ஆண்களுக்கு ரூ.3,000 பெண்களுக்கு ரூ.5,000 மட்டுமே வழங்கப்பட்டது. 10.09.2011 முதல் 31.03.2014 வரை 10,297 பயனாளிகளுக்கு ரூ.8.24 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2. <u>முதியோர் ஓய்வூதியம்:</u>

60 வயது பூர்த்தியடைந்த விவசாய உறுப்பினர்கள் முதுமை காரணமாக உடல் உழைப்பு திறன் இல்லாதவராக வேறு எந்த ஆதரவும் இல்லாமல், புறக்கணிக்கப்பட்டு மகன் /

மகள் இருந்தாலும் அவர்களிடமிருந்து ஆதரவு இல்லாமல் இருந்தால் அவர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.1000 வழங்கப்படும். **10.09.2011** முதல் **31.03.2014** வரை **7,64,303** பயனாளிகளுக்கு ரூ.**2,058.97** கோடி வழங்கப்பட்டுள்ளது.

**3.** <u>உறுப்பினர்களின் தற்காலிக உடல் திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவிதொகை:</u>

உறுப்பினர்கள் நோய்களால் / கொடிய நோய்களால் பாதிக்கப்பட்ட காலங்களில் உறுப்பினர்கள் விவசாய தொழிலுக்கு செல்ல இயலாது. இந்த தற்காலிக உடல் திறனற்ற காலத்தில் வருமானம் இல்லாமல் உறுப்பினரின் குடும்பம் கஷ்டத்திற்கு உள்ளாகும். எனவே மேற்படி குடும்பத்திற்கு பாதுகாப்பு வழங்கும் வகையில், விவசாய உறுப்பினர்கள், காசநோய், எச்.ஐ.வி, புற்றுநோய், கை கால் முறிவு மற்றும் நிலைகுலைவு, முதுகுத்தண்டுவட பாதிப்பு, நரம்பு சம்பந்தமான நோய், இதயம் சம்பந்தமான பிரச்சினைகள், பார்வை இழத்தல், கல்லீரல் பாதிப்பு, சிறுநீரக பாதிப்பு, மனநிலைபாதிப்பு போன்றவைகளால் பாதிக்கப்பட்டுள்ள தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கு மாதாந்திர உதவித்தொகை ரூ.**1,000** வழங்கப்படுகிறது. இந்த புதிய திட்டம் **2012–13** ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு

ஆண்டுதோறும் விரிவாக்கப் படுகிறது. **2012–13** முதல் **31.03.2014** வரை ரூ.**19.19** கோடி **15,969** பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**4. <u>விபத்து நிவாரணம்:</u>**

உறுப்பினர் விபத்தில் உயிரிழத்தல், உயிரிழந்த உறுப்பினரின் குடும்பத்திற்கு நிதி உதவி மூலம் துயர்துடைக்கும் வகையில், ரூ.**1,00,000** வழங்கப்படுகிறது. இந்த உதவித்தொகை உயிரிழந்த உறுப்பினரின் குடும்பத்திற்கு ஒருசிறந்த உதவியாக உள்ளது. மேலும் விபத்து காயங்களுக்கு கீழ்க்கண்டவாறு உதவிகள் வழங்கப்படுகின்றன:

**<u>அட்டவணை–4.8 விபத்து காயங்களுக்கு உதவி</u>**

| **வ.எண்** | **காயங்களின் விபரம்** | **தொகை (ரூபாயில்)** |
|---|---|---|
| i. | இரண்டு கை அல்லது இரண்டு கால் இழத்தல் | 1,00,000 |
| ii. | ஒரு கை மற்றும் ஒரு கால் இழத்தல் | |
| iii. | இரண்டு கண்களிலும் பார்வை முழுவதுமாக இழத்தல் | |
| iv. | ஒரு கை அல்லது ஒரு கால் இழத்தல் | **50,000** |
| v. | பக்கவாதம் | **50,000** |
| vi. | மேலே குறிப்பிட்ட உறுப்புகள் அல்லாமல் கடுமையான காயங்களின் காரணமாக கை கால்களை இழத்தல் | **20,000** |

**10.09.2011** முதல் **31.03.2014** வரை ரூ.**84.73** கோடி விபத்து நிவாரணமாக, ஈமச்சடங்கு உதவி ரூ.**2,500** உட்பட **8,877** பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

5. <u>இயற்கை மரணத்திற்கான உதவி:</u>

விவசாய உறுப்பினர் இயற்கை மரணமடைந்தால், இறந்த விவசாய உறுப்பினரின் குடும்பத்திற்கு நிவாரணம் அளிக்கும் வகையில் ரூ.**10,000** வழங்கப்படுகிறது. **10.09.2011** முதல் **31.03.2014** வரை ரூ.**174.76** கோடி (ரூ.**2,500** ஈமச்சடங்கு செலவு தொகை உட்பட) **1,39,083** பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

6. <u>ஈமச்சடங்கு செலவு:</u>

விவசாய உறுப்பினர் இறந்து விட்டால், உயிரிழந்த உறுப்பினரின் குடும்பத்திற்கு ஈமச்சடங்கு செலவுக்காக ரூ.**2,500** வழங்கப்படுகிறது. இந்த உதவியைப் பெறுவதற்கு இறப்புச்சான்று ஏதும் சமர்ப்பிக்க வேண்டியதில்லை.

**ஆ. சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்காக**

சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்கு உதவிகள் கீழ்க்கண்டவாறு:

1. <u>கல்வி உதவி:</u>

உறுப்பினர்களின் குழந்தைகள் உயர் கல்வியினை தொடரும் பொருட்டு இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

## அட்டவணை–4.9 கல்வி உதவி

| வ. எண் | கல்வி விவரம் | விடுதியில் தங்காதோர் | | விடுதியில் தங்குவோர் | |
|---|---|---|---|---|---|
| | | ஆண் (ரூ) | பெண் (ரூ) | ஆண் (ரூ) | பெண் (ரூ) |
| 1. | தொழிற் பயிற்சி நிறுவனம் (ITI) மற்றும் பல்தொழில்நுட்ப பயிற்சி (Polytechnic) | 1250 | 1750 | 1450 | 1950 |
| 2. | கவின்கலை, ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டயப்படிப்பு (Diploma in Fine Arts, Teacher Education and Nursing) (ஆண்டொன்றுக்கு) | 1250 | 1750 | 1450 | 1950 |
| 3. | இளங்கலைப் பட்டப்படிப்பு (Bachelor Degree) மற்றும் கவின் கலையில் இளங்கலைப் பட்டம், ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டப்படிப்பு (Bachelor Degree in Fine Arts, Teacher Education and Nursing) (ஆண்டொன்றுக்கு) | 1750 | 2250 | 2000 | 2500 |
| 4. | முதுநிலைப் பட்டப்படிப்பு (Post Graduate) மற்றும் கவின் கலை மற்றும் செவிலியர் முதுகலை பட்டப்படிப்பு (Post Graduate Degree in Fine Arts and Nursing) (ஆண்டொன்றுக்கு) | 2250 | 2750 | 3250 | 3750 |
| 5. | சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை அறிவியல் வேளாண்மை அல்லது அது தொடர்பான பாடங்களில் தொழிற்கல்வி (Professional Courses) (ஆண்டொன்றுக்கு) | 2250 | 2750 | 4250 | 4750 |
| 6. | முதுநிலை தொழிற்கல்வி (Post Graduate Professional Courses) (ஆண்டொன்றுக்கு) | 4250 | 4750 | 6250 | 6750 |

இந்த உதவித்தொகை ஆண்டுதோறும் படிப்பு முடியும் வரை வழங்கப்படுகிறது. படிப்பு இடையில் நிறுத்தப்பட்டால் இவ்வுதவித் தொகையும் நிறுத்தப்படும். கல்வி உதவித் தொகையினை பொறுத்தவரை, பயனாளிகள் வேறு எந்த திட்டத்தின் கீழ் கல்வி உதவி பெற்றிருந்தாலும், இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகையை கூடுதலாகப் பெறலாம். **10.09.2011** முதல் **31.03.2014** வரை ரூ.**147.45** கோடி **6,43,993** பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**2.** <u>திருமண உதவி:</u>

விவசாய உறுப்பினர்களுக்கு திருமண உதவித் தொகை வழங்குவது போல், விவசாய உறுப்பினர்களைச் சார்ந்துள்ள குழந்தைகளின் திருமணத்திற்காக ஆண்களுக்கு ரூ.**8000** பெண்களுக்கு ரூ.**10,000** விவசாய உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது. **10.09.2011** முதல் **31.03.2014** வரை ரூ.**123.95** கோடி, **1,40,160** பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**3.** <u>எச்.ஐ.வி.யினால் உயிரிழந்த உறுப்பினரின் அனாதை குழந்தைகளுக்கு மானியம்:</u>

விவசாய உறுப்பினர் எச்.ஐ.வி.யினால் உயிரிழந்த பிறகு, சில இனங்களில் அவர்களின் குழந்தைகளும்

எச்.ஐ.வி.யினால் பாதிக்கப்படுகின்றனர் அல்லது அனாதைகளாகி விடுகின்றனர். இந்த மாதிரியான குழந்தைகளுக்கு தங்களின் படிப்பை தொடர இயலாமலும் அல்லது அவர்களின் அடிப்படை தேவைகளை சமாளிக்கமுடியாமலும் ஆகிறது. எனவே, இவர்களுக்கு மாதாந்திர மானியமாக ரூ.1,000/–, 2013–14 முதல் வழங்கப்படுகிறது. எச்.ஐ.வி / எயிட்ஸ் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான தமிழ்நாடு டிரஸ்டுக்காக, தமிழ்நாடு எயிட்ஸ் கட்டுப்பாடு சங்கம் (Tamil Nadu AIDS Control Society) தயாரிக்கப்பட்டுள்ள வழிமுறைகளின் படி அமைக்கப்பட்டுள்ள மாவட்ட குழு (District Committee) பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கிறது. இந்த உதவி எச்.ஐ.வி / எயிட்ஸ்யினால் பெற்றோரை (ஒருவர் / இருவரையும்) இழந்த 0–18 வயது வரை உள்ள அனாதைக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ரூ.0.36 கோடி 549 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

4. <u>ஈமச்சடங்கு செலவு:</u>

விவசாய உறுப்பினர்களுக்கு வழங்குவதுபோல், சார்ந்த உறுப்பினர்கள் இறந்தாலும், ஈமச்சடங்கு செலவு தொகையாக ரூ.2,500 இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. இந்த

உதவியினைப் பெற இறப்புச் சான்று சமர்பிக்க வேண்டியதில்லை.

## 4.5.4 செயலாக்கம் (Performance)

2013-14 ஆம் ஆண்டில் ரூ.1,109.06 கோடி 11,68,765 பயனாளிகளுக்கு கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது:

**அட்டவணை–4.10 உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 2013–14 இல் வழங்கப்பட்டுள்ள உதவிகள் விவரம்**

| வ. எண் | உதவி விவரம் | தொகை (கோடியில்) |
|---|---|---|
| 1. | கல்வி உதவி | 60.38 |
| 2. | உறுப்பினர்களின் திருமணம் | 3.15 |
| 3. | உறுப்பினர்களின் குழந்தைகள் திருமணம் | 51.60 |
| 4. | இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு | 60.12 |
| 5. | விபத்து நிவாரணம் | 32.24 |
| 6. | முதியோர் ஓய்வூதியம் | 884.48 |
| 7. | தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவித்தொகை | 16.72 |
| 8. | எச்.ஐ.வி–யினால் உயிரிழந்த உறுப்பினரின் அனாதை குழந்தைகளுக்கான மானிய உதவி | 0.36 |
| | மொத்தம் | 1,109.06 |

10.09.2011 முதல் 31.03.2014 வரை மொத்த செலவு ரூ.2,617.66 கோடி, பயனாளிகள் 30,04,102 ஆகும். முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011 இன் கீழ்


10.09.2011 முதல் 31.03.2014 வரை வருடாந்திர நிதி மற்றும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு :

## அட்டவணை–4.11 முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் செயல் மற்றும் நிதி சாதனை விவரம்


(ரூபாய் கோடியில்)

| வ.எண் | விவரம் | 2011–12 (10.9.2011 முதல் 31.3.2012 வரை) | 2012–13 | 2013–14 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | நிதி ஒதுக்கீடு | 617.20 | 914.20 | 1109.06 | 2640.46 |
| 2. | செலவு | 598.87 | 909.73 | 1109.06 | 2617.66 |
| 3. | பயனாளிகளின் எண்ணிக்கை | 6,52,688 | 11,82,649 | 11,68,765 | 30,04,102 |

## வரைபடம்–4.1 வருடாந்திரச் செலவினைக் காட்டும் விளக்கப்படம் (2011–12 முதல் 2013–14)



**வரைபடம்–4.2 முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்–2011ன்கீழ் 2011–12 முதல் 2013–14 வரை திட்டவாரியாக பயனாளிகளைக் காட்டும் விளக்கப் படம்**




## 4.6 புதிய தொடக்க முயற்சிகள் (NEW INITIATIVES)

### 4.6.1 பதிவுறுக்களைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்

பதிவுறுக்கள் **1961** ஆம் ஆண்டு முதல் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பதிவுறுக்களை முறையாக பராமரிக்க மற்றும் மீளச் செய்ய, தலைமையிடத்திற்கு ரூ. **10.27** லட்சம் மற்றும் **6** சார்நிலை அலுவலகங்களுக்கு ரூ. **57.18** லட்சம் மொத்தம் ரூ.**67.45** லட்சம் **2013–14** ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு தொடர்ந்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 4.6.2 முறையாக மேம்படுத்துதல்

சார்நிலை அலுவலகங்களை ஆய்வுரை செய்ய மற்றும் பல்வேறு பயிற்சி வகுப்புகள் நடத்த, தலைமையிடத்திலிருந்து திரை மற்றும் படம் காட்டும் கருவி வாங்க ரூ. **0.70** லட்சம் **2013–14** ஆம் ஆண்டில் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 5. நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி

## 5.1 பணியாளர் அமைப்பு

நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரித் துறையின் ஆணையர் அத்துறை ஆணையரகத்தின் தலைவர் ஆவார். ஆணையரகத்தின் உதவி ஆணையர் (தலைமையிடம்) அவருக்கு உதவி புரிகிறார். மைலாப்பூர், தண்டையார்பேட்டை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நகர்ப்புற நிலவரிவிதிப்பு உதவி ஆணையர்கள் ஐவர் உள்ளனர். மேலும் திருச்சிராப்பள்ளி, மதுரை, ஈரோடு மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் நிலச்சீர்த்திருத்தம் மற்றும் நகர்ப்புற நிலவரிவிதிப்பு உதவி ஆணையர்கள் நால்வர் உள்ளனர். ஆக மொத்தம் மாநிலத்தில் 9 உதவி ஆணையர்கள் களப்பணியில் உள்ளனர்.

## அட்டவணை–5.1 நகர்ப்புற நிலவரி விதிப்பு அலுவலர்கள்

| வரிசை எண் | அதிகாரிகள் மற்றும் அதிகார வரம்பு எல்லை | உள்ளடங்கிய மாவட்டங்கள் |
|---|---|---|
| 1 | உதவி ஆணையர் (நபுநிவ) தி.நகர் – மைலாப்பூர் | சென்னை |
| 2 | உதவி ஆணையர் (நபுநிவ) எழும்பூர் – தண்டையார்பேட்டை | |
| 3 | உதவி ஆணையர் (நபுநிவ) திருவள்ளூர் மாவட்டம் (பூந்தமல்லி, அம்பத்தூர் மற்றும் மாதவரம் மண்டலம்) | திருவள்ளூர், வேலூர் |
| 4 | உதவி ஆணையர் (நபுநிவ) காஞ்சிபுரம் மாவட்டம் (ஆலந்தூர், தாம்பரம் மற்றும் குன்றத்தூர் மண்டலம்) | காஞ்சிபுரம் |
| 5 | உதவி ஆணையர் (நபுநிவ) கோயம்புத்தூர் மாவட்டம் | கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி மற்றும் ஈரோடு |
| 6 | உதவி ஆணையர் (நிசீ (ம) நபுநிவ) திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி, கடலூர், கரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் விழுப்புரம் |
| 7 | உதவி ஆணையர் (நிசீ (ம) நபுநிவ) மதுரை | மதுரை, திண்டுக்கல் மற்றும் சிவகங்கை |
| 8 | உதவி ஆணையர் (நிசீ (ம) நபுநிவ) ஈரோடு | சேலம் மற்றும் நாமக்கல் |
| 9 | உதவி ஆணையர் (நிசீ (ம) நபுநிவ) திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் |

## 5.2 தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978

ஒரு சில தனிநபர்களின் கைப்பற்றில் விவசாயமல்லாத நிலங்கள் குவிந்து கிடப்பதை சமமாகப் பகிர்ந்தளிக்கும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 (தமிழ்நாடு சட்டம் 24/1978) இயற்றப்பட்டது. இதனை நிறைவேற்றும் நோக்குடன் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகர்ப்புற கூட்டுப்பகுதிகளில் காலி நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978 இன் படி 15.06.1999 வரையிலும் ஒவ்வொரு நகர்ப்புற கூட்டுப் பகுதிகளிலும் உள்ள தனி நபர், குடும்பம் மற்றும் தொழில் நிறுவனம் ஆகியவற்றிற்கு தகுதியான உச்சவரம்பு விவரம் கீழ்வருமாறு:

**அட்டவணை– 5.2 தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 இன்படி உச்சவரம்பு**

| வ.எண் | நகர்ப்புற கூட்டுப்பகுதி | தனிநபர் ச.மீ | குடும்பம் ச.மீ | தொழில் நிறுவனம் ச.மீ |
|---|---|---|---|---|
| 1. | சென்னை | 500 | 2,000 | 2,000 |
| 2. | மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி (ம) சேலம் | 1,500 | 3,000 | 3,000 |
| 3. | திருநெல்வேலி | 2,000 | 4,000 | 4,000 |

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 ஆனது தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவு சட்டம், 1999 (தமிழ்நாடு சட்டம் 20/99) இன் மூலமாக 16.06.1999 முதல் நீக்கறவு செய்யப்பட்டது. முதன்மைச் சட்டத்தின் கீழ் ஏற்கனவே கையகப்படுத்தப்பட்டு நீக்கறவு சட்டம் அமலுக்கு வந்த தேதியில் கையகப்படுத்தப்பட்டு அரசு வசம் உள்ள நிலங்களுக்கு, இந்நீக்கறவு சட்டம் பொருந்தாது. தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978–இன் கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் தற்போதைய நிலை கீழ்வருமாறு:

**அட்டவணை–5.3 தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 இன்படி கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் விவரம்**

| வ எண் | விவரம் | சதுர மீட்டரில் |
|---|---|---|
| | கையகப்படுத்தப்பட்ட பரப்பு | 1,89,79,446 |
| 1. | அரசுத்துறை மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு ஒதுக்கீடு செய்த பரப்பு | 43,51,756 |
| 2. | நீதிமன்ற வழக்குகளில் உள்ள பரப்பு | 28,53,929 |
| 3. | அறியாமல் கிரயம் பெற்றவர்களின் கைப்பற்றில் உள்ள பரப்பு | 23,95,785 |
| 4. | ஆக்கிரமிப்பில் உள்ள பரப்பு (நில உரிமையாளர்கள் மற்றும் உரிமையற்ற ஏனையோர்) | 84,13,615 |
| 5. | ஆக்கிரமிப்பு இல்லாத காலிப்பரப்பளவு நிலம் | 9,64,361 |
| | மொத்த நிலம் | 1,89,79,446 |

## 5.3 தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1966 திருத்தச் சட்டம், 1991

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், **01.07.1963** இல் விவசாயம் அல்லாத நகர்ப்புற நிலங்களுக்கு வரிவிதிப்பு மற்றும் ஒரு சில நில உடமையாளர் வசம் குவிந்து கிடப்பதைத் தடுக்கும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சட்டம் முதலில் சென்னை நகருக்கு மட்டுமே அமலாக்கப்பட்டது. பின்னர் திருச்சி, மதுரை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்கள் மற்றும் சென்னை புறநகர் பகுதிகள், திருநெல்வேலி மாநகராட்சி பகுதி மற்றும் கீழ்க்கண்ட 23 நகராட்சிகளாகிய காஞ்சிபுரம், வேலூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், நாமக்கல், மேட்டூர், ஈரோடு, திண்டுக்கல், பழனி, கொடைக்கானல், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, திருப்பூர், தூத்துக்குடி, இராஜபாளையம், உதகமண்டலம் மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் அமலாக்கப்பட்டது.

மேற்கண்ட அனைத்துப் பகுதிகளுக்கும் **01.07.1981** ஆம் நாளைய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு **01.07.1991** முதல் நகர்ப்புற நிலவரி விதிக்கப்படுகிறது.

## அட்டவணை–5.4 நகர்ப்புற நில வரி விதிப்பு விவரங்கள்

| வரிசை எண் | சென்னை மற்றும் ஏனைய நகர்ப்பகுதிகள் | | சென்னை புறநகர்ப்பகுதியில் உள்ள அனைத்து நிலங்கள் | |
|---|---|---|---|---|
| 1 | 2 மனைகளுக்குள் | வரி இல்லை | 3 மனைகளுக்குள் | வரி இல்லை |
| 2 | 2 மனைகளுக்கு மேல் 5 மனைகளுக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் | 3 மனைகளுக்கு மேல் 7 மனைகளுக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் |
| 3 | 5 மனைகளுக்கு மேல் 10 மனைகளுக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் | 7 மனைகளுக்கு மேல் 10 மனைகளுக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் |
| 4 | 10 மனைகளுக்கு மேல் 20 மனைகளுக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் | 10 மனைகளுக்கு மேல் 20 மனைகளுக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் |
| 5 | 20 மனைகளுக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் | 20 மனைகளுக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் |

# அட்டவணை–5.5 மாவட்டவாரியாக வரி விதிப்பு தாரர்களின் எண்ணிக்கை மற்றும் கேட்புத் தொகை 31.05.2014 அன்றைய நாளில்

(ரூ.இலட்சத்தில்)

| வரிசை எண் | மாவட்டம் | வரிவிதிப்புதாரர்களின் எண்ணிக்கை | ஒரு வருடத்திற்கான கேட்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | சென்னை | 24212 | 618.74 |
| 2 | கோயம்புத்தூர் | 17369 | 173.03 |
| 3 | கடலூர் | 2927 | 6.01 |
| 4 | திண்டுக்கல் | 6110 | 36.51 |
| 5 | ஈரோடு | 2229 | 25.82 |
| 6 | காஞ்சிபுரம் | 28614 | 381.92 |
| 7 | கன்னியாகுமரி | 8166 | 17.40 |
| 8 | கரூர் | 2221 | 4.85 |
| 9 | மதுரை | 6909 | 56.99 |
| 10 | நாகப்பட்டினம் | 4240 | 3.82 |
| 11 | நாமக்கல் | 2265 | 6.35 |
| 12 | புதுக்கோட்டை | 1859 | 3.19 |
| 13 | சேலம் | 4478 | 45.88 |
| 14 | சிவகங்கை | 5925 | 5.94 |
| 15 | தஞ்சாவூர் | 4524 | 16.23 |
| 16 | திருப்பூர் | 4027 | 25.86 |
| 17 | திருவள்ளூர் | 43791 | 367.47 |
| 18 | திருநெல்வேலி | 4975 | 13.04 |
| 19 | திருச்சி | 5754 | 25.30 |
| 20 | தூத்துக்குடி | 3324 | 17.57 |
| 21 | நீலகிரி | 1822 | 13.05 |
| 22 | வேலூர் | 1716 | 14.54 |
| 23 | விழுப்புரம் | 1304 | 5.88 |
| 24 | விருதுநகர் | 2856 | 7.38 |
| | மொத்தம் | 1,91,617 | 1,892.77 |

நகர்ப்புற நிலவரிச்சட்டப் பிரிவு **29** இன் கீழ் வரி விதிப்பினின்றும் கீழ்க்கண்ட வகையான நிலங்கள் விலக்குப் பெறுகின்றன.

(i) மத்திய மாநில அரசு நிலங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு நிலங்கள்.

(ii) பொது வழிப்பாட்டுக்கான நிலங்கள்.

(iii) மாநில அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை உபயோகத்திற்கான நிலங்கள்.

(iv) மயானபூமி நிலங்கள்.

(v) சாலைகளாகப் பயன்படும் நிலங்கள்.

(vi) தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக நிலங்கள்.

(vii) பொது பூங்காக்கள், நூலகங்கள் மற்றும் அருங்காட்சியகம் பயன்பாட்டில் உள்ள நிலங்கள்.

(viii) ஆதரவற்றோர் மற்றும் அனாதை விடுதிகள் அமையப்பெற்ற நிலங்கள்.

தர்ம, சமய மற்றும் லோபோகாரி நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் அந்நிறுவனங்களுக்கு இன்னல் இருப்பின், பிரிவு **27(1)** இன் கீழ் அரசு வரிவிலக்கு அளிக்கிறது.

கீழ்க்கண்ட அமைப்புகளுக்கு அரசு வரிச்சலுகைகளை அளித்துள்ளது.

(அ) சிறுதொழில் சான்று பெற்ற தொழிற்சாலைகளுக்கு வரியில் 25 விழுக்காடு சலுகை, மற்ற தொழிற்சாலைகளுக்கு 10 விழுக்காடு சலுகை.

(ஆ) அனைத்து சங்கீத நாடக சபைகளுக்கு 50 விழுக்காடு சலுகை.

(இ) திரையரங்குகளுக்கு 10 விழுக்காடு சலுகை.

(ஈ) குடிசைப் பகுதியாக அறிவிக்கப்பட்ட நிலங்களுக்கு முழுச்சலுகை மற்றும்

(உ) நகர்ப்புற நிலத்தில் கட்டடம் இருந்து, அது நிலத்தின் உரிமையாளரால் குடியிருப்புக்காக முழுமையாகப் பயன்படுத்தப்பட்டால், நகர்ப்புற நிலவரியில் 50 விழுக்காடு வரிச்சலுகை.

நகர்ப்புற நிலவரி மதிப்பீடு மற்றும் வரி விதிப்பை எதிர்த்து தொடரப்படும் மேல்முறையீட்டு மனுக்களை விரைவாகத் தீர்வு செய்யவும், மக்களுக்கு உடனடி நிவாரணம் கிடைக்கவும் அந்தந்த மாவட்ட வருவாய் அலுவலர்களையே தீர்ப்பாய அலுவலர்களாக அரசு நியமித்துள்ளது.

## 5.4 நகர்ப்புற நிலவரியின் கீழ் சீராய்வு அதிகாரம்

நகர்ப்புற நிலவரி உதவி ஆணையர்களால் பிறப்பிக்கப்படும் வரிவிதிப்பு உத்தரவுகளின்பேரில் அதிருப்தி ஏதேனும் இருப்பின், சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள் நிலச்சீர்திருத்த ஆணையரிடம் சீராய்வு மனு தாக்கல் செய்யலாம். தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், **1966** திருத்தச்சட்டம், **1991** பிரிவு **30(1)** இன் கீழ் நிலச்சீர்திருத்த ஆணையருக்கு சீராய்வு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு ஓர் அறிவிக்கையின் மூலம் நேரடியாக ஆஜராக வாய்ப்பு அளிக்கப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு, நிலச்சீர்திருத்த ஆணையரால் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

# 6. நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம்

## 6.1 நிலஅளவை குறித்த வரலாறு

நிலம் என்பது மனித இனத்திற்கு பெருமதிப்புள்ள ஆதாரமாகும். மனிதன் வேளாண்மையை கற்றபோதே தன் வசமிருந்த நிலத்தின் எல்லையை நிர்ணயம் செய்ய முயன்று வந்துள்ளான். வேத காலத்தில் வேளாண் உற்பத்தி மற்றும் வரி வசூலின்பொருட்டு நிலவகைப்பாடுகள் காணப்பட்டன. ஆனால், சோழர்கள் காலத்தில்தான், குறிப்பாக இராஜராஜ சோழன் காலத்தில் முறையான நிலஅளவைப் பணி துவங்கப்பட்டது. சோழர்கள் காலத்தில், வளமான காவேரி நதிப்படுகையில் சிறிய அளவிலான நிலங்கள் கூட அளவை செய்யப்பட்டன. நிலங்கள் சதுரங்களாக பிரிக்கப்பட்டு எண்ணிடப்பட்டன. இது தற்காலத்தில் நிலஅளவை எண்கள் வழங்கப்படுவதற்கு ஒப்பானதாகும். சோழர்கள் காலத்திற்குப் பின்னர், கி.பி. **1540–45** இல் செர்சா சூரியின் ஆட்சியில் இந்திய நிலஅளவைப் பணிக்குரிய பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். அப்போது குடியானவர்கள் இன்னலுக்குள்ளாவதைத் தடுக்கும் பொருட்டு அவர்களது உரிமைகள் மற்றும் பொறுப்புகள் பட்டாக்கள் **(**உரிமை ஆவணம்**)** மற்றும் காபூலியத்துகள் **(**ஒப்பந்த ஆவணம்**)**

ஆகியவற்றின் மூலம் தெளிவாக விளக்கப்பட்டன. செர்சா சூரியின் வருவாய் மேலாண்மைத் திட்டம், தற்கால இரயத்துவாரி நிலவரித்திட்டத்திற்கு ஒப்பானதாகும். ஆங்கிலேயர் காலத்தில் கி.பி.1802 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் தேதி அன்று, முதல் நிலஅளவை மேஜர் லாம்ப்டன் என்பவரால் பரங்கிமலையிலிருந்து பெரும்பாக்கம் (தற்போதைய சோழிங்கநல்லூருக்கு அருகிலுள்ளது) வரை மேற்கொள்ளப்பட்டது. ஜெனரல் வில்லியம் லாம்ப்டன் மற்றும் ஜார்ஜ் எவரெஸ்ட் ஆகிய தலைமை அளவையாளர்களும் இந்திய துணைக் கண்டத்தில் 2,400 கி.மீ. நீள 'தி கிரேட் இண்டியன் ஆர்க் ஆப் தி மெரிடியன்' என்றழைக்கப்படும் புவியியல் ரீதியான முக்கோண அளவையை மேற்கொள்வதில் ஏறக்குறைய 50 ஆண்டுகள் செலவிட்டனர். தலைமை அளவையாளர் கர்னல் சர் ஜார்ஜ் எவரெஸ்ட்டின் பெயரையொட்டியே இமயமலையின் மிக உயர்ந்த சிகரத்திற்கு 'எவரெஸ்ட்' என பெயரிடப்பட்டுள்ளது.

**6.2 நிலஅளவையைப் பற்றி புரிந்துகொள்ள வேண்டுமானால், நிலவியல் நில அளவை மற்றும் வருவாய் நில அளவை ஆகியவற்றிற்குரிய வித்தியாசத்தை தெரிந்து கொள்ள வேண்டும்.**

### 6.2.1 நிலவியல் நில அளவை (Topographical Survey)

'விளக்கிகள்' என தொழில்நுட்ப ரீதியாக அழைக்கப்படும் ஆறுகள், ஏரிகள், மலைகள், சாலைகள், இருப்புப்பாதைகள், சுடுகாடுகள், கோவில்கள், பள்ளிகள் போன்ற இடங்களை விளக்கிக் காட்டும் வகையில் வரைபடம் தயாரிப்பதே நிலவியல் நிலஅளவையின் நோக்கமாகும்.

### 6.2.2 வருவாய் நிலஅளவை (Cadastral Survey)

வருவாய் நிலஅளவை என்பது அதன் பெயருக்கேற்ப, ஒவ்வொரு கைப்பற்று நிலத்தின் எல்லைகள், பரப்பு, குத்தகைக் காலம், நில உரிமையாளர் விவரங்கள் ஆகியவற்றை அறிவதற்காகவும் நிலவரியை விதிக்கவும், வசூலிக்கவும் மேற்கொள்ளப் படுவதாகும்.

## 6.3 நிருவாக அமைப்பு

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் சென்னை மாகாணத்தில் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டத் துறை **1859** ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. நிலஅளவை மேற்கொள்ளல், நிலஆவணங்களை உருவாக்குதல் மற்றும் காலப்போக்கில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப நில ஆவணங்களை பராமரித்தல் ஆகியவை இத்துறையின் முக்கியப் பணிகளாகும். தற்போது


இத்துறையின் பணிகள், நிலஅளவைத் திட்டங்கள், நிலஆவணங்களைப் பராமரித்தல் மற்றும் நிலஆவணங்களை கணினிபடுத்துதல் ஆகிய மூன்று அம்சங்களையொட்டி அமைந்துள்ளன.

இத்துறை, நிலஅளவைப் பிரிவு, நிலவரித் திட்டப் பிரிவு ஆகிய இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் இவ்விரு பிரிவுகளின் தலைவராவார். நிலஅளவைப் பதிவேடுகளின் கூடுதல் இயக்குநர் நிலஅளவைப் பிரிவின் இரண்டாம் நிலை அலுவலராவார். இவருக்கு உதவும் வகையில் மூன்று இணை இயக்குநர்கள் தலைமை அலுவலகத்திலும், மற்றுமொரு இணை இயக்குநர், தஞ்சாவூர் மாவட்ட ஒரத்தநாடு நிலஅளவை பயிற்சி நிலையத்தில் முதல்வராகவும் உள்ளனர். சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மண்டலங்களில் தலா ஒருவர் வீதம் நான்கு மண்டல துணை இயக்குநர்கள் உள்ளனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா ஒரு நிலஅளவை உதவி இயக்குநர் உள்ளார். வட்ட அளவில் துணை ஆய்வாளர், சார் ஆய்வாளர்கள், குறுவட்ட அளவர்கள், முதுநிலை வரைவாளர், வட்ட ஆவண வரைவாளர் போன்றோர் பணிபுரிகின்றனர்.

நிலவரித்திட்ட அலுவலர், நிலவரித்திட்டப் பிரிவின் இரண்டாம் நிலை அலுவலராவார். அவருக்கு தலைமை

அலுவலகத்தில் இரண்டு உதவி நிலவரித்திட்ட அலுவலர்களும், மாவட்ட அளவில் நிலவரித்திட்ட வட்டாட்சியர்களும் உதவிகரமாக உள்ளனர்.

## வரைபடம்– 6.1 நிருவாக வரைபடம்




# அட்டவணை—6.1 நில அளவைத் துறையின் ஒப்பளிப்புப் பணியிடங்கள்

| வ. எண் | பதவியின் பெயர் | ஒப்பளிப்பு பணியிடங்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கூடுதல் இயக்குநர் | 1 |
| 2 | இணை இயக்குநர் | 4 |
| 3 | துணை இயக்குநர் (மண்டல அளவில்) | 4 |
| 4 | உதவி இயக்குநர் | 34 |
| 5 | நிர்வாக அலுவலர் (இயக்ககம் மற்றும் மண்டலத்துணை இயக்குநர் அலுவலகம்) | 6 |
| 6 | நேர்முக உதவியாளர்(திட்டம்)—வருவாய்த் துறை பணியாளர் (துணை ஆட்சியர் நிலையில்) | 1 |
| 7 | கணக்கு அலுவலர் (கருவூல மற்றும் கணக்குத்துறை) | 1 |
| 8 | தனி வட்டாட்சியர் | 16 |
| 9 | நில அளவை ஆய்வாளர்—(கோட்டம் அளவில் மற்றும் திட்ட அலகுகளில்) | 92 |
| 10 | துணை ஆய்வாளர் (வட்ட அளவில்) | 279 |
| 11 | சார் ஆய்வாளர் (மாவட்டம் மற்றும் வட்ட அளவில்) | 1,510 |
| 12 | குறுவட்ட அளவர் (வட்ட அளவில்) | 1,132 |
| 13 | நில அளவர் (உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில்) | 1,142 |
| 14 | தொழில் நுட்ப அலுவலர் | 2 |
| 15 | தொழில் நுட்ப மேலாளர் | 40 |
| 16 | தலைமை வரைவாளர் (மத்திய நிலஅளவை உதவி இயக்குநர்அலுவலகம்) | 123 |
| 17 | முதுநிலை வரைவாளர்(மத்திய நிலஅளவை, உதவி இயக்குநர் அலுவலகம் மற்றும் வட்ட அளவில்) | 658 |
| 18 | நில ஆவண வரைவாளர் (வட்ட அளவில்) | 179 |
| 19 | வரைவாளர் (உதவி இயக்குநர், மத்திய நிலஅளவை அலுவலகங்கள்) | 846 |
| 20 | கண்காணிப்பாளர் | 107 |
| 21 | உதவியாளர் | 412 |
| 22 | இளநிலை உதவியாளர் | 141 |
| 23 | அமைச்சுப் பணி பிரிவில் இதர பணியிடங்கள் | 377 |
| 24 | ஜீப்புஓட்டுநர் | 36 |
| 25 | புல உதவியாளர் | 1,211 |
| 26 | சென்னை போட்டோ சிங்கோ அச்சகத்திற்கான பதவிகள் | 195 |
| | மொத்தம் | 8,549 |

### 6.3.1 இயக்ககத்தின் பணிகள் மற்றும் பொறுப்புகள்

**(அ) நிலஅளவைப் பிரிவு**


நிலஅளவைத் திட்ட பணிகள் குறித்து திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல், நிலஅளவைப் பிரிவின் மாநில அளவிலான பணியாளர்களது பணி தொடர்பான விவரங்களை பராமரித்தல், நிலஉரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெற நிலஅளவை ஆவணங்களை கணினி மயமாக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் சார்நிலை அலுவலர்களின் பணிகளை கண்காணித்துக் கட்டுப்படுத்துதல்.



## (ஆ) நிலவரித்திட்ட பிரிவு

நிலவரித்திட்ட பிரிவின் முக்கிய பணிகளாவன:

நிலவரித்திட்ட பணிகள் குறித்து திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல், நிலவரித்திட்டப் பிரிவில் பணியாளர்களின் பணி தொடர்பான விவரங்களை பராமரித்தல், சார்நிலை அலுவலகங்களின் பணிகளை கண்காணித்து கட்டுப்படுத்துதல்.



**(இ) தலைமை நிலைய நிலஅளவை வரைபட அலுவலகம் (வரைபடங்கள் மற்றும் ஆவணங்கள்)**

இணை இயக்குநர் தலைமையில் செயல்படும் தலைமை நிலஅளவை வரைபட அலுவலகம் நிலஅளவை இல்லத்தில் அமைந்துள்ளது. துறையின் நில அளவை வரைபடங்களை தயாரித்து அவைகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளனைத்தும் இந்த அலுவலகத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கிராம, வட்ட, மாவட்ட மற்றும் மாநில வரைபடங்கள் பொதுமக்கள் தேவைக்கேற்ப உரிய கட்டணத்தில் வழங்கப்படுகின்றன. புராதன ஆவணங்களை பாதுகாக்கும் பொருட்டு, நகர, கிராம வரைபடங்களை கணினிப்படுத்துதல், புராதன நிலவரைபடங்களை ஒளிபிம்பப்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிதாக நியமிக்கப்படும் வரைவாளர்களுக்கு இங்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

### 6.3.2 மண்டல நிலஅளவை அலுவலகங்கள்

நிலஅளவை மற்றும் பதிவுருக்கள் துறை மண்டல துணை இயக்குநர் தலைமையில் சென்னை, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய மண்டலங்களில் செயல்படுகின்றன. இவ்வலுவலகங்களின் முக்கிய பணியாவது அரசு திட்டங்கள், நிலஅளவை திட்டங்கள் செயல்படுத்தபடுவதையும் மற்றும்

மாவட்ட அளவில் செயல்படும் நில அளவை அலுவலகங்களின் செயல்பாடுகளையும் கண்காணித்தல் ஆகும். மேலும், இந்நான்கு மண்டல அலுவலகங்களிலும் பொதுமக்களுக்குத் தேவைப்படும் வரைபடங்கள் மண்டல அளவிலேயே உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.


### 6.3.3 மாவட்ட நிலஅளவை அலுவலகங்கள்

மாநிலத்தில் உள்ள **32** மாவட்டங்களிலும் உதவி இயக்குநர்கள் தலைமையில் செயல்படும் நிலஅளவை அலுவலகங்கள் உள்ளன. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியருக்கு நில அளவை சம்பந்தமான பணிகளுக்கு நேர்முக உதவியாளராக உதவி இயக்குநர் செயல்படுகின்றார்.

நில அளவை சம்பந்தப்பட்ட திட்டப் பணிகளான நகர நிலஅளவை, நத்தம் நிலஅளவை, துணை நிலஅளவை, மலைகிராம நிலஅளவை, மறு நிலஅளவை ஆகியவற்றை செயல்படுத்துதல் மற்றும் வட்ட அலுவலகங்களில் நாள்தோறும் மேற்கொள்ளப்படும் பட்டா மாறுதல், உட்பிரிவு பணிகள் மற்றும் நிலஅளவை எல்லைக் கற்கள் பராமரிப்புப் பணிகள் மேற்பார்வை செய்யப்படுகின்றன.

### 6.3.4 வட்டாட்சியர் அலுவலகங்களில் நிலஅளவை பிரிவு

ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திலும் ஒரு நிலஅளவைப் பிரிவு, துணை ஆய்வாளர் தலைமையில் வட்டாட்சியரின் கட்டுப்பாட்டில் செயல்படுகின்றது. நில விற்பனை, தானம், பாகப்பிரிவினை, வாரிசுரிமை, நீதிமன்ற ஆணைகள் போன்றவற்றால் நிலஉரிமையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப உட்பிரிவு செய்து நிலஆவணங்கள் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன.



**2013–14** ஆம் ஆண்டில் வரவு செலவு திட்ட மானியக்கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட கூட்டுப் பட்டாக்களைப் பிரித்து தனிப்பட்டாக்களாக மாற்றும் திட்டத்தின் கீழ் இரண்டு முன்னோடி மாவட்டங்களான திருச்சி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு மாவட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவ்விரு முன்னோடி மாவட்டங்களிலும் **1,01,747** பயனாளிகள் இதுவரை பயன் அடைந்துள்ளனர்.

### 6.4 வட்ட அலுவலகங்களில் குறுவட்ட அளவர் மற்றும் வட்ட ஆவண வரைவாளர் பதவிகளை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

அம்மா திட்டம், விரைவு பட்டா மாற்று திட்டம் போன்ற திட்டங்களை சீரிய முறையில், செயல்முறைபடுத்துவதற்காக, இத்துறையில் உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு முடிவு செய்யப்பட்டு, **16.5.2011** முதல் **31.3.2014** வரையிலான காலத்தில், நில அளவர் பதவியில் **769** காலிப்பணியிடங்களும், வரைவாளர் பதவியில் **429** காலிப்பணியிடங்களும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமும், கருணை அடிப்படையிலான நியமனங்கள் மூலமும், புல உதவியாளர் பதவியிலிருந்து பணி

மாற்றம் மூலமும் நிரப்பப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள காலிப்பணியிடங்களை, நடப்பு ஆண்டில் பூர்த்தி செய்யுமாறு (2014–15 இல்) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தை கேட்டுக்கொள்ளப்பட்டு அதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

### 6.5 நில ஆவணங்களை கணினி மயமாக்குதல்

தற்போது, பொது மற்றும் தனியார் நிலங்கள் மீது நிலத்தாவா, நில அபகரிப்பு ஆகியவற்றின் காரணமாக வழக்குகள் அதிகரித்துள்ளன. நில மோசடிகளை தடுத்து, நில உரிமையாளர்களின் நலன்களை பாதுகாக்கவும், நிலஆவணங்களை கணினியில் பராமரிக்கவும் இத்திட்டம் 1988 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 'நிலஆவணங்களை கணினி மயமாக்கும் திட்டம்' மற்றும் 'வருவாய் நிருவாகத்தை வலுப்படுத்தி நிலப் பதிவுருக்களை மேம்படுத்தும் திட்டத்தின்' கீழ் வழங்கப்பட்ட நிதியைத் திறம்பட உபயோகித்து மாநில, மாவட்ட மற்றும் வட்ட அளவில் உட்கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

வட்ட அளவில், 2 சேவைக் கணினிகள், 4 மேசைக் கணிப்பொறிகள், அச்சுப் பொறிகள் மற்றும் மின்வழங்கிகள் (UPS) ஆகியவற்றுடன் கூடிய கணினி மையங்கள்

ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும் ஒரு சேவைக் கணினி மற்றும் 4 மேசைக் கணிப்பொறிகள் வழங்கப்பட்டுள்ளன. 29 மாவட்ட நிலஅளவை அலுவலகங்களில் 20 கணினிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவை அடங்கிய கணினிமையங்கள் புலப்படங்களை கணினிப் படுத்துவதற்கும், நத்தம் மற்றும் நகர்ப்புற நில ஆவணங்களை கணினிப்படுத்துவதற்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், பொதுமக்கள் இணைய தளத்தில் நில ஆவணங்களைப் பார்வையிட்டு நகலெடுக்க வகைசெய்யும் பொருட்டு, இணைய இணைப்புடன் கூடிய மேசைக் கணிப்பொறிகள் வழங்கப்படவுள்ளன.

இணையம் சார்ந்த மென்பொருள் மூலமாக நில ஆவணங்களை இணைய வழியில் பராமரித்தலுக்கு முதலில் அனைத்து நில ஆவணங்களையும் கணினியில் பதிவேற்றம் செய்திடவேண்டும். இதன் பொருட்டு, கீழ்க்காணும் வகையிலான நில ஆவணங்கள் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன.

### 6.5.1 கிராமப்புற நிலஆவணங்கள்

கிராமப்புற நில ஆவணங்களைப் பொறுத்தமட்டில் இப்பணி பெரும்பாலும் முடிக்கப்பட்டுள்ளது. 'அ' பதிவேடு மற்றும் சிட்டா ஆகியவை கணினிப்படுத்தப்பட்டு, **தமிழ் நிலம்** எனும் மென்பொருள் உருவாக்கப்பட்டு, அதன் மூலம் மாநிலத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் (சென்னை தவிர) கைப்பிரதிகளை முழுவதுமாக தவிர்த்து கணினி மூலம் தயாரிக்கப்பட்ட பட்டாக்கள் மட்டுமே வழங்கப்படுகின்றன. இதுவரையிலும் கணினிப் படுத்தப்பட்ட நிலஆவணங்கள் "எங்கிருந்தும் எந்நேரத்திலும்" என்ற இணைய சேவை மூலம் http://eservices.tn.gov.in என்ற இணைய முகவரியில் வெளியிடப்பட்டுள்ளன.

### 6.5.2 நத்தம் நில ஆவணங்கள்

நத்தம் நில ஆவணங்களை கணினிப்படுத்தும் பணி அனைத்து மாவட்ட நிலஅளவை அலுவலகத்திலும் முன்னோட்ட முறையில் (சென்னையைத் தவிர) துறை அலுவலர்களைக் கொண்டே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பொழுது, மாநிலம் முழுவதும் இந்தப் பணியை குறிப்பிட்ட காலவரைக்குள் முடிக்கும் பொருட்டு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 6.5.3 நகர்ப்புற நில ஆவணங்கள்

சென்னையில் உள்ள **3.76** இலட்சம் நில ஆவணங்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இணையம் சார்ந்த ‘பரிமாற்ற மென்பொருள்’ (transaction software) தேசிய தகவல் மையத்தால் உருவாக்கப்பட்டு வருகிறது. இந்த மென்பொருள் தயாரானதும், கணினி வழிப் பட்டாக்கள் சென்னையிலும் வழங்கப்படும்.

### 6.5.4 புல அளவு வரைபடங்களை கணினிப்படுத்துதல்

புல அளவு வரைபடங்களை கணினிப்படுத்தும் பணி தேசிய தகவல் மையத்தால் உருவாக்கப்பட்ட ‘கொலாப்லேண்ட்’ எனும் மென்பொருளைக் கொண்டு **29** மாவட்ட நிலஅளவை அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள **53** இலட்சம் புலப்படங்களில் **20** இலட்சம் புலப்படங்கள் இதுவரை கணினிப்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும், புலப்படங்களை கணினிப்படுத்தும் பணியை குறித்த காலத்திற்குள் முடித்திட, மாநிலம் முழுவதும் விரிவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# அட்டவணை–6.2 மொத்த நில ஆவணங்களின் எண்ணிக்கை

| வ. எண் | மாவட்டம் | மொத்த கிராமங்களின் எண்ணிக்கை | மொத்த ஆவணங்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | கிராமம் | நகரம் | நத்தம் | புலப்படங்கள் |
| 1 | அரியலூர் | 195 | 894451 | 0 | 188860 | 76654 |
| 2 | சென்னை –நகரம் | 55 | 0 | 376105 | 0 | 0 |
| 3 | கோயம்புத்தூர் | 295 | 542290 | 265712 | 1040112 | 159314 |
| 4 | கடலூர் | 860 | 1337682 | 104114 | 910982 | 174877 |
| 5 | தர்மபுரி | 470 | 817606 | 23197 | 516006 | 154530 |
| 6 | திண்டுக்கல் | 359 | 1298487 | 50929 | 292585 | 243011 |
| 7 | ஈரோடு | 370 | 779341 | 77476 | 487090 | 177794 |
| 8 | காஞ்சிபுரம் | 1137 | 2248872 | 129360 | 484076 | 313330 |
| 9 | கன்னியாகுமரி | 81 | 728477 | 67137 | 7537 | 56645 |
| 10 | கரூர் | 203 | 750968 | 20348 | 233789 | 129821 |
| 11 | கிருஷ்ணகிரி | 636 | 1102972 | 47526 | 628231 | 203914 |
| 12 | மதுரை | 664 | 1342239 | 217682 | 710809 | 134076 |
| 13 | நாகப்பட்டிணம் | 478 | 959457 | 68587 | 321973 | 143624 |
| 14 | நாமக்கல் | 388 | 726824 | 64195 | 539759 | 114395 |
| 15 | நீலகிரி | 54 | 234933 | 21208 | 70028 | 40331 |
| 16 | பெரம்பலூர் | 152 | 566215 | 0 | 402032 | 61607 |
| 17 | புதுக்கோட்டை | 757 | 1988631 | 35780 | 428555 | 193219 |
| 18 | இராமநாதபுரம் | 400 | 1231483 | 27704 | 292606 | 122050 |
| 19 | சேலம் | 598 | 1084114 | 231560 | 646849 | 143926 |
| 20 | சிவகங்கை | 521 | 1647864 | 438543 | 468639 | 149922 |
| 21 | தஞ்சாவூர் | 906 | 1093474 | 69339 | 500993 | 192815 |
| 22 | தேனி | 99 | 409622 | 70849 | 174554 | 109295 |
| 23 | திருவள்ளூர் | 706 | 1584668 | 215370 | 380308 | 191549 |
| 24 | திருவண்ணாமலை | 1059 | 1975524 | 61170 | 470508 | 257912 |
| 25 | திருவாரூர் | 558 | 976941 | 55460 | 470542 | 133945 |
| 26 | தூத்துக்குடி | 468 | 1056689 | 85346 | 508561 | 207777 |
| 27 | திருச்சிராப்பள்ளி | 502 | 727850 | 150563 | 432236 | 151268 |
| 28 | திருநெல்வேலி | 509 | 1808226 | 271612 | 683265 | 287650 |
| 29 | திருப்பூர் | 350 | 684125 | 78240 | 351895 | 193958 |
| 30 | வேலூர் | 831 | 1944000 | 168965 | 572213 | 309562 |
| 31 | விழுப்புரம் | 1459 | 2711223 | 36617 | 1027801 | 281097 |
| 32 | விருதுநகர் | 598 | 1071301 | 226444 | 322474 | 207470 |
| | | மொத்தம் | 36326549 | 3757138 | 14565868 | 5317338 |

### 6.5.5 நிலஆவணங்களை கணினி மயமாக்குதலின் முன்னேற்றம்

நில ஆவணங்களை கணினி மயமாக்குதலின் முன்னேற்ற விவரங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது:

**அட்டவணை–6.3 நில ஆவணங்களின் கணினி மயமாக்குதலின் முன்னேற்றம்**

| வ.எண். | நில ஆவணத்தின் பெயர் | மொத்தமுள்ள ஆவணங்களின் எண்ணிக்கை | இதுவரை கணினி மயமாக்கப்பட்டவை | நிலுவையில் உள்ளவை |
|---|---|---|---|---|
| 1 | நத்தம் நில ஆவணங்கள் | 1,45,65,868 | 26,22,008 | 1,19,43,860 |
| 2 | நகர்ப்புற நில ஆவணங்கள் | 37,57,138 | 4,83,552 | 32,73,586 |
| 3 | புலஅளவு வரைபடம் | 53,17,338 | 19,83,325 | 33,34,013 |

### 6.5.6 வரைபடங்களை ஒளிபிம்ப நகலெடுத்தல்

மொத்தமுள்ள கிராம வரைபடங்கள் (சுமார் 17,000) மாவட்ட மற்றும் நகர வரைபடங்கள் ஒளிபிம்ப நகலெடுக்கப்பட்டு பரவு வரைவியல் (Raster Image) உருவில் சென்னை தலைமை நிலைய நில அளவை அலுவலகத்தில் உள்ள கணினி வரைபட மையத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

## 6.6 மாநில அரசின் திட்டங்கள்

### 6.6.1 நகர அளவை

கிராமங்கள் முன்னேற்றமடையும் போது பேரூராட்சிகளாக நிலை உயர்த்தப்படுகின்றன. அவை மேலும் வளரும்போது, நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளாக நிலை உயர்த்தப்படுகின்றன. கிராம மற்றும் பேரூராட்சிகளில் மரபு சார்ந்த நடைமுறைகளான மூலைவிட்ட செங்குத்து முறை (Diagonal & Offset) போன்றவற்றை பின்பற்றி வருவாய் நில அளவை (Cadastral Survey) மேற்கொள்ளப்பட்டு, நிலம் சார்ந்த ஆவணங்கள், புலப்படச்சுவடி, "அ" பதிவேடு மற்றும் சிட்டா, அடங்கல் ஆகிய வடிவங்களில் பராமரிக்கப்படுகின்றன. நகராட்சி மற்றும் மாநகராட்சிகளைப் பொறுத்தமட்டில், வார்டுகள், பிளாக்குகள், நகர அளவை எண்கள் வாரியாக நில அளவை மேற்கொள்ளப்பட்டு அதனடிப்படையில், வார்டு வரைபடம், பிளாக் வரைபடம், நகரஅளவை நிலப்பதிவேடு மற்றும் சிட்டா ஆகிய நில ஆவணங்கள் பராமரிக்கப்படுகின்றன. எனவே, பேரூராட்சிகள் அரசால் நகராட்சி மற்றும் மாநகராட்சிகளாக நிலை உயர்த்தப்படும்போது, நகர நில அளவை முறையில் புதியதாக நில அளவை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| | மாநகராட்சிகள் | | |
| 1. | மொத்த மாநகராட்சிகள் | – | 12 |
| 2. | மாநகராட்சியில் பழைய எல்லைகளின்படி நகர நிலஅளவை பணி (மரபு சார்ந்த நடைமுறைகள்படி முடிக்கப்பட்டது) | – | 12 |
| 3. | மாநகராட்சிகளின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் நவீன நில அளவை முறைப்படி நகர நில அளவைப் பணி முன்னேற்றத்தில் உள்ளவை | – | 6 |
| 4. | பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய மாநகராட்சிகள் (மாநகராட்சிகளின் விரிவாக்கப்பட்ட பகுதிகள்) | – | 6 |
| | நகராட்சிகள் | | |
| 1. | மொத்த நகராட்சிகள் | – | 124 |
| 2. | நகர அளவை முடிக்கப்பட்டது (மரபு சார்ந்த முறைகளின்படி) | – | 98 |
| 3. | நகர அளவைப் பணி முன்னேற்றத்தில் உள்ளவை (நவீன நில அளவை) | – | 10 |
| 4. | பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை (நவீன நில அளவை) | – | 6 |

### 6.6.2 நத்தம் அளவை

கிராமத்தில், நத்தம் என்பது குடியிருப்பு பகுதிகளுக்காக ஒதுக்கப்பட்டு, நத்தம் புறம்போக்காக, வருவாய் கணக்குப் பதிவேட்டில் வகைப்படுத்தப் படுகிறது. இத்தகைய நத்தம் புறம்போக்கு குடியிருப்புப் பகுதிகளில் வசிப்போர் அவர்களது அனுபோகத்துக்கேற்றவாறு உட்பிரிவு ஆவணங்கள் ஏதும் வருவாய் ஆவணங்களில் இல்லாமல் இருந்தது. எனவே, இத்தகைய நத்தம் புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்கு பட்டா வழங்குவதற்காக மாநிலத்திலுள்ள அனைத்து வட்டங்களிலும் நத்தம் மற்றும் நிலவரித்திட்டப்

பணிகள் மேற்கொள்ளப்பட்டு நத்தம் பட்டா வழங்கப்பட்டு வருகிறது.

### 6.6.3 மலைக் கிராம அளவை

மலைக் கிராமங்களில் நில அளவை செய்வதற்கு பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் சமவெளிப் பகுதிகளில் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பத்தினின்று வேறுபட்டதாகும். மலைக் கிராமப் பகுதிகளில், சாய்வு உயரத்தை அளப்பதற்கு 'படியேற்ற முறை' (Stepping up method) பயன்படுத்தப்படுகிறது. இருப்பினும், 'டோட்டல் ஸ்டேஷன்' எனும் மின்னணுக் கருவியைப் பயன்படுத்தி செய்யப்படும் நில அளவையில் உயரத்தை அக்கருவி மூலம் கண்டறியலாம். மலைக் கிராம அளவைப்பணி கீழ்காணும் இடங்களில் முன்னேற்றத்தில் உள்ளது:

1) மொத்த மலைக் கிராமங்களின் எண்ணிக்கை : **67**
2) நில அளவை முடிக்கப்பட்டவை : **66**
3) பணி முன்னேற்றத்தில் உள்ளவை (நாரைக்கிணறு, நாமக்கல் மாவட்டம்) : **1**

### 6.6.4 நவீன நிலஅளவைக் கருவிகள் மூலம் (ஜி.பி.எஸ் மற்றும் எலக்ட்ரானிக் டோட்டல் ஸ்டேஷன்) நில அளவைப் பணிகள்

நவீன நில அளவை என்பது ஜி.பி.எஸ் (Global Positioning System) மற்றும் எலக்ட்ரானிக் டோட்டல் ஸ்டேஷன் ஆகியவற்றைப் பயன்படுத்தி செய்யப்படும் நில அளவை ஆகும். ஜி.பி.எஸ் என்பது பூமியின் மேற்பரப்பிலுள்ள எந்தவொரு புள்ளியின் அமைவிடத்தையும் துல்லியமாக அறிய உதவும் ஒரு கருவியாகும்.

எலக்ட்ரானிக் டோட்டல் ஸ்டேஷன் என்பது மின்னணு முறையில் தூரத்தை கோண அளவுகளுடன் துல்லியமாக அளவிடக்கூடியதாகும்.

நவீன நில அளவை முறையின் மூலம் நில அளவை செய்வதால் நிலத்தின் உரிமைதாரர்களுக்கு அவ்வுரிமை பாதுகாக்கப்படுவதுடன், அனைத்து நிலங்களின் விவரங்கள் பற்றிய வெளிப்படைத் தன்மை நிலைநாட்டப்படுவதோடு, நிலங்கள் குறித்து நம்பகத்தன்மையுடன் கூடிய நிகழ்நிலை தரவுகளை, திட்டமிடல் மற்றும் நிருவாகம் அபிவிருத்தி ஆகியவற்றின் பொருட்டு அரசுக்கு வழங்க வகை செய்கிறது.

உலக கட்ட ஆய முறைமையை (World grid co-ordinates) அடிப்படையாகக் கொண்டு புவியியல் பொருத்துமைப்படி (Geo-referencing) தயாரிக்கப்படும் வரைபடங்கள், புவியின் மீதுள்ள அமைவிடத்தை மில்லி மீட்டர் துல்லியமாகத் தருகிறது. ஜி.பி.எஸ். மற்றும் எலக்ட்ரானிக் டோட்டல் ஸ்டேஷன் கருவிகளைப் பயன்படுத்தும்போது பரப்பளவினை அக்கருவிகள் மூலமே தன்னியக்கமாக (automatic) கணிக்க இயல்கிறது. அளவைப்பணி முடித்து பெறப்பட்ட தரவுகளை கணிப்பொறியில் உட்புகுத்தி, வேண்டிய அளவிலான வரைபடத்தினை பெறலாம். புவிசார்ந்த விவரங்களை வரைபடங்களில் தனித்தனி அடுக்கங்களாக (layers) உட்பொதிதலின் (embedding) மூலம் குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள மருத்துவமனைகள், கல்வி நிலையங்கள், பொதுசேவை மையங்கள் போன்றவற்றின் சரியான புவியியல் அமைவிடங்களை வரைபடத்தில் வெளிப்படுத்தலாம்.

### 6.6.4.1 நவீன நகர நில அளவைப் பணி நடைபெற்று வரும் இடங்கள்

ஜி.பி.எஸ். மற்றும் எலக்ட்ரானிக் டோட்டல் ஸ்டேஷன் கருவிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் நகர நில அளவைப் பணி தற்போது **6** மாநகராட்சிகள் மற்றும்

10 நகராட்சிகளில் நடைபெற்று வருகிறது. அவை பின்வருமாறு:

**மாநகராட்சிகள் :** 1. சென்னை (முழுவதும்) 2. திருப்பூர் (முழுவதும்) மற்றும் விரிவாக்கப்பட்ட பகுதிகள் 3. வேலூர் 4. மதுரை 5.கோயம்புத்தூர் 6. ஈரோடு

**நகராட்சிகள்:** 1) நரசிங்கபுரம் (சேலம் மாவட்டம்) 2) அனகாபுத்தூர் (காஞ்சிபுரம் மாவட்டம்), 3) பம்மல் (காஞ்சிபுரம் மாவட்டம்), 4) வேதாரண்யம் (நாகப்பட்டினம் மாவட்டம்), 5) கூடலூர் (தேனி மாவட்டம்), 6) அம்பாசமுத்திரம் (திருநெல்வேலி மாவட்டம்), 7) காயல்பட்டினம் (தூத்துக்குடி மாவட்டம்), 8) திருத்தங்கல் (விருதுநகர் மாவட்டம்), 9) கீழக்கரை (இராமநாதபுரம் மாவட்டம்), 10) பெரம்பலூர் டவுன் (பெரம்பலூர் மாவட்டம்).

### 6.6.5 குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்

சட்டமன்றத்தில் தமிழ்நாடு சட்டமன்ற விதி 110 கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பின்படி, பொது மக்கள் குறுவட்ட அளவர்களை எளிதாகத் தொடர்பு கொள்ளும் வகையில், அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் 100 குறுவட்டங்களில் குறுவட்ட

அளவர்களின் பயன்பாட்டிற்காக கட்டப்பட்டு வருகின்றன. இப்பணி **2014–15** ஆம் நிதியாண்டில் முழுமையடையும்.

### 6.6.6 குறுவட்ட அளவர்களுக்கு மடிக்கணினி மற்றும் சிம் கார்டு வழங்கல்

**2013–14** ஆம் ஆண்டில் சட்டமன்றத்தில் வருவாய் மானியக் கோரிக்கையின்போது வெளியிட்ட அறிவிப்பிற்கிணங்க, கணினி மயமாக்கப்பட்ட புலப்படங்களை பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்காகவும், இணையவழி சேவை மூலம் நிலப்பதிவுருக்களை நிர்வகிக்க ஏதுவாகவும், **300** குறுவட்ட அளவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. மடிக்கணினிகளை பயன்படுத்துதல் குறித்தும், இணையவழியில் நிலப்பதிவுருக்களை மேம்படுத்துதல் குறித்தும் குறுவட்ட அளவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் பட்டா மாறுதல் சம்பந்தமான பணிகளில் தகவல் பரிமாற்றங்களை எளிதாக்கவும், பட்டா மாறுதல் விண்ணப்பங்களின் மீதான நடவடிக்கைகளை மிக நெருக்கமாக கண்காணிக்கவும், குறுவட்ட அளவர்களுக்கும்

இத்துறை அலுவலர்களுக்கும் CUG திட்டத்தின் கீழ் சிம் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

**6.7 தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கல் திட்டம்**

நில ஆவணங்களைக் கணினிமயமாக்கும் திட்டம் மற்றும் ‘வருவாய் நிருவாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் நில ஆவணங்களை மேம்படுத்துதல் திட்டம்’ ஆகியவை **1988** முதல் **2007** ஆம் வருடம் வரை செயல்படுத்தப்பட்டு வந்தன. **2008** ஆம் வருடம் மேற்காணும் இரு திட்டங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு ‘தேசிய நில ஆவண நவீன மயமாக்கல் திட்டம்’ **(NLRMP)** உருவாக்கப்பட்டது.

**தேசிய நில ஆவண நவீனமயமாக்கும் திட்டத்தின் (NLRMP) மூன்று முக்கிய கூறுகள்**

(அ) நில ஆவணங்களைக் கணினிப்படுத்துதல்

(ஆ) நில அளவை /மறு நில அளவை

(இ) பதிவுத்துறைப்பதிவுகளைக் கணினிப்படுத்துதல்

மேற்காணும் அனைத்துத் திட்ட நடவடிக்கைகளும் மாவட்ட அளவில் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும்.

## அட்டவணை–6.4 தேசிய நில ஆவணங்களை நவீன மயமாக்கும் திட்டப்பணிகள் மற்றும் நிதி ஒப்பளிப்பு விவரங்கள்

| நிதியாண்டு | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | பயன்பாடு |
|---|---|---|
| 2012–13 | 438.64 | (1) காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள 21 வட்டங்களில் நில ஆவண மேலாண்மை மையங்களை ஏற்படுத்துதல்.<br>(2) காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் நில ஆவணங்களை கணினிப்படுத்துதல்.<br>(3) ஒரத்தநாடு நில அளவைப் பயிற்சி நிலையத்தில் ‘NLRMP Cell’ ஏற்படுத்துதல். |
| 2013–14 | 1359.50 | (1) 57 வட்டங்களில் நில ஆவண மேலாண்மை மையங்களை ஏற்படுத்துதல்.<br>(2) 30 மாவட்டங்களில் நில ஆவணங்களைக் கணினிப்படுத்துதல்.<br>(3) அலுவலகங்களுக்கிடையே குறும்பரப்பு வலையமைப்பு (Local Area Network) மூலம் இணைப்பு ஏற்படுத்துதல்.<br>(4) புதிதாக உருவாக்கப்பட்டுள்ள வட்ட அலுவலகங்கள் / வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் / மாவட்ட ஆட்சியரகங்களுக்கு கணினிகள் வழங்குதல்.<br>(5) நில ஆவணங்களுக்கென மாநில அளவிலான தகவல் மையம் அமைத்தல்.<br>(6) தமிழ்நாடு NLRMP செயலாக்கக் கூட்டமைப்பிற்கு (NIST) அலுவலகம் ஏற்படுத்துதல். |

### 6.7.1 நில ஆவண மேலாண்மை மையங்கள்

பொது மக்களுக்குத் தேவையான அனைத்து சேவைகளையும் ஒற்றைச் சாளரம் மூலம் வட்ட அலுவலகங்களில் வழங்க நில ஆவண மேலாண்மை மையங்கள் (Land Records Management Centre) தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு வருகின்றன. இதுவரை காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள 10 வட்டங்களில் (காஞ்சிபுரத்தில் ஐந்தும், திருநெல்வேலியில் ஐந்தும்) இம்மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களுக்கு கணினி மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் ஆவண பராமரிப்புப் பகுதி, அலுவலக செயல்பாட்டுப் பகுதி மற்றும் பொதுமக்கள் சேவைப்பகுதியுடன் வரவேற்பு மற்றும் காத்திருப்பு வசதிகள் ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த மையங்கள் வட்ட அலுவலகங்களில் பொதுமக்களுக்குத் தேவையான அனைத்து சான்றிதழ்களையும் கணினி மூலம் வழங்குவதற்கும் நில ஆவணங்களை பாதுகாக்கவும் பயன்படுத்தப்படும்.

### 6.7.2 திட்ட செயலாக்க மையம் (Project Implementation Cell)

இத்துறையில் தொழில்நுட்பக்கல்வித் தகுதி மற்றும் அனுபவம் வாய்ந்த பணியாளர்களைக் கொண்டு இவ்வியக்ககத்தில் திட்ட செயலாக்க மையம் ஒன்றினை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்துறையில் கணினி, புலவரைபடம் வரைதல் மற்றும் நவீன நில அளவை ஆகியவற்றில் அனுபவமுள்ள அலுவலர்களைத் தேர்ந்தெடுத்து உரிய பயிற்சி அளித்து தேசிய நில ஆவணங்களை நவீனப்படுத்தும் திட்டங்களை செயல்படுத்தவும், இத்துறையின் வளர்ச்சியை மேம்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 6.8 பயிற்சி மையங்கள்

#### (அ) நில அளவை பயிற்சி நிலையம், ஒரத்தநாடு

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டிலுள்ள தமிழ்நாடு நில அளவை பயிற்சி நிலையம் இந்நாட்டின் முன்னோடி நில அளவை பயிற்சி நிலையங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இந்நிலையம் துவக்கப்பட்டதிலிருந்து, இதுவரை இந்திய ஆட்சிப்பணியின் தகுதிகாண் பருவத்தினர், நீதிபதிகள், தகுதிகாண் பருவ துணை ஆட்சியர்கள், வருவாய் மற்றும் வனத்துறை அலுவலர்கள் என பல்துறையைச் சார்ந்த **15,272**

அலுவலர்களுக்கு இங்கு நில அளவைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 20 கணினிகள், நவீன கருவிகளான ஜி.பி.எஸ் (Global Positioning System), எலக்ட்ரானிக் டோட்டல் ஸ்டேஷன் கருவிகள், பிளாட்டர்கள், ஸ்கேனர்கள் போன்றவை அமைந்த கணினிமையமொன்று இப்பயிற்சி நிலையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பதிவறை மற்றும் நூலகம் கட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இப்பணி 2014–15 ஆம் நிதியாண்டில் முழுமையடையும்.

**(ஆ) நில அளவை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் (C-STAR)**

நவீன நில அளவை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் (C-STAR) சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் (தொலையுணர்வு நிலையத்தில்) 2003 ஆம் ஆண்டில் அரசால் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் தமிழக அரசு ஆகியவற்றிற்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டவொரு செயற்குழுவின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது. ஜி.பி.எஸ். (Global Positioning System) மற்றும் ‘எலக்ட்ரானிக் டோட்டல் ஸ்டேஷன்’ கருவிகள் ஆகியவற்றைக் கொண்டு நில அளவை செய்வதற்கு இத்துறையில் பணியாளர்களுக்கு

இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை 2,706 அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### 6.9 2014–15 ஆம் நிதியாண்டுக்கான திட்டப் பணிகள் மற்றும் செயல் திட்டங்கள்

#### 6.9.1 இணையம் சார்ந்த மென்பொருளின் செயலாக்கம்

இணையவழியில் நில ஆவணங்களை நிர்வகிப்பதன் பொருட்டு, தேசிய தகவல் மையம், இணையம் சார்ந்த மென்பொருளை உருவாக்கியுள்ளது. இம்மென்பொருள் அனைத்து வட்ட அலுவலகங்களிலும் தற்பொழுது நடைமுறையில் உள்ள பட்டா மாறுதல் பணித்தொடர் (work flow) முறையைப் போன்ற அமைப்பினை உடையது. இம்மென்பொருளில் கிராம நிருவாக அலுவலர் முதல் வருவாய்த்துறையின் வட்டாட்சியர் வரையிலும், வட்ட அலுவலகங்களில் உள்ள நில அளவைப் பிரிவில் பணிபுரியும் குறுவட்ட அளவர் முதல் துணை ஆய்வாளர் வரையிலான அனைத்து அலுவலர்களின் பயனர் பொறுப்புகள் (user roles) சீரிய முறையில் வரையறுக்கப்பட்டுள்ளன. நிலப்பதிவுருக்களை நிகழ்நிலைபடுத்த / மாறுதல் செய்ய, ஒவ்வொரு அலுவலரும் தனக்கென பிரத்யேகமாக வழங்கப்பட்ட கடவுச் சொல்லை (Password) பயன்படுத்தி மத்திய சேவைக் கணினியில்

இணைந்து பணிபுரிய வேண்டும். வட்டாட்சியர், துணை வட்டாட்சியர் ஆகியோர் கணினி மூலம் இலக்க முறை ஒப்பத்தைப் பயன்படுத்தி மின்னணு கையொப்பமிட்ட (Electronic Signature) பட்டா / சிட்டா நகல்களை அங்கீகரிப்பார். இதன் பொருட்டு, சென்னை அருகில் பெருங்குடியிலுள்ள மாநில தகவல் மையத்தில் 4 சேவைக் கணினிகள் (Application Servers–2) (Database Servers–2) நிறுவப்பட்டுள்ளன. இத்திட்டம் ஆரம்ப கட்டமாக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீரங்கம் வட்டம் மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பெரம்பலூர் வட்டம் ஆகிய இரு வட்டங்களில் சோதனை அடிப்படையில் நடைமுறைபடுத்தப்படவுள்ளது. வெற்றிகரமாக நடைமுறை படுத்தப்பட்டபின் இது இதர வட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

### 6.9.2 மேலும் 300 குறுவட்ட அளவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்

**2013–14** ஆம் ஆண்டில் சட்டமன்றத்தில் வருவாய்த் துறை மானியக்கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, **300** குறுவட்ட அளவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டன. இணையம் சார்ந்த மென்பொருளைக் கொண்டு நில ஆவணங்களை

நிருவகிக்கும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதை கருத்திற்கொண்டு, இத்திட்டத்தை விரிவுபடுத்தி, மேலும் 300 குறுவட்ட அளவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்படவுள்ளன.

## 6.10 நிலவரித்திட்டம்

தொன்றுதொட்டு இருந்து வரும் வழக்கமாக நிலஉடைமையாளர்களிடமிருந்து, நிலத்தின் விளைச்சலில் ஒரு பகுதியை அரசுக்குரிய பாகமாக பெறும் உரிமை இருந்து வந்துள்ளது. இதற்குரிய பரிமாற்ற பணமதிப்பை 'நிலவரி' என்றும் இதனை கணக்கிடும் முறை 'வருவாய் நிலவரித்திட்டம்' என்றும் அழைக்கப்படுகிறது. இரயத்துவாரி நிலவரித் திட்டத்தின்கீழ் மண்ணின் கட்டமைப்பு, மண்ணின் பண்புகளுக்கேற்ப தரம் மற்றும் வகைகளாக பிரித்தல் மற்றும் மண்ணின் விளைவிக்கும் திறனை பாதிக்கக்கூடிய இதர காரணிகள் ஆகியவைகளின் அடிப்படையில் "நிலவரி" நிர்ணயம் செய்யப்படுகிறது.

ஆங்கிலேயர்கள் காலத்தில், குடியானவர்களிடமிருந்து ஜமீன்தாரர்கள் மற்றும் இனாம்தாரர்கள் நிலவரியை அதிகமான அளவில் வசூலித்ததாலும் மண்ணின்

விளைவிக்கும் திறன் அடிப்படையில் வரி நிர்ணயிக்கப்படாததாலும், குடியானவர்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியிருந்தார்கள். நிலவரிச் சுமையை குறைப்பதற்காகவும் குடியானவர்களிடம் இருந்து அரசே நேரடியாக வசூலிப்பதற்காகவும் இரயத்துவாரி நிலவரித்திட்ட முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை நடைமுறைபடுத்துவதற்காக, பல இடைத்தரகர்கள் ஒழிப்பு சட்டங்கள் இயற்றப்பட்டன.

- ❖ தமிழ்நாடு எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரியாக மாற்றல்) சட்டம் 1948 (தமிழ்நாடு சட்டம் XXVI/1948)
- ❖ தமிழ்நாடு இனாம் எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரியாக மாற்றல்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963)
- ❖ தமிழ்நாடு குத்தகை உடைமை (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரியாக மாற்றல்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 27/1963)
- ❖ தமிழ்நாடு சிறு இனாம்கள் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரியாக மாற்றல்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963)

- ❖ தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரியாக மாற்றல்) சட்டம் 1969 (தமிழ்நாடு சட்டம் 24/1969)
- ❖ தமிழ்நாடு வரியில்லா நிலங்களில் வரி விதித்தல் சட்டம் 1972 (தமிழ்நாடு சட்டம் 31/1973)
- ❖ தமிழ்நாடு (மாற்றப்பட்ட பகுதி) இரயத்துவாரி நிலவரித்திட்ட சட்டம் 1964 (தமிழ்நாடு சட்டம் 30/1964)

தமிழ்நாடு சட்டம் 26/63 இன் கீழ் வரும் 10 எஸ்டேட்டுகள் மற்றும் தமிழ்நாடு சட்டம் 30/63 இன் கீழ் வரும் 5 கிராமங்களையும் தவிர இதர அனைத்து பகுதிகளிலும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் தமிழ்நாடு சட்டம் 24/69 இன் கீழ் நீலகிரி மாவட்டம் ஜென்மம் நிலங்களில் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**நிலவரித்திட்ட சட்டங்களின் கீழ் பணிகள் நிலுவையிலுள்ள விவரங்கள் பின்வருமாறு:**

**I. தமிழ்நாடு இனாம் எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரியாக மாற்றல்) சட்டம், 1963 (தமிழ் நாடு சட்டம் 26/1963)**

தமிழ்நாட்டில் உள்ள இனாம் எஸ்டேட்டுகளில் இருந்த நில உடமையாளர்களின் உரிமையைக் கைப்பற்றவும், அந்த எஸ்டேட்டுகளில் இரயத்துவாரி நிலவரித்திட்டத்தினை அறிமுகப்படுத்தவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது. அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்தம் **2,125** எஸ்டேட்டுகளில் **2,115** எஸ்டேட்டுகளில் நிலவரித் திட்டப்பணி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள **10** எஸ்டேட்டுகளில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

| வ. எண் | கிராமத்தின் பெயர் | வட்டம் மற்றும் மாவட்டம் |
|---|---|---|
| 1 | அரையபுரம் தட்டிமால் படுகை | பாபநாசம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் |
| 2 | சூரியநாராயணபுரம் | பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் |
| 3 | இராமச்சந்திரன் கோயில்பத்து | தரங்கம்பாடி வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம் |
| 4 | கழனிவாய்ப்பட்டி | திருமயம் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம் |
| 5 | சென்னசந்திரம் | ஒசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 6 | திம்மசந்திரம் | |
| 7 | உளியாளம் | |
| 8 | பைரசந்திரம் | ஒசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 9 | இளையசந்திரம் | |
| 10 | மாரசந்திரம் | |

## II. தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரியாக மாற்றல்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963)

தமிழ்நாட்டில் உள்ள சிறு இனாம்தாரர்களின் உரிமையை அரசு கைப்பற்றி அவற்றில் இரயத்துவாரி நிலவரித்திட்டத்தினை அறிமுகப்படுத்த இச்சட்டம் வழி வகை செய்கிறது. இச்சட்டத்தின் கீழ் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த உரிமைப் பட்டயங்களின் எண்ணிக்கை 1,37,038 ஆகும். இதில் 1,37,033 பட்டயங்களின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட கிராமங்களில் நிலவரித்திட்டப் பணி முடிக்கப்பட்டு மீதமுள்ள கீழ்க்காணும் 5 உரிமைப் பட்டயங்கள் அடங்கிய கிராமங்களில் நிலவரித் திட்டப்பணி நடைபெற்று வருகிறது.

| வ. எண் | கிராமத்தின் பெயர் | வட்டம் மற்றும் மாவட்டம் |
|---|---|---|
| 1 | காரணப்பட்டி | இலுப்பூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம் |
| 2 | கோதண்டராமபுரம் | இலுப்பூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம் |
| 3 | நிலையப்பட்டி | இலுப்பூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம் |
| 4 | அகஸ்தியம்பள்ளி | வேதாரண்யம் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம் |
| 5 | தாரிக்கொம்பன் | இளையான்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம் |

## III. தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரியாக மாற்றல்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 24/1969)

நீலகிரி மாவட்டம், கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்களில் ஜென்மம் எஸ்டேட்டுகளில் ஜென்மிகளுக்கு இருந்த உரிமையை கைப்பற்றி அவ்வுடமைகளில் இரயத்துவாரி நிலவரித்திட்டத்தினை அறிமுகப்படுத்த இச்சட்டம் வழிவகை செய்கிறது. இச்சட்டத்தை இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 9 வது அட்டவணையில் சேர்க்கப்பட்டதை எதிர்த்து, சில குத்தகைதாரர்கள் மற்றும் ஜென்மிகள் புதுடெல்லி உச்சநீதிமன்றத்தில் உரிமையியல் மேல்முறையீடு வழக்குகள் மற்றும் மனுக்கள் தாக்கல் செய்தனர். இறுதியாக உச்சநீதிமன்றம் அரசுக்கு சாதகமாக உத்தரவிட்டது.

இச்சட்டத்தின் கீழ் ஜென்மம் நிலங்களில் உள்ள மொத்த விஸ்தீரணம் **80,087.74** ஏக்கர் நிலத்தில் ஆரம்ப கட்டத்தில் **28,087.03** ஏக்கர் பரப்பில் நிலவரித்திட்டப் பணி முடிக்கப்பட்டது. அதன் பின் பிரிவு **53**ன் கீழ் **17,014.43** ஏக்கர் பரப்பு வனமாக அறிவிக்கப்பட்டது. அரசாணை (நிலை) எண்.**363**, வருவாய்[நி.அ.(1)]துறை, நாள் **28.11.2011** இன்படி **11,204.47** ஏக்கர் பரப்பு வனத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டது.

வனநிலமாக அறிவிக்கப்பட்ட நிலங்களில் **5,809.96** ஏக்கர் பரப்பு நீதிமன்ற வழக்குகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

நிலவரித்திட்டம் அமல்படுத்தப்படவேண்டிய **34,986.28** ஏக்கர் நிலம் தொடர்பாக, உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்த மனுதாரர்களிடமிருந்து மனுக்களைப் பெற உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து நிலவரித்திட்ட அலுவலரால் (கூடலூர் ஜென்மம் நிலங்கள்) **546** மனுக்கள் பெறப்பட்டு **377** மனுக்களில் அரசுக்கு சாதகமாக முடிவு செய்யப்பட்டுள்ளது. நிலவரித்திட்ட அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை எதிர்த்து மனுதாரர்களால் ஜென்மம் ஒழிப்பு தீர்ப்பாயத்தில் வழக்குகள் தொடரப்பட்டு நிலுவையில் உள்ளன.

இச்சட்டம் பிரிவு 17 க்கு விதிகள் அமைக்கப்பட்ட பின்னரும் மற்றும் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர் / இயக்குநருக்கான அதிகாரங்களை நிலவரித்திட்ட அலுவலருக்கு (கூடலூர் ஜென்மம் நிலங்கள்) பகிர்ந்தளிக்கப்பட்ட பின்னரும் மீதமுள்ள ஜென்மம் நிலங்களில் நிலவரித்திட்டப் பணிகள் முடிவு செய்யப்படும்.

### 6.10.1 திட்டங்கள்

**(அ) நத்தம் நிலவரித்திட்டம்**

நத்தம் பகுதிகள் மற்றும் வேளாண்மைக்கு அல்லாத இதர காரணங்களுக்கு பயன்படுத்தப்படும் வேளாண்மை நிலங்களில் நத்தம் நிலவரித்திட்டம் செயல்படுத்த அறிவிக்கை வெளியிடப்பட்டு, அதன்படி **1999** ஆம் ஆண்டு வரையில் நீலகிரி மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் தாம்பரம் வட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் அம்பத்தூர் வட்டம் மற்றும் சென்னை மாவட்டங்களைத் தவிர இதர அனைத்து மாவட்டங்களில் இப்பணி முடிக்கப்பட்டது.

**2007** இல் நீலகிரி மாவட்டம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தாம்பரம் வட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் அம்பத்தூர் வட்டங்களில் இப்பணி தொடங்கப்பட்டுள்ளது. மேலும் சென்னை மாவட்டத்தில் சேர்க்கப்பட்ட **31** கிராமங்களிலும் இப்பணி தொடங்கப்பட்டுள்ளது. இப்பணி தாம்பரம் வட்டம் மற்றும் சென்னை மாவட்டத்தில் சேர்க்கப்பட்ட கிராமங்களில் முடிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் **75,271** பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**(ஆ) மலைக் கிராமங்களில் வருவாய் பின் தொடர் பணி**

மாநில முழுவதிலுமுள்ள **67** மலைக் கிராமங்களில் வருவாய் பின் தொடர் பணி தொடர ஆணையிடப்பட்டுள்ளது. **60** கிராமங்களில் இப்பணி முடிக்கப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், பச்சமலை கிராமத்தில் விவசாய நிலங்களுக்கு பட்டா வழங்கும் பணி முடிவுற்று நத்தம் பகுதிகளில் பட்டா வழங்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

கோயமுத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், ஆனைமலை மலைக்கிராமம் நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை வட்டத்திலுள்ள **4** மலைக்கிராமங்கள் வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஏலகிரி மலைக் கிராமங்களில் இப்பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**(இ) நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் வருவாய் பின் தொடர் பணி**

மாநிலத்தில் உள்ள அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் (சென்னை பழைய நகரம் தவிர) வருவாய் ஆவணங்களின் பதிவுகளை இன்றைய நிலையில் மேம்படுத்தவும் நிலஉடமைதாரர்களுக்கு பட்டா வழங்கவும் ஆவணங்கள் தயார் செய்து மாவட்ட வருவாய் நிருவாகத்தின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கவும் வருவாய் பின் தொடர்பணி தொடங்க உத்திரவிடப்பட்டது.

இப்பணிகளுக்காக அரசு 64 தனி வட்டாட்சியர் பணியிடங்களையும் 128 வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலையில்) பணியிடங்களையும் ஒப்பளிப்பு செய்துள்ளது. மேலும் நகர நிலஅளவையின்கீழ் இறுதி தணிக்கை பணிக்காக ஒப்பளிக்கப்பட்ட 14 தனி வட்டாட்சியர் பணியிடங்களும் இப்பணிக்காக உபயோகப்படுத்தப் படுகிறது.

மொத்தமுள்ள 78 வட்டாட்சியர் பணியிடங்களில் 4 பணியிடங்கள் நத்தம் நிலவரித்திட்டப் பணிகளுக்காகவும் மீதமுள்ள 74 பணியிடங்கள்/ அலகுகள், வருவாய் பின் தொடர் பணிக்காகவும் ஈடுபடுத்தப்படுகின்றன. மொத்தமுள்ள 124 நகராட்சிகள் மற்றும் 12 மாநகராட்சிகளில், இப்பணி 7 நகராட்சிகளில் முடிக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பணி 5 மாநகராட்சிகளில் 8 அலகுகளிலும் 66 நகராட்சிகளிலும் நடைபெற்று வருகிறது. இந்த 74 அலகுகளிலும் பணி முடிக்கப்பட்டவுடன் மீதமுள்ள 7 மாநகராட்சிகள் மற்றும் 75 நகராட்சிகளுக்கு மேற்படி பணியிடங்கள் மாற்றப்படும். இத்திட்டத்தின்கீழ் இதுவரையில் 2,86,623 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 6.10.2 வக்ஃப் சொத்து கணக்கெடுப்புப் பணி

வக்ஃப் சட்டம் 1995 (மத்திய சட்டம் 43/1995) இன் பிரிவு 4 இன் கீழ் வக்ஃப் சொத்து கணக்கெடுப்பு பணிகளுக்காக நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையரை வக்ஃப்

கணக்கெடுப்பு ஆணையராகவும், அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்களை வக்ஃப் கணக்கெடுப்பு கூடுதல் ஆணையர்களாகவும் அனைத்து வட்டாட்சியர்களை வக்ஃப் கணக்கெடுப்பு உதவி ஆணையர்களாகவும் அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி வக்ஃப் சொத்துக்கள் கணக்கெடுக்கும் பணி மாநிலம் முழுவதும் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரின் கட்டுப்பாட்டிலும் மேற்பார்வையிலும் வக்ஃப் கூடுதல் ஆணையர்களாக நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட வருவாய் அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 7. முடிவுரை

வருவாய்த் துறையானது பன்முக திட்டங்களுடனும் மற்றும் பொறுப்புகளுடனும் மாநில நிருவாகத்தின் முதுகெலும்பாகத் திகழ்கிறது. மாவட்ட நிருவாகத்தை நிருவகிப்பது கிராம நிருவாக அலுவலர் முதல் மாவட்ட ஆட்சியர் வரை என்பது சமுதாயத்திற்கு தெரிந்தது. சாதிச் சான்றிதழ் வழங்குதல், பட்டா வழங்குதல், பேரிடர் நிவாரணம் மற்றும் தேர்தல் நடத்துதல் போன்ற பொறுப்புகளுடன் கூடிய நடவடிக்கைகளால் இத்துறையானது பொதுமக்களின் அன்றாட வாழ்வில் தொடர்பு கொண்டுள்ளது. வருவாய்த் துறையின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமூக பாதுகாப்புத்திட்டம், பேரிடர் குறித்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், நிலஅளவைப் பிரிவினை மேம்படுத்துதல், உட்கட்டமைப்புகளை விரிவுபடுத்துதல் போன்றவற்றிற்காக தாராளமான நிதியுதவிகளை வருவாய்த் துறைக்கு அளித்துள்ளார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உயரிய நோக்கத்துடன் கூடிய வழிகாட்டுதலின் பேரில் பல்வேறு திட்டங்களுக்கும், பன்மடங்கான உட்கட்டமைப்பு திட்டங்களுக்கும், நிதி ஒதுக்கீடு செய்வதன் மூலம் கடந்த

மூன்றாண்டு காலம் வருவாய்த்துறையின் பொற்காலமாக இருந்து வருகிறது. மேலும், மாண்புமிகு முதலமைச்சரின் உரிய வழிகாட்டுதலின் பேரில் பொதுமக்கள் மென்மேலும் பயனடையும் வகையில் மக்கள் நலத்திட்ட நடைமுறையினை எளிமைப்படுத்தி நிருவாகத்தை மக்களிடையே நெருக்கமாக கொண்டு சென்று ஏழை, எளிய மக்களின் துயரங்களைக் களைந்து அவர்களின் குறைகளை முடிந்தளவிற்கு மிகக் குறுகிய காலத்தில் நிவர்த்தி செய்ய வருவாய்த்துறை தனது பணியினை முழுமையாக மேற்கொண்டு வருகிறது.

**ஆர்.பி. உதயகுமார்**
வருவாய்த் துறை அமைச்சர்



Best Practices Award
2013

Revenue Administration, Disaster Management and Mitigation Department has been awarded with the 'Best Practices Award for Improvement of Quality Delivery System Ensuring Good Governance' by the Hon'ble Chief Minister of Tamil Nadu during the Independence Day Celebrations on 15th August 2013.

Chennai-600 009
Dated 15-08-2013

Chief Secretary
Government of Tamil Nadu

அம்மா திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திய வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறைக்கு, மாண்புமிகு முதலமைச்சரின் மிகச் சிறந்த ஆளுமைக்கான விருது **(Best Practices Award for improvement of Quality Delivery System Ensuring Good Governance)** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், வருவாய்த் துறை செயலர் ஆகியோருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.08.2013 அன்று சுதந்திர தின விழாவில் வழங்கப்பட்டது.




தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக கட்டடம் மாதிரி
(கட்டடப் பணி நடைபெற்று வருகிறது)




வட்டாட்சியர் அலுவலகம், நாங்குநேரி
திருநெல்வேலி மாவட்டம்




வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு, குளத்தூர்
தூத்துக்குடி மாவட்டம்



குறுவட்ட அளவர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு,
திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **8.7.2014** அன்று, சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற காஞ்சிபுரம் மாவட்டம் மவுலிவாக்கம் அடுக்குமாடிக் கட்டட விபத்து மீட்புப் பணியில் ஈடுபட்டோருக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கி சிறப்புரையாற்றினார்கள்.